
செப்டம்பர் 2016
Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/133/News/2016

# சோதிட கேசரி

ISSN 2012-5143
மலர்: 9 இதழ்: 06

புரட்டாதி மாத இதழ்



துர்க்காஷ்டமி மகிமை!

வியாபாரம் பெருக ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாமம்!

நலம் தரும் நவராத்திரி விரதம்

யாக குண்டத்தில் எலும்புக்கூடு!

## திருப்பதியில் பிரம்மோற்சவ விழா!



JEYECHANDRANS
The Art of Fashion
Wellawatte / Pettah
முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்

433, காலி வீதி, வெள்ளவத்தை
011 - 4528435, 011 - 4528438
Skype: jeyechandrans888

194, மெயின் வீதி, கொழும்பு - 11
011 - 2448870, 011 - 2448860
Skype: jeyechandrans888

Web : www.jeyechandrans.com

ஹரே கிருஷ்ணா

# இலங்கை மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

## கொழும்பு மாநகரில் அதி அற்புத ஆலயம்



"பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு அமைக்கப்படும் ஆலய திருப்பணியை ஆரம்பிக்கும் அல்லது அதில் பங்கு கொள்ளும் பக்தரின் ஏழு பிறப்பிற்குரிய பாவங்களும் நீக்கப்படுவதுடன் அவரின் மூதாதையரும் நரகலோகத்திலிருந்து மீட்சி பெறுவர்" என ஸ்கந்த புராணம் கூறுகிறது.

ஆலயத் திருப்பணி வேலைகளுக்காக 10 கோடி ரூபாவுக்கு மேல் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் அரைவாசி வேலைகள் முடிந்த நிலையில், நீங்களும் பகவான் கிருஷ்ணரின் ஆலயத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன் வந்து பங்கு கொண்டு பிறவிப் பயனை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.



▲ நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

நன்கொடைகளை ஹட்டன் நெஷனல் வங்கியில் அல்லது கொமர்ஷல் வங்கியில் பணத்தை வைப்புச் செய்யலாம்.

Commercial Bank - Kotahena
A/C Name : ISKCON - Temple Fund
A/C No : 1120017042

Hatton National Bank - Kotahena
A/C Name : ISKCON
A/C No : 207010000891

### சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம் - இலங்கை

ஸ்தாபக ஆச்சாரியார் : அருட்திரு அ. ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா

### ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம்

இல. 188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு - 13.
தொ : 011 2433325 | மின்னஞ்சல் : iskcon@slt.lk

www.iskcon.lk



பக்திவேதாந்த சிறுவர் இல்லம் "கோகுலம்" சிறுவர்களுக்கு அன்பும் அரவணைப்பும் நல்வாழ்வும் அளிக்கும் கருணை இல்லமாக இயங்கி வருகிறது. இவர்களுக்கு சிறந்த கல்வியும் நற்பழக்கவழக்கங்களையும் கற்பிக்கக்கூடிய வகையில் இந்த இல்லத்துடன் இணைந்த பாடசாலையும் இங்கு உண்டு. தங்களின் அல்லது தங்களின் பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம்,தங்களின் திருமண நாள் உறவினர்களின் ஞாபகார்த்தம் பேன்ற எந்த தினங்களிலும் நன்கொடைகளை வழங்கி இச் சிறுவர்களுக்கு உதவலாம்.

தற்போதய சூழ்நிலையில் அவர்களை பராமரிக்க
ஒரு நாளைக்கு **ரூபா 25,000/-** செலவாகிறது.

கருணை இல்லமாக விளங்கும்
பக்தி வேதாந்த சிறுவர் இல்லம்

## கோகுலம்

Commercial Bank
A/C Name - ISKCON

A/C Number - 1050669901
Shift Code - CCEYLKLX

**GOKULAM** No. 607A, Negombo Road, Mabola, Wattala. Tel: 011 2948398 Web: www.iskcon.lk

**OFFICE** No. 188, New Chetty Street, Colombo 13. Tel: 011 2433325 E-mail: iskcon@slt.lk

சோதிடகேசரி
SOTHIDA KESARI
*Astrological Magazine - Tamil*
மலர்: 9 | இதழ்: 6



# உலக இன்பங்கள் நிரந்தரமற்றது!

இந்த உலகில் இன்பங்களை தரக்கூடிய விடயங்கள் அனைத்தும் அநித்தியமானதே என்பதை ஒவ்வொரு மனித ஜீவனும் உள்ளபடியே உணர்ந்திடல் வேண்டும். இறைவன் மீது அசாத்திய அன்பு கொண்ட ஒரு மகான் கூறும் போது "நீங்கள் இறைவன் மீது உண்மையான அன்பைச் செலுத்திப் பாருங்கள். அதனால் எப்போதும் உங்களுக்கு மன நிறைவும் மகிழ்ச்சியும் மட்டுமே உண்டாகும். அதே அன்பை உங்களுக்கு நெருங்கிய உறவினர்கள் மீதும், நண்பர்கள் மீதும் வைத்துப் பாருங்கள். அதனால் விளைவது அனைத்தும் இறுதியில் துன்பமாகவே இருக்கும் என்பதை உணர்வீர்கள்" என்று கூறுகின்றார். எனவே ஒருவர் இறைவன் மீது வைக்கின்ற அன்பானது எந்தக் காலத்தும் துன்பத்தை தருவதில்லை. அதே சமயம் அஞ்ஞான இருள் சூழ்ந்த மாயையின் காரணமாக உடலின் மீதும் உலக பற்றின் மீதும் ஓயாத மனம் கொண்டிருந்தால் நாம் இறைவனை விட்டு வெகு தூரம் சென்று விடுவோம். இறைவனுக்கும் எமக்கும் இடையிலேயே இருக்கின்ற தூரமானது அகலப்படுத்தப்படுவது நாம் கொண்டிருக்கும் பல்வேறு விதமான ஆசைகளாலும் அபிலாசைகளாலும் தான்.

மனித உறவுகள் எல்லாமும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டவை, அவை ஒரு சமயத்தில் எம்மை விட்டு நீங்கக் கூடியதாகும். நமக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள உறவுதான் எல்லையற்றதாகவும் நீங்காத இயல்புடையதாகவும் இருக்கும். உலகத்தில் நாம் காண்கின்ற எல்லா இன்பங்களும் துன்பம் கலந்ததாகவே இருக்கும். இறையருளின் மூலமாக நமக்கு கிடைக்கும் இன்பம் மட்டுமே துன்பம் கலவாத பேரின்பமாக போற்றப்படுகின்றது.

இம்மாத இதழில், கலியுக வைகுண்டமாம் திருப்பதியில் பிரமோற்சவ விழா, மரகதம் போல் ஜொலித்தான் மாதவன், புரட்டாதி மாதத்து சுப தினங்கள், உயிரோவியங்களாய் காட்சி தரும் ஆலய சிற்பங்கள், கீதை ஒரு வற்றாத ஆன்மீக சுரங்கம், ராகு தோஷ நிவர்த்தித் தலமாய் திருநாகேஸ்வரம், சடையப்ப சுவாமிகளின் பாலப்பருவம், பாப நிவர்த்தி அளிக்கும் தீப தரிசனம், தாயும் ஆனார் கருணாசாகரன் ஆகிய கருத்துச் செறிவுள்ள கட்டுரைகள் பலவும் புரட்டாதி மாதத்திற்கான பன்னிரண்டு ராசிகளுக்கான பலன்களும் எமது அன்பு வாசகர்களுக்கு காணிக்கையாகின்றன.

◂◂ ஆசிரியர்

## துர்முகி வருடம் புரட்டாதி மாதம் 17.09.2016 முதல் 16.10.2016 வரை

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் | | | |
| கேது | **ராசி**<br>20.09.2016 துலா சுக்கிரன்<br>26.09.2016 கன்னி புதன்<br>15.10.2016 விருச்சிக சுக்கிரன் | | |
| | | | ல / புதன் ராகு |
| செவ்வாய் | சனி | | சூரியன் ராகு சுக்கிரன் |

| | | | |
|---|---|---|---|
| குரு | | ல / செவ்வாய் | |
| சூரியன் கேது | **அம்சம்**<br>20.09.2016 மேச குரு<br>6.10.2016 ரிசப குரு<br>15.09.2016 சிம்ம ராகு<br>15.09.2016 கும்ப கேது | | சந்திரன் |
| | | | புதன் சுக்கிரன் ராகு |
| | | சனி | |

Publisher : Express Newspaper (Ceylon) Limited
185, Grandpass Road, Colombo - 14.
Tel. : +91 115 322700 (30 Lines) Fax: +94 112 439987
Website: www.virakesari.lk



# ஏழுமலையானை தரிசிக்க

## புரட்டாசி சனிக்கிழமை உகந்தது!

திருமலைக்குச் சென்று புரட்டாதி சனிக்கிழமைகளில் ஏழுமலையானை தரிசிப்பது சிறப்பானதாக கருதப்படுகின்றது. திருப்பதிக்குச் செல்ல முடியாதவர்கள் உள்ளூரிலேயே உள்ள பெருமாள் கோயில்களுக்கு வழிபாடுகள் செய்யலாம். அத்துடன் வெங்கடாஜலபதி திருவுருவப் படத்தை வைத்து வீட்டிலேயே வழிபட்டு வரலாம். இவ்விதமான வழிபாடுகளில் "வெங்கடேச அஷ்டகம்" சொல்லி பூஜை செய்வதும், துளசி தளங்களால் அர்ச்சனை செய்வதும், சுத்தமான நெய் கொண்டு மாவிளக்கு ஏற்றுவதும் மிகவும் விசேடமானதாக கொள்ளப்படுகின்றது. புரட்டாதி மாதத்தில் மேற்கொள்ளப்படும் இந்த வழிபாடானது வறுமையை நீங்கச் செய்து செல்வச் செழிப்பை ஏற்படுத்தும் என்பது நம்பிக்கை.

சீனிவாச பக்தர்கள், திருப்பதி வெங்கடாஜலபதிக்கு உகந்த நாளாக சனிக்கிழமையை கொண்டாடுகின்றார்கள். அதிலும் புரட்டாதி மாதத்தில் வருகின்ற சனிக்கிழமைகளை ஏழுமலையானை மனமார நினைந்து வணங்குதற்குரிய நாளாக போற்றுகின்றார்கள். புரட்டாதி சனிக்கிழமைகளில் வெங்கடாஜலபதியை நினைந்து விரதமிருந்து வழிபட்டால் சிறப்பான வரங்களை அவர் பக்தர்களுக்கு அளித்து வருடம் முழுவதும் துன்பங்களை அகற்றி ஆனந்தம் பெருகச் செய்து வாழ வைப்பார் என்பது நம்பிக்கை.

மேலும் ஏழரைச் சனியால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் புரட்டாதி சனிக்கிழமைகளில் விரதம் இருந்தால் சனி பகவானின் தொல்லைகளிலிருந்து விடுபட்டு நிம்மதியான வாழ்க்கை கிட்டும் என்பது நம்பிக்கை. இதற்கு முக்கியமான காரணமாக சொல்லப்படுவது, சனிபகவான் ஒரு முறை திருமலைக்குச் சென்ற போது தானே துன்பப்பட்டு அங்கு வெங்கடாஜலபதியாய் இருப்பது மகா விஷ்ணுவே என்பதை உணர்ந்து மன்னிப்பு கேட்டு கொண்டார்.

மேலும் விஷ்ணு பக்தர்களை அவர் துன்பப் படுத்துவதில்லை என்னும் சங்கல்பத்தையும் மேற்கொண்டார். சனி பகவான் விஷ்ணுவிடம் கேட்டு கொண்டதற்கிணங்க சனிக்கிழமை ஏழுமலையானுக்கு உகந்ததாக கொள்ளப்பட்டது.





பகவத் கீதை துளிகள்

# சாங்கிய சாஸ்திர சித்தாந்தங்கள்!

சா.மெய்யப்பன்

சாங்கிய சாத்திரம் பற்பல சித்தாந்தங்களை தருகிறது. சாங்கிய சாஸ்திரம் என்பது வேதாந்த சாஸ்திரம். இந்த உலகில் எல்லா வற்றிற்கும் மேலாக ஒரு பரமாத்மா உள்ளது என்பதை விவரிக்கிறது. பிரம்மத்தை அறிவதற்கு இதுவே பிரமாணம். அதன்படி ஒரு செயல் நடப்பதற்கு ஐந்து காரணங்கள் அவசியம் இருக்க வேண்டும்.

இடம், செய்யும் உயிர், செய்யும் செயல்கள், செயற்படுத்தப்படும் கருவிகள் என்ற நான்கிற்கு மேலாக ஐந்தாவதாக இறைவனின் அருளும் தேவை. மனிதன் நல்ல காரியமோ தீய காரியமோ எதையுமே தன்னுடைய மனம், வாக்கு, உடல் கொண்டே செய்யத் துணிகிறான். அதற்கு முக்கிய காரணம் இந்த ஐந்தே. அந்தச் செயலை அறிவு, அறியும் பொருள், அறிபவன் என்ற மூன்றும் செய்யத் தூண்டுகின்றன. அதே போன்று கருவி, செயல், செய்பவன் என்ற மூன்றும் அந்தச் செயலை செய்து முடிக்க உதவுகின்றன. இதை யெல்லாம் உணராத மனிதன், எதையும் "நானே செய்தேன்" நானே முடித்தேன் நானே வென்றேன் என்று சொன்னால் அது மூடத்தனம் ஆகும்.

அகந்தை எதுவும் இல்லாமல், பற்றினைத் துறந்து, எத்தனைப் பேரை கொன்றாலும், அதனால் வந்து சேரும் பாவம் அந்த மனிதனைப் பற்றாது என்பதை அர்ஜுனன் உணர வேண்டும் என்று கண்ணன் எடுத்து உரைக்கிறார். மேலும் இங்கே செயல்கள் தொடங்குவதற்கு காரணமான அறிவு, செயல், செய்பவன் என்ற மூன்றும், முக்குணங்களின் அடிப்படையில் மூன்று வகை யாக கண்ணன் பிரித்துக் கூறுவார். இவற்றை சாங்கிய சாத்திரம் விளக்கமாக எடுத்துரைக்கிறது.

சாங்கிய சாஸ்திரம் என்று இங்கு கூறப்படுவது கபில முனிவர் இயற்றியது. ஆறு சாஸ்திரங்களுள் இது நான்காவதாக இடம் பெறுகிறது. பிரபஞ்ச அமைப்பின் கோட்பாடுகளைப் பற்றி இது விளக்குகிறது. பிரபஞ்ச அமைப்பை விளக்க இது முடிவான பிரமாணமாகும். எனவே குணங் களின் பாகுபாடுகளை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பரமாத்மா உள்ளது என்பதை கபில சாங்கியம் சொல்வதில்லை.

இந்த உலகில் உயிர்கள் வேறு வேறாக பிரிந்து நிற்கின்றன. வெவ்வேறு செயல்களைச் செய்கின்றன. ஆனால் இந்த உயிர்கள் அனைத் திலும் பிரிக்க முடியாத அழிக்க முடியாத ஒரே ஆத்மா தான் இருக்கிறது என்று உணர்ந்து அதை நம்புபவனின் அறிவு சாத்வீக அறிவு.

இந்த உயிர்கள் அனைத்திலும் வெவ்வேறு ஆத்மாக்கள் இருக்கின்றன என்று நம்புவனின் அறிவு ராஜச அறிவு. ஆத்மாவைப் பற்றிய அறிவே இல்லாமல், தான் செய்யும் எல்லாச் செயல்களுமே பலன் கொடுக்கும் என்றெண்ணி செயல்களின் சூழலில் சிக்கி, அதையே கதி யென்று எண்ணிக் கிடப்பது உண்மையில் மிகவும் சிற்றறிவு. அத்தகைய அறிவு தாமச அறிவு. •

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் ராகு காலத்தில் அம்மன் வழிபாடு செய்வதன் மூலம் உங்களின் எண்ணம், செயல்களில் வெற்றியும், பொருளாதார நன்மையும் கிடைக்கும்.



**இம்மாதம் அதிர்ஷ்ட கிழமைகள் : செவ்வாய், புதன், வெள்ளி**



# மேசம்

**துர்முகி ஆண்டு புரட்டாதி மாதம்**
**17.09.2016 முதல் 16.10.2016**

சொந்த முயற்சிகளால் எதையும் செய்ய துடிக்கும் மேச ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் அமர்ந்தும், குரு இரண்டாமிடத்தை பார்வை இடுவதும் உங்களின் வாழ்க்கை வளங்கள் மேலும் பெருகும். நினைத்ததை அடைய எடுக்கும் முயற்சிகள் நன்மையை தரும்.

#### பணியாளர்களுக்கு

பணியில் இருப்பவர்களுக்கு இடமாற்றம், பணி மாற்றம் உண்டாகலாம். எதிலும் சுறுசுறுப்பாக இருக்கும். உங்களுக்கு உடல் சோர்வும், எதிர்ப்பும் இருந்தாலும் உங்களின் கடமைகளை சரியாக செய் வீர்கள். பொருளாதாரத்தில் சீரான நிலை நீடிக்கும்.

#### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது வாழ்வில் உங்களின் உரிமைகளை விட்டு கொடுக்காமல் தொடர்ந்து செயல்படுவீர்கள். பொது விடயங்களில் செயல்படும் போது எதை யும் நீங்களே தீர்மானிப்பீர்கள். உங்களை மதிக்காத எந்த காரியத்திலும் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி கொள்வீர்கள். பொருளாதார் நிலை ஓரளவு சிறப் பாக அமையும்.

#### வியாபாரிகளுக்கு

வியாபாரிகளில் தொழில் திறமைகளை செயல் படுத்தி வந்தாலும் உங்களின் தொழில் ஸ்தானத்தை குரு பார்ப்பதால் நல்ல வியாபார யுக்திகளால் வியாபாரத்தை விருத்தி செய்து கொள்வீர்கள். இரும்பு கட்டுமான பொருட்கள் விற்பனையில் முன்னேற்றம் உண்டாகும். பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.

#### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் சொன்ன நேரத்தில் சிறப்பாக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். கலை ஞர்களின் அன்றாட பிரச்சினைகளில் உங்களை ஈடுபடுத்தி இணைந்து செயல்படுவீர்கள். மின் அலங்கார கலைஞர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். பொருளாதார நிலை மேன்மை உண் டாகும்.

#### பெண்களுக்கு

பெண்களின் பிடிவாதத்தால் சில காரியம் தடைப்படும் நடந்த காரியத்தை நினைத்து கவலைப் படுவீர்கள். குடும்பத்தில் அனைவரின் ஆதரவையும் பெறுவீர்கள். வேலைகளில் இருந்த சுமைகள் குறை யும்.

#### மாணவர்களுக்கு

கல்வியில் அதிக கவனம் செலுத்துவீர்கள். கட்டு மானம் சிவில் கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். மருத்துவ கல்வியிலும் விளையாட்டுகளிலும் சிறந்து விளங்குவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

04.10.2016 செவ்வாய் இரவு 01.24 முதல் 07.10.2016 வெள்ளி பகல் 12.34 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### அசுபதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

எதிரியை கூட அன்பால் வசியம் செய்வீர்கள். அன்பும் கருணையும் உங்களை இந்த கால கட்டத் தில் உதவியாக இருக்கும். பொருளாதாரத்தில் வளர்ச்சியை தருவீர்கள்.

#### பரணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

கிடைக்க வேண்டிய பண பலன்கள் விரைவில் உங்களுக்கு கிடைக்கும். அன்றாட பிரச்சினைகளை விரைவில் முடிவுக்கு வருவீர்கள். பணபலம் நன்றாக இருக்கும்.

#### கார்த்திகை 1ஆம் மாதம்

பொது விடயங்களில் சிறப்பாக செயல்படுவீர் கள். ஒரு செயலை முடித்துவிட்டு அடுத்ததுக்கு செல் வீர்கள். எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல் படுவீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஓரஞ்சு, வெண்மை, கருப்பு

**அதிர்ஷ்ட திசைகள் :** கிழக்கு, மேற்கு, வடமேற்கு




# மணவாழ்வுதரும் மணக்குள விநாயகர்

விநாயகர் திருமணமாகாதவர். ஆனால் திருமணம் ஆகாதவர்களுக்கு மணப்பேறு தரும் கடவுளாக இவர் ஓர் இடத்தில் அருள் பாலிக்கிறார். எங்கே? புதுச்சேரியில் பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரியை ஆட்சி புரிந்த போது அங்கிருந்த ஒரு பிள்ளையார் கோயிலை இடையூறாகக் கருதி பிரஞ்சு கவர்னர் உத்தரவின் பேரில் அந்தப் பிள்ளையாரைக் கொண்டு போய் கடலில் போட உத்தரவிட்டார். மறுநாள் பிள்ளையார் பூட்டிய கோயிலுக்குள்ளேயே உட்கார்ந்து கொண்டிருந்தாராம். கவர்னர் மனம் மாறி பிள்ளையார் கோயில் இருந்த இடத்தை அவருக்கே சாசனம் செய்து கொடுத்ததுடன் நித்ய பூஜைகளுக்கும் ஏற்பாடு செய்தார்.

இதனால் இவருக்கு கொள்ளைக்காரன் பிள்ளையார் என்றும் பெயர். "மணக்குள விநாயகர்" என்ற இவரது பெயருக்கும் காரணம் உண்டு. கடற்கரை மணலும் அருகில் உள்ள குளமும் சேர அமைந்ததால் மணல் குளம் மணக்குள விநாயகர் என்ற பெயர் ஆயிற்று.

கல்யாணமாகாமல் தடங்கல் ஏற்பட்டு தள்ளிப் போய்க் கொண்டே இருப்பவர்கள் இவரை வேண்டிக் கொண்டு கல்யாண உற்சவ வழிபாடு செய்தால் திருமணம் விரைவில் முடியும் என்கிறார்கள்.



## வீட்டில் ஸ்ரீசக்கர பூஜை!

ஸ்ரீசக்கரப் பூஜையை வீட்டில் செய்யலாம். ஏற்கெனவே உபதேசம் பெற்றுப் பூஜை செய்து வரும் ஒருவரிடமிருந்து முறைப்படி மந்திர உபதேசம் பெற்று, ஸ்ரீசக்கரத்திற்கும் முறைப்படி பிராணப் பிரதிஷ்டை செய்து பிறகு பூஜிக்கலாம்.



# மரகதம் போல் ஜொலித்தான் மாதவன்!

**"பகவானே! சகலத்தையும் துறந்து உங்களைச் சரணாகதி அடைந்த நீ எங்களை விட்டு மறைவது நன்றி மறக்கும் செயல் ஆகுமல்லவா?" என்று கோபியர்கள் கேட்க, பகவான் சொல்கிறார். "அன்பு உள்ளங்களே! பற்றற்ற என்னைப்பற்றி மட்டும் நாடி வரும் பக்தர்களிடம் தியானம் நீடித்த நிலை பெறச் செய்யவே, அவர்களுடைய கண்களுக்குத் தெரியாமல் நான் அவர்கள் பஜனைகளை மட்டும் கேட்டுக் கொண்டு மறைந்திருக்கிறேன். அதனால் உங்கள் மீது அன்பு கொண்ட என் மீது குறை கூறுவது சரியில்லை.**

பகவான் பந்த சொந்தங்களை உதறி விட்டு என் மீது பக்தி மிகுந்த உங்களுக்கு தேவர்களின் ஆயுள் காலத்திலும் நான் பிரதி உபகாரம் செய்ய சக்தி அற்றவன். ஆசையினால் தான் உங்கள் நல்ல குணத்தினால்தான். இதிலிருந்து மீள வேண்டும்" என்று சொன்னான்.

பின்பு அங்கே மிகவும் ப்ரீதியும் பக்தியும் கொண்டு கை கோத்து நின்ற கோபியர்களுடன் கோவிந்தன் ராசக் கிரிடை செய்தான்.

இரண்டு இரண்டு பெண்களுக்கு இடையில் புகுந்து அவர்கள் தங்கள் பக்கத்திலேயே பகவான் இருப்பதாக நினைக்கும்படி அவர்கள் கழுத்தை யோகீஸ்வரனான கண்ணன் அணைத்துக் கொண்டான். இப்படி ஆரம்பிக்கப்பட்ட ராஸ கிரீடையைப் பார்க்க ஆகாயத்தில் தேவர்கள் மெய் மறந்து மனைவியருடன் கூடிய விமானங்கள் நிறைந்து விளங்கின.

பரமாத்மா ஆத்மராமராக இருந்த போதிலும் விளையாட்டிற்காக, கோபிகள் எத்தனை பேரோ அத்தனை உருவங்களாகத் தன்னை ஆக்கிக் கொண்டு அவர்களுடன் விளையாடினான். அப்போது அவன் பொன்மணிகளுக்கு நடுவே உள்ள மரகதம் போல் ஜொலித்தான்.

அப்போது யமுனா தீரத்தில் பூக்களின் நறுமணத்தைக் கொண்டு காற்று வீசியது. தேன் வண்டுகள் ரீங்காரம் செய்தன. பெண்களின் கூட்டம் சூழப் பெண் யானைகளுடன் மதத்தைப் பொழியும் ஆண் யானையைப் போல் பகவான் சஞ்சாரம் செய்தான்.

பகவான் பல நிலைக்கண்ணாடிகளில் ஒரு

குழந்தை விளையாடுவது போல விளையாடினார்.

இந்தப் பாகவதக் கதையை பரீட்சித்து மன்னனுக்கு சுகர் சொன்ன போது மன்னன் ஒரு கேள்வி கேட்டான்.

பகவான் தர்மத்தை நிலைநிறுத்தவும் அதர்மத்தை அடக்கவும் தன் அம்சத்துடன் (பலராமனுடன்) பூமியில் அவதரித்தான். அப்படிப் பட்டவன் எப்படி பிறர் மனைவிகளைத் தீண்டும் அதர்மத்தைச் செய்தார்? அதாவது ஆப்தகாமரான யதுகுல திலகன் இகழ்ச்சிக்கு உரிய இந்தச் செயலை என்ன காரணத்தால் இப்படிச் செய்தார்? இந்தச் சந்தேகத்தை நீங்கள் அகற்றுங்கள்" என்று வினவினார்.

அதற்கு ஸ்ரீசுகப்பிரம்மரிஷி பதில் சொன்னார்

ஜீவராசிகளுக்கு அனுக்கிரகம் செய்யும் பொருட்டு பகவான் மனித சரீரத்தை எடுத்து வந்தான். எந்த லீலைகளைப் பற்றிக் கேட்டதும் பக்திமான் பரவசமடைகிறானோ அப்படிப்பட்ட லீலைகளை அவன் புரிகிறான்.

"கோபிகளுக்கும் அவர்களுடைய கணவர்களுக்கும் மட்டும் என்ன, உடல் படைத்த அத்தனை பேருக்கும் உள்ளே எவன் இருக்கிறானோ அந்த புத்திசாட்சியான பகவானே லீலை புரிய அவதாரம் செய்திருக்கிறான்.

"மேலும் அவனுடைய மாயையால் மோகம் கொண்ட கோகுலவாசிகள் தங்கள் தங்கள் மனைவியர் தங்கள் அருகாமையில் இருப்பதை எண்ணிக் கிருஷ்ணனிடத்தில் வேற்றுமை நோக்கமோ, பொறாமையோ கொள்ளவில்லை.

"கோபிகள் பகவத் கிருபையினால் யோக சரீரம் படைத்து அதைக் கொண்டு பகவானுடன் விளையாடினார்கள். போக சரீரம் கோகுலத்தில் இருந்தது. தேகம் உலகியலில் நிற்க, மனம் பகவானிடம் லயித்தது.

புத்திரனிடம் உள்ள வாத்ஸல்யத்தைக் கிருஷ்ணனிடம் வாத்ஸல்யமாக இருப்பதுபோல் பர்த்தாவிடம் உள்ள காமத்தையும் பகவானிடம் காமம் ஆக்குவதே முறை.

கோபியர் தங்கள் கணவன்மார்களை நேசிக்கிறார்கள். இறைவனைப் பூஜிக்கிறார்கள். தங்கள் பர்த்தாவின் கண்களில் அவர்கள் கண்ணனையே காண்கிறார்கள். கிருஷ்ணப்பிரேமை பர்த்தாவிடம் ப்ரீதியைக் குறைக்காது. மாறாக அது வளர்கிறது. வளர்க்கச் செய்கிறது. பர்த்தாவிடம் உள்ள உண்மையான அன்பும் பகவத் பக்தியைப் பெருக்கச் செய்கிறது. பர்த்தாவின் அன்பு அழகு பலம் எல்லாம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே.

« ஏ.எஸ்.வழித்துணை ராமன்



## தயை எனும் தெய்வீகக் குணம்!

உலகப் பற்றைத் துறந்தவர்கள் உயிர்களுக்காகக் கசிந்துருகுவதைத் துறப்பதில்லை. அவர்கள் எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேண்டும் என்றுதான் நினைப்பார்கள் இந்த அவர்களின் நிலையை, "ஸர்வபூதே ரதா", என்று பகவத்கீதை கூறுகிறது. "எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே" என்கிறார் தாயுமானவர். வாடிய பயிரைக் கண்டு வள்ளலார் வருந்தியிருக்கிறார். புத்தரோ கருணாமூர்த்தியாகவே விளங்கியிருக்கிறார். உலகில் தோன்றிய உண்மையான மகான்கள் எல்லோருமே, கருணை உள்ளம் கொண்டவர்களாகவே இருப்பார்கள். சுயநலம் மாயையைச் சேர்ந்தது. சுயநலமின்மை தயையைச் சேர்ந்தது. தயை என்பது ஒரு தெய்வீகக் குணம்.





# புரட்டாசி மாத சிறப்புக்கள்!

தமிழ் மாதங்களில் புரட்டாதி மாதம் ஆறாவது மாதமாக வருகின்றது. சூரியன் கன்னி ராசியில் நுழைந்து அங்கிருந்து வெளியே வருகின்ற நாள் வரையிலான காலம் அல்லது நாட்கள் புரட்டாதி மாதமாகின்றது. இம்மாதம் திருப்பதி ஏழுமலையானுக்கு மிகவும் உகந்த மாதமாகக் கருதப்படுகின்றது. ஏனென்றால் இம்மாதமே மகா விஷ்ணு பூமியில் வெங்கடேசப் பெருமாளாக அவதரித்த மாதமாகும். இதன் காரணமாகவே திருப்பதியிலும் கூட புரட்டாதி மாதத்தில் பிரம்மோற்சவம் நடைபெறுகின்றது.

பன்னிரண்டு தமிழ் மாதங்களுக்கும் வெவ்வேறு தனிச் சிறப்புக்களும் பண்டிகைகளும் இருக்கத்தான் செய்கின்றன. இவற்றின் அடிப்படை நோக்கங்களாக இருப்பது தெய்வ வழிபாடுகளும் அவற்றால் மனிதர்களுக்குக் கிட்டுகின்ற அருள் மிகுந்த ஆத்ம பலமும் அமைதி பொங்கும் மன மகிழ்ச்சியும் தான். புரட்டாதி மாதம் வந்து விட்டாலே கோவிந்தனைப் பற்றிய சிந்தனையும் கோவிந்தா கோவிந்தா என்ற நாம சங்கீர்த்தனமும் எங்கும் ஒலிக்கக் கேட்கலாம். அதிலும் புரட்டாதி மாதச் சனிக்கிழமைகள் பெருமாளுக்கு உகந்த தினமாகவும், வழிபாடு செய்து பயனடையும் நாளாகவும் பக்தர்களால் கருதப்படுகின்றது. எளியோர்க்கு எளியனாயும், எங்கும் நிறை பரம்பொருளாகவும் விளங்குகின்ற எம்பெருமான் வெங்கடேசப் பெருமாள் புரட்டாதி மாதத்தில் தனது பக்தர்கள் யாவரும் தம்மை நெருங்கி வரவேண்டுமென விரும்புகிறார்.

சிலர் தமது இல்லங்களிலேயே மாவிளக் கேற்றியும் வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். புரட்டாதிச் சனிக்கிழமைகளில் சனி பகவான் தனது சக்தியை இழந்து விடுவதாகவும் அச்சமயத்தில் சனீஸ்வரரை வழிபட்டால் பக்தர்களுக்கு மிகுந்த பலன் கிடைக்கும் என்றும் நம்பப்படுகின்றது.

பெரும்பாலான பக்தர்கள் புரட்டாதி மாதம் முழுவதிற்கும் அசைவ உணவை நீக்கி விரதமிருக்கின்றனர். சிலர் குறைந்தபட்சம் புரட்டாதிச் சனிக்கிழமைகளிலாவது சுத்த சைவ உணவை உண்பது ஒரு பொழுது உண்பது எனத் தங்களால் இயன்ற வரை விரதத்தை கடைப்பிடிக்கின்றனர்.

பெருமாளின் அம்சமாய் கருதப்படும் புதனுடைய வீடு கன்னி, இக்கன்னியில் சூரியன் வந்து அமர்வது புரட்டாதி மாதத்தில் தான் என்பதால் திருமாலுக்குச் செய்ய வேண்டிய பஜனைகள், பிரம்மோற்சவங்கள் என்ற அனைத்தும் நடைபெறுகின்றன.

புதனுக்கு நட்புக்கிரகமாக விளங்குவது சனி பகவான் அதனாலேயே புரட்டாதி மாதத்தில் வரக்கூடிய சனிக்கிழமைகள் விஷேடமாகக் கொண்டாடப்படுகின்றன.

நவராத்திரி விழா என்பது புரட்டாதி மாதத்தில் வருகின்ற மற்றுமொரு முக்கியமான விழாவாகும். நவராத்திரி விழா ஒரு பெரும் இந்துப் பண்டிகையாக

இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகின்றது.

இவ்விழாவினை தென்னிந்தியாவில் நவராத்திரி என்றும், மைசூர் உள்ளிட்ட கர்நாடகாவின் சில பகுதிகளில் தசரா என்றும் வட இந்திய மாநிலங்களில் இவ்விழா துர்க்கா பூஜை என்றும் விஜயதசமி என்றும் கொண்டாடப்படுகின்றது. எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்ட போதிலும் இவ்விழாவானது துர்க்கை வழிபாட்டுக்குரியதே ஆகும்.

துர்க்காதேவி ஒன்பது நாட்கள் மகிஷாசுரனை எதிர்த்துப் போரிட்டு கடைசி நாளான 10ஆம் நாளில் வெற்றி கொள்கிறாள். இதனையே நவராத்தி ரியாகவும், வெற்றிகண்ட நாளை விஜய தசமியாக வும் கொண்டாடுகிறார்கள்.

இது துர்க்கையை வழிபடும் பண்டிகை என்றாலும் வாழ்வியல் வளங்களான செல்வம், அறிவு மற்றும் சக்தி ஆகிய மூன்றையும் பெற்றிட சரஸ்வதி, லட்சுமி, பார்வதி ஆகிய முப்பெரும் தேவியரையும் இந்த நவராத்திரித் திருநாளில் வணங்குகின்றோம்.

முதல் மூன்று நாட்கள் வெற்றியை வேண்டி துர்க்கா தேவியையும் அடுத்த மூன்று தினங்களும் செல்வத்தை வேண்டி இலக்குமியையும், இறுதி மூன்று தினங்களும் கல்வியும் ஞானமும் வேண்டி சரஸ்வதியையும் வழிபடுகின்றார்கள்.

தென்னிந்தியாவிலும் வட இந்தியாவின் சில பகுதிகளிலும் கொலு பொம்மை வைப்பது நவ ராத்திரிப் பண்டிகையின் ஒரு முக்கிய அம்சமாகும்.

கொலு வைக்கப்படும் ஒன்பது நாட்களும் ஒன்பது படிகளில் கீழே முதல் மூன்று படிகளில் உயிர்வாழ அடிப்படைத் தேவையான உணவு, காய், கனி, வயல் வரப்புகள், கறவை மாடுகள், மண் போன்றவற்றையும், அடுத்த மூன்று படி களில் சாதாரண மனிதர்களைக் குறிக்கும் மனித பொம்மைகள் வீடு, வாகனங்கள், ராஜாராணி பொம்மைகள் போன்ற வற்றையும், மேல் மூன்று படிகளில் தெய்வ உருவங்களையம் அழகாக அடுக்கி வைக்கின்றார்கள்.

இந்த ஒன்பது நாட்களும் நவராத்திரி கொலு வைக்கும் பெண்கள், சுமங்கலிப் பெண்களை வீட்டுக்கு அழைத்து தாம்பூலம் மற்றும் நைவேத்தி யங்களை தந்து உபசரிப்பார்கள். கொலு சமயத்தில் வீட்டிற்கு வரும் பெண்கள் அம்மன் பாடல்களைப் பாடி பஜனைகள் செய்து தெய்வீக மணம் கமழச் செய்வார்கள். மேலும் இச்சந்தர்ப்பத்தில் விருந்தோம்பல், நட்பு ஒற்றுமை ஆகிய நல்ல பண்புகளும் பெண்களிடையே ஓங்குகின்றன.

புரட்டாதி மாதம் நவமி திதியில் வரும் சரஸ்வதி பூஜை தினத்தன்று, அதிகாலை எழுந்து குளித்து ஆசார அனுஷ்டானங்களை முடித்து புதுத்துணி அணிய வேண்டும். கோயிலுக்குச் சென்றோ அல்லது வீட்டில் சரஸ்வதி படத்தை வைத்தோ தேங்காய், பழம், அவர், பொரி கடலை, வெல்லம் முதலியவற்றை நிவேதனப் பொருடக்களாக வைத்து தூப தீபம் காட்டி மனமுருகிப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.வெண்தாமரை மலர் கொண்டு அர்ச்சனை செய்து வழிபட்டு போற்ற வேண்டும். சரஸ்வதி தேவியை இவ்வாறு பூஜிப்பதால் கல்வி, அறிவாற்றல் ஞானம் ஆகியவற்றைக் குறை வின்றிப் பெறலாம்.

இதற்கடுத்த திகதியில் விஜயதசமி கொண்டா டப்படுகிறது. இந்த திகதியில் நல்ல நேரம் பார்த்து எம்முடைய வீட்டில் இருக்கும் சிறிய பிள்ளை களுக்கு அக்ஷராப்பியாசம் என்னும் எழுத்துகளை கற்பிப்பார்கள். அதே போல் நாட்டியம், சங்கீதம் போன்ற நுண்கலைகளை குருகுலமாக கற்றலும் இன்று நடைபெறும்

▲ஜெயா நாகேந்திரன்



# துர்முகி வருடம்


# புரட்டாசி மாதத்து சுபதினங்கள்



சுபயோக சுப தினங்கள்
துர்முகி வருடம் புரட்டாதி மாதம்
திருமணம், மாங்கல்யம் செய்ய,
புதுவாகனம் வாங்க, தொழில் துவங்க,
சீமந்தம், கடன் வாங்க

| மாதம் | கிழமை | திதி | நட்சத்திரம் | யோகம் | காலை | லக்னம் | பிறை |
|---|---|---|---|---|---|---|---|
| 18.09.2016 | ஞாயிறு | துவிதியை | ரேவதி | அமிர்த | 06.00 08.00 | கன்னி | தேய் |
| 19.09.2016 | திங்கள் | திருதியை | அசுபதி | சித்த | 09.00 10.00 | துலாம் | தேய் |
| 26.09.2016 | திங்கள் | ஏகாதசி | பூசம் | சித்த | 09.20 10.20 | விருச்சிகம் | தேய் |
| 28.09.2016 | புதன் | திரயோதசி | மகம் | சித்த | 09.20 10.20 | விருச்சிகம் | தேய் |
| 03.10.2016 | திங்கள் | துவிதியை | சுவாதி | அமிர்த | 09.20 10.20 | விருச்சிகம் | வளர் |
| 05.10.2016 | புதன் | சதுர்த்தசி | அனுசம் | சித்த | 09.00 10.00 | விருச்சிகம் | வளர் |
| 06.10.2016 | வியாழன் | பஞ்சமி | அனுசம் | சித்த | 09.00 10.00 | விருச்சிகம் | வளர் |

## சத்திர சிகிச்சை செய்து குழந்தை எடுக்க



| திகதி | நேரம் |
|---|---|
| 17.09.2016 | பகல் 12.30 01.30 |
| 18.09.2016 | பகல் 01.30 02.15 |
| 19.09.2016 | பகல் 01.00 02.00 |
| 20.09.2016 | பகல் 12.30 02.00 |
| 21.09.2016 | பகல் 01.30 02.00 |
| 25.09.2016 | பகல் 01.30 02.00 |
| 26.09.2016 | பகல் 12.00 01.30 |
| 28.09.2016 | காலை 10.00 11.00 |
| 29.09.2016 | பகல் 12.00 01.30 |
| 02.10.2016 | காலை 11.30 12.00 |
| 03.10.2016 | பகல் 12.00 01.00 |
| 06.10.2016 | காலை 09.30 10.30 |
| 11.10.2016 | பகல் 11.00 12.00 |
| 14.10.2016 | காலை 09.00 10.00 |
| 15.10.2016 | காலை 11.00 12.00 |
| 16.10.2016 | காலை 11.15 12.00 |

## சாந்தி முகூர்த்தம்

| | | |
|---|---|---|
| 03.10.2016 | இரவு | 10.30 12.00 |
| 05.10.2016 | இரவு | 10.30 12.00 |
| 07.10.2016 | இரவு | 10.30 12.00 |
| 12.10.2016 | இரவு | 10.00 11.00 |
| 14.10.2016 | இரவு | 10.00 11.00 |

## கடன் தீர்க்க

| | |
|---|---|
| 19.09.2016 | பகல் 12.00 02.00 |
| 20.09.2016 | பகல் 10.20 11.20 |
| 24.09.2016 | பகல் 12.00 01.00 |
| 27.09.2016 | பகல் 12.00 01.00 |
| 05.10.2016 | பகல் 01.30 03.00 |
| 11.10.2016 | பகல் 12.00 01.00 |
| 15.10.2016 | பகல் 12.00 01.00 |



கிருகப்பிரவேசம், கிருக ஆரம்பம் வாசல்கால் நடுதல் கூடாது

கணிப்பு: சோதிடர்
வாடிப்பட்டி R.ஆனந்தன்

## இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் மாரியம்மன் நாகதேவதை வழிபாடு செய்து நெய் விளக்கு போட்டு அரிசியில் பொங்கல் செய்து நைவேத்திய செய்து வர எல்லா காரியமும் நினைத்தபடி நடக்கும்.



**இம்மாதம் அதிர்ஷ்ட கிழமைகள் : புதன், வியாழன், வெள்ளி**



# ரிஷபம்

### துர்முகி ஆண்டு புரட்டாதி மாதம் 17.09.2016 முதல் 16.10.2016

தன்னை அழகுபடுத்தி கொண்டு உயர்வாக நினைக்கும் ரிஷப ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வை பெறுவதும், சனி யோகப் பார்வை பெறுவதும் உங்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் வாய்ப்புகள் கிடைக்கும். தொழி லில் கூடுதல் லாபம் பெறும் வாய்ப்பும் அமையும்.

**பணியாளர்களுக்கு**

பணியாளர்களின் ஒற்றுமை சிறப்பாக அமையும். தேயிலை தோட்டத்தை தொழிலாளர் களின் வாழ்க்கையில் நல்ல மாற்றம் உண்டாகும். குடும்பத்தில் சுபகாரியம் உண்டாகும். நினைத்த பணி மாற்றம் கிடைக்கும். பொருளாதாரத்தில் சிறந்த வளர்ச்சியை பெறுவீர்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது வாழ்வில் ஈடுபடும் போது அது எம் மையோ எம்மை சார்ந்தவர்களுக்கோ பயன் தரும் என்றால் அதில் ஈடுபடுவீர்கள். உங்களின் கருத்துக்கு எதிர் கருத்து இருந்தால் அந்த இடத்தை விட்டு வெளியேறி விடுவீர்கள். பொது நோக்கம் முழுமையாக நிறைவேற வேண்டுமென்று நினைப் பீர்கள்.

**வியாபாரிகளுக்கு**

உங்களின் தொழில் ஸ்தானாதிபதி ராசிக்கு பார்வை பெறுவது கூட்டு தொழிலில் சில பிரச் சினைகள் இருந்து வந்தாலும் அது உங்களை பாதிக்காது நினைத்த தொழிலை தெரிவு செய்து அதில் முன்னேற்றம் காண்பீர்கள். மார்பிள், டைல்ஸ் போன்ற தொழிலில் கூடுதல் ஆதாயம் கிடைக்கும்.

**கலைஞர்களுக்கு**

கலைத் துறையினர் எதிர்பார்த்த தொழில் வாய்ப்பு அமையும். சினிமா, நாடகம், தொலைகாட்சி நடிகர்களின் வாழ்க்கையில் சிறந்த வாய்ப்பை பெறுவீர்கள். புதிய ஒப்பந்தங்களில் இணையும் வாய்ப்பு அமையும். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.

**பெண்களுக்கு**

பெண்களின் செயல்பாடுகளில் மாற்றம் உண்டாகும். ஆடம்பர செயல்களை குறைத்து ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்வீர்கள். கொடுக்கல் வாங்கலில் முன்னேற்றம் உண்டாகும். தொழில் சார்ந்த முக்கிய உபகரணம் சொந்தமாக வாங்குவீர்கள்.

**மாணவர்களுக்கு**

சட்டம், ஆன்மீகம், ஆராய்ச்சி, மருத்துவம் போன்ற கல்வியில் சிறப்பான முன்னேற்றம் உண டாகும். வெளிநாட்டு கல்வி வாய்ப்பு அமையும். ஆசிரியர்களின் வழிகாட்டுதலும் ஆதரவும் கிட்டும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

07.10.2016 வெள்ளி பகல் 12.35 முதல் 09.10.2016 ஞாயிறு இரவு 09.55 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்**

எண்ணத்தில் உதிக்கும் செயல்களை செயல் படுத்தி தொடர் நடவடிக்கைகளால் உயர்ந்த நிலைக்கு வருவீர்கள். உங்களின் செயலுக்கு ஊக்கமும், ஆக்கமும் பெறுவீர்கள்.

**ரோஹிணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

தொழிலிலும், பொருளாதாரத்திலும் வளம் பெறுவீர்கள். புதிய நண்பர்களின் நட்பு உங்களுக்கு புதிய அனுபவங்களையும் செயலில் வெற்றியை தரும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

வளமான எதிர்காலத்திற்கு தேவையான திட்டங்களை செயல்படுத்தி உங்களையும், உங்களை சார்ந்தவர்களையும் மேம்படுத்திக் கொள்வீர்கள். பொருளாதாரம் வளர்ச்சியை தரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**

பழுத்த வெண்மை, ஒரஞ்சு, மஞ்சள்

**அதிர்ஷ்ட திசைகள் :**

தெற்கு, தென்கிழக்கு, மேற்கு

இந்தியாவில் உள்ள ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள சித்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்புண்ணியத் திருத்தலம். திருப்பதி மலையில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளின் திவ்ய தரிசனத்திற்காக பக்தர்கள் உலகெங்கிலும் இருந்து லட்சக்கணக்கில் வருடம் முழுவதும் வந்து கொண்டே இருக்கின்றார்கள். ஏழு சிகரங்களைக் கொண்ட மலைகளில் திருமலை உள்ளது. எனவே தான், திருமலை, ஏழுமலை என்று தமிழிலும் ஏழு கொண்டலு என்று தெலுங்கிலும் அழைக்கப்படுகின்றது.


திருப்பதி என்ற சொல் திரு எனவும் பதி எனவும் பிரிக்கப்படுகின்றது. வடமொழிச் சொல்லான பதி என்பதற்கு கணவன் அல்லது தலைவன் எனப்பொருள் படுகின்றது. தமிழ் சொல்லான திரு என்பதற்கு புண்ணியம், தெய்வத்தன்மை, மேன்மை மிக்க என்றெல்லாம் அர்த்தமாகின்றது. திருப்படி என்பதே பிற்காலத்தில் மருவி திருப்பதி ஆகியதாகவும் சொல்லப்படுகின்றது.

இந்தியாவில் உள்ள மிக முக்கிய வைணவத் திருத்தலங்களில் திருப்பதியும் ஒன்றாகும். இத்திருத்தலம் பெருமாளுக்கான நூற்றி எட்டு திவ்யதேசங்களுள், திருவரங்கத்திற்கு அடுத்தபடியாக இரண்டாமிடத்தில் வைத்துப் போற்றப்படுகின்றது.

திருப்பதியில் உள்ள ஏழு சிகரங்களும் ஆதி சேஷனின் ஏழு தலைகளைக் குறிப்பதால் இந்த மலைக்கு "கோசாலம்" என்ற பெயரும் உள்ளது சேஷாத்திரி, நீலாத்ரி, கருடாத்ரி, அஞ்சனாத்திரி, வரிசபத்ரி நாராயணாத்ரி, வேங்கடாத்ரி என்பவையே அந்த ஏழு மலைகள். உலகின் பழைமையும், பெருமையும் வாய்ந்த பாறை மலைகளில் இரண்டாம் இடத்தைப் பிடிப்பவை இந்த திருமலை மலைகள் தான்.

ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளின் ஆலயம் எந்த ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது என்பது உறுதியாகத் தெரியவில்லை. இருப்பினும் பழைமையும் புராணப் பெருமைகளும் கொண்ட இந்த ஆலயம்

# கலியுக வைகுண்டமாம் திருப்பதியில் பிரம்மோற்சவ விழா!



பல்லவ, சோழ விஜயநகரப் பேரரசுகளால் பல ஆண்டுகள் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

விஜயநகரப் பேரரசின் மிக முக்கிய அரசனான ஸ்ரீ கிருஷ்ண தேவராயர், இந்த ஆலயத்திற்காக தங்கத்தையும், மற்ற விலை உயர்ந்த ஆபரணங்களையும் நன்கொடையாகக் கொடுத்துள்ளார். இந்தக் கோவிலுக்கு அருகாமையில் இதர கோயில்களையும் நிறையவும் கட்டியுள்ளார். திருப்பதியிலிருந்து சில கிலோமீற்றர்கள் தொலைவில் தென் மேற்குத் திசையில் அமைந்திருக்கும் "சந்திரகிரி" என்னும் கிராமம் விஜயநகர சக்கரவர்த்தியின் இரண்டாம் தலைநகரமாக விளங்கியது. வைணவம் தளைத்திருந்த கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வைணவப் புனிதத் திருத்தலமாகிய திருப்பதி, "கலியுக வைகுண்டம்" என ஆழ்வார்களால் போற்றப்பட்டது.

புரட்டாதித் திருவோணம், திருவேங்கட நாதனின் பிறந்த நாளாகத் தொன்று தொட்டு அனுசரிக்கப்பட்டு வருகிறது. திருவோண தினத்திற்கு முன்பாக வருகின்ற ஒன்பது நாட்கள் நடைபெறும் மிகப் பெரிய திருவிழாவில் காலை, மாலை இரண்டு வேளைகளிலும் பலவிதமான வாகனங்களில் விசேட அலங்காரங்களுடன் உற்சவ மூர்த்தி ஏழு மலையான அமர்ந்து திருவீதி உலா வருகின்றார்.

ஸ்ரீ வெங்கடேஸ்வரருக்கு நடத்தப்படுகின்ற இந்தத் திருவிழாவை, படைப்புக் கடவுளான பிரம்ம தேவனே முன்னின்று நடத்தி வந்ததால், இந்த உற்சவம் "பிரம்மோற்சவம்" என அழைக்கப்பட்டது. பல ஆண்டுகளுக்கு முன்னர் வருடம் ஒரு முறை பிரம்மோற்சவம் நடைபெற்று வந்ததாகவும், அதன் பின்பாக புரட்டாதி மாதத்தில் ஒரு முறையும் மார்கழி மாதத்தில் ஒரு முறையும் இரண்டு தடவைகள் நடத்தப்பட்டதாகவும் ஆலயம் சம் பந்தப்பட்ட பழைமையான கல்வெட்டுக்களில் குறிக்கப் பட்டுள்ளது என திருமலையின் மூன்றாம் சுற்றுச் சுவரில் காணப்படும் ஒரு கல்வெட்டில் 1551ஆம் ஆண்டில் ஒரே ஆண்டில் பதினொரு முறை பிரம்மோற்சவம் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

திருமலையில் கொடியேற்றத்துடன் தொடங்கப்படும் பிரம்மோற்சவம், ஒவ்வொரு ஆண்டும் பத்து நாட்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இதில், ஐந்தாம் நாள் திருவிழாவான மோகினி அவதார உற்சவம் மிகுந்த பிரசித்தி பெற்றது. அன்றிரவு உற்சவரான எம்பெருமான், கருடாழ்வார் மீது திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு தரிசனம் தந்து அருள் பாலிப் பார்.

திருவீதி உலாவின் போது கருட வாகனத்திற்கு வெண்பட்டுக் குடைகள் சமர்ப்பிக்கும் வழக்கம் இன்றளவும் இருந்துவருகின்றது. ஆறு பெரிய குடைகளும், நான்கு சிறிய குடைகளும் சமர்ப்பிக்கப்படுகின்றது. இக் குடைகள் யாவும் சென்னையிலிருந்தே கொண்டு செல்லப்படுகின்றன.



திருவிழாவின்போது கருட சேவை தினத்தன்று, மூலவருக்கு அணிவிப்பதற்காக விலை உயர்ந்த பட்டாடைகள் தயாரித்து ஒரு கண்ணாடிப் பெட்டியில் வைத்து தினசரி பூஜை செய்வார்கள் பிரம்மோற்சவ விழாவின்போது காலை மாலை இரு வேளைகளிலும், சின்ன சேஷ வாகனம், பெரிய சேஷ வாகனம், தங்கத் திருவாசி, ஹம்ச வாகனம், முத்துப் பந்தல், கல்ப விருட்ச வாகனம், சர்வ பூபாள வாகனங்கள், பல்லக்கு, கருடசேவை, அனுமந்த வாகனம், சூரிய சந்திர பிரபை வாகனங்கள், திருத்தேர் குதிரை வாகனம் இப்படிப் பல்வேறு வாகனங்களில் வெங்கடேஸ்வரப் பெருமாள் திருவீதி உலா வருவார். குடை சாமரம், மங்கள வாத்தியங்கள் முழங்க மறைப் பாராயணங்களுடன் பக்தர்களின் புடைசூழ பிரம்மோற்சவம் நடைபெறும்.

ஒத்தகடை ராமன்



# உயிரோவியங்களாய் காட்சிதரும் கிருஷ்ணாபுரம்



இந்தியாவின் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ளது கிருஷ்ணாபுரம் என்னும் அழகிய சிற்றூர். இங்கு பழைமை வாய்ந்த ஸ்ரீவெங்கடாஜலபதி ஆலயம் அமையப் பெற்றுள்ளது. "பர்பகுளம்" என்பது இந்த ஊரின் புராண பெயராக இருந்து வந்துள்ளது. இந்த வைணவ திருத்தலத்தை சுற்றிலும் அகஸ்தீஸ்வரர் திருக்கோயில், காசிநாத சுவாமி திருக்கோயில், தென்னழகர் திருக்கோயில், கிருஷ்ணசாமி திருக்கோயில், நீலமணி நாத சுவாமி திருக்கோயில் ஆகியவை அமைந்துள்ளன.

பதினாறாம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட இந்த ஆலயம் இங்குள்ள அதி உன்னத கல் சிற்பங்களின் காரணமாக ஒரு மிகச் சிறந்த சிற்பக்கலை கூடமாக போற்றப்படுகின்றது. திருமலையில் அமைந்துள்ள வெங்கடாஜலபதி திருக்கோயிலை போலவே இந்த ஆலயத்திற்கும் மிகுந்த முக்கியத்துவம் இந்த ஆலயத்திற்கு பக்தர்களால் அளிக்கப்படுகின்றது. திருப்பதி ஏழுமலையானுக்கு மொட்டை போடுவதாக வேண்டி கொண்ட பக்தர்களால், தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்த வெங்கடாஜலபதி ஆலயத்திற்கு வந்து முடி காணிக்கை செலுத்தலாம். இங்கு பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றார்.



# ஆலயச் சிற்பங்கள்!



இவருடைய சிற்பமும் கலை நுணுக்கங்கள் நிறைந்த உயிரோவியமாய் காட்சி தருகின்றது. இங்கு அமைந்துள்ள அனைத்து கல் சிற்பங்களும் கருங்கல்லால் செய்யப்பட்டு கண்கவரும் அமைப்பில் காணப்படுகின்றன. சில சிற்பங்களில் லேசாக தட்டினாலும் வெண்கல ஓசை எழுவது அதிசயமாக இருக்கின்றது.

தென்திருப்பதியாய் போற்றப்படும் கிருஷ்ணாபுரம் வெங்கடாஜலபதி ஆலயத்தில் காணப்படுகின்ற சிற்பங்கள் எல்லாம் உலகளவில் புகழ் பெற்றது என்றே சொல்கின்றார்கள். அந்த அளவிற்கு இந்த சிற்பங்கள் மிக நுணுக்கமான கலை வேலைபாடுகளுடனும் அழகுணர்ச்சியோடும் பேசுகின்ற சிற்பங்களோ என்று வியக்கும் வண்ணம் செதுக்கப்பட்டுள்ளன. ஆண் பெண் உருவங்கள் அடங்கிய இங்குள்ள சிற்பங்கள் யாவும் பொருத்தமான அணிகலன்களோடு மிக நுண்ணியமான அமைப்போடும் காண்போரை ஆச்சரியத்திலும் பிரமிப்பிலும் ஆழ்த்துகின்றன. இங்குள்ள சிற்பங்கள் உலகளவில் புகழ் பெற்று விளங்குவதே இந்த தலத்தின் சிறப்பாக கருதப்படுகின்றது.

கல்லிலே கலை வண்ணங்களை கண்ட கவின் மிகு சிற்பிகள் இந்த ஆலயம் எழுந்த போது வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதற்கு சான்றாக கிருஷ்ணாபுரம் ஆலயத்தில் காணும் பக்கங்களில் எல்லாம் கலை நயத்தோடு நிற்கின்ற சிற்பங்கள் விளங்குகின்றன. அந்தச் சிற்பிகள் அவர்கள் சிலைக்காக எடுத்துக் கொண்ட கற்களை கலையின் மூலதனமாய் பார்த்தார்கள். ஆகவே தான் அவை யாவும் இன்றளவும் பேசுகின்ற சிற்பங்களாய் கிருஷ்ணாபுரம் வெங்கடாஜலபதி ஆலயத்தில் நின்று கொண்டிருக்கின்றன.

⏭ ஒத்தக்கடை ராமன்



# பாவங்கள் போக்கும் பாலாபிஷேகம்!

**மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் ஆடிப்பூர விழா வழக்கமான பக்தி பெருக்குடனும் விழாவிற்கான உற்சாகத்துடனும் ஓகஸ்ட் மாதம் 3, 4 மற்றும் 5ஆம் திகதிகளில் வெகுச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் சித்தர் பீடத்து ஆடிப்பூர விழாவில் கலச விளக்கு வேள்வி பூஜை, கஞ்சி வார்த்தல் மற்றும் பால் அபிசேக நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றன. இந்த நிகழ்வுகளில் லட்சக்கணக்கான பக்தர்களும் பொது மக்களும் பங்கேற்றார்கள்.**

ஆடிப்பூர விழாவை முன்னிட்டு சித்தர் பீட முகப்பிலும் உள் பிரகாரங்களிலும் சிறப்பான அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. 03ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 03.00 மணிக்கு மங்கள இசையுடன் விழா துவங்கியது. கருவறையில் ஆதிபராசக்தி அன்னைக்கும் சுயம்புவிற்கும் சிறப்பு அபிடேக, அலங்கார, ஆராதனைகள் செய்யப் பட்டன. கருவறை முன்பாகவும், புற்று மண்டபம் முன்பாகவும் அமைக்கப்பட்டிருந்த யாகச்சாலை யில் கலச விளக்கு வேள்வி பூஜையை மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக இயக்கத் தலைவர் லட்சுமி பங்காரு அடிகளார் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

ஆன்மீக குரு அடிகளார் அவர்கள் வீட்டிலிருந்து லட்சுமி பங்காரு அடிகளாரால் எடுத்து வரப்பட்ட தாய் வீட்டு கஞ்சிக்கு சித்தர் பீடத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து சித்தர் பீடத்தின் எதிரேயுள்ள மைதானத்தில் அனைத்து பக்தர்களும் எடுத்து வந்த கஞ்சிகளும் ஒன்று சேர்க்கப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதமாக விநியோகம் செய்யப்பட்டது.

பக்தர்களுக்கு பிரசாதம் வழங்குவதை இயக்கத் துணை தலைவர் ஸ்ரீதேவி ரமேஷ் துவக்கி வைத்தார். மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக இயக்கத் துணைத்தலைவர் முன்னிலையில் ஆன்மீக குரு அருள் திரு. பங்காரு அடிகளார் அபிடேக நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார்.

பால் அபிடேக நிகழ்ச்சிகளில் பங்கேற்க சுமார் 6 கி.மீற்றர் தூரத்திற்கும் மேலாக



பக்தர்கள் கூட்டமாக வரிசையில் நின்று தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தார்கள்.

வரிசையில் வந்து கொண்டிருந்த பக்தர்களுக்கு உணவு, தண்ணீர், பழரச பானங்கள், பிஸ்கற்றுகள், தேநீர், ஐஸ்கிறீம் மோர் ஆகியவற்றையும் குழந்தைகளுக்கு பால் முதலிய வற்றையும் செவ்வாடை பக்தர்கள் முறையாக வழங்கினார்கள்.

இயக்கத்தின் விழுப்புர வழி பாட்டு மன்றத் தொண்டர்கள் வந்தி ருந்த பக்தர்களுக்கு உணவு வழங்கி னார்கள். அன்று மதியம் துவங்கிய பால் அபிடேகம் இரவு முழுவதும் தொடர்ந்து நடைபெற்றது.

இந்த விழாவிற்கான ஏற்பாடு கள் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக இயக்கத் தலைவர் லட்சுமி பங்காரு அடிகளார் அவர்களின் தலை மையில் இயக்கத்தின் கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட ஆதி பராசக்தி வழிபாட்டு மன்றங்களின் தலைமையில் மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள்.

A.A. ராமன்





# பாபாஜியின் அருள் பெற்ற பரமஹம்ஸ யோகானந்தர்!



**பாரதத்தில் அவதரித்து உலகிற்கே ஆன்மீக ஒளி வழங்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர் பரமஹம்ஸ யோகானந்தர். கனிவும், கருணையும் கொண்ட ஞான சூரியன் இவர். இவருடைய வாழ்விலும் பாபாஜியின் அருள் படர்ந்திருந்தது.**

வடகிழக்கு இந்தியாவில் இமயமலைப் பிரதேசமான கோரக்பூரில் இவர் பிறந்தார். (1893 ஜனவரி 5) இயற்பெயர் முகுந்தலால் கோஷ்.

பகவதிசரண்கோஷ் தம்பதியரின் எட்டுக் குழந்தைகளுள் நான்காவது குழந்தை இவர். இவருடைய எட்டாவது வயதில் இருந்தே குடும்பம் வேறுவேறு ஊர்களில் வசிக்கத் தொடங்கியது. இவரது தந்தை பல ஆத்ம சாதனைகளில் ஈடுபட்டவர். லாஹிரிமகாசயரின் சீடராயிருந்திருக்கிறார். மனிதர் பணத்தில் அதிக ஆர்வம் காட்டாதவர், ஆடம்பரமில்லாதவர். அதே சுபாவம் பரமஹம்ஸ யோகானந்தரிடமும் இருந்தது.

யோகானந்தர் சிறுவனாக இருக்கும்போதே லாஹிரிமகாசயர் இவ்வுலக வாழ்வை நீத்தார். தங்கள் வீட்டில் இருந்த லாஹிரியின் படத்தைப் பார்த்தே அவரைத் தெரிந்து கொண்டார் யோகானந்தர். தாம் இளைஞனான பிறகு தமக்குப் பிரச்சனைகள் ஏற்பட்ட போதெல்லாம் லாஹிரியைப் பிரார்த்தித்துக் கொள்வார் அவர். உடனே தக்கதொரு தீர்வு கிடைத்துவிடும்.

யோகானந்தருக்கு எட்டு வயதில் காலரா நோய் கண்டது. தமது உயிருக்கு ஆபத்தான அந்த நேரத்தில் அருகே சுவற்றில் தொங்கவிடப்பட்டிருந்த லாஹிரியின் புகைப்படத்தை வணங்கிக் கொண்டார். அந்த படத்தில் இருந்து புறப்பட்ட ஒரு ஒளி அவர் இருந்த அறை முழுவதும் பரவியது. அவருக்குப் பாதுகாப்பு உணர்வைத் தந்தது. அவர் விரைவிலேயே குணமடைந்தார். சிறு வயதில் இருந்தே தியானம் செய்கிற பழக்கம் யோகானந்தரிடம் இருந்தது. தமது நெற்றியினுள்ளே பல தெய்வீகக் காட்சிகளை அவர் கண்டிருக்கிறார்.

## "தெய்வீக வழிகாட்டல்"

சிறு வயதிலேயே யோகானந்தர் ஆன்ம வேட்கை கொண்டவரானார். சிலமுறை வீட்டை விட்டே அவர் ஓடிப் போனார். அவருடைய தந்தை லாஹிரியின் சீடர் என்பதோடு, குருவின் வழிகாட்டுதலின்படி கிரியா யோக சாதனையிலும் ஈடுபட்டிருந்தார். அந்தக் குடும்பம் லாஹிரியின் அருளாதிக்கம் பெற்றது. தந்தையின் பாதிப்பு மகனிடமும் இருந்திருக்கிறது எனலாம்.

அவர்களுடைய குடும்பம் கொல்கத்தாவில் இருந்தது. தந்தை பகவதி சரண்கோஷ் பணி நிமித்தமாக லாகூரில் இருந்த போது, யோகானந்தரும் அவருடன் தங்கியிருந்தார். அப்போது தாயின் உடல்நிலை அபாயம் என்ற தகவல் வந்தது. அந்தத் தகவல் தந்தி வடிவிலோ, தொலைபேசி அழைப்பாகவோ வரவில்லை. ஒரு ஆவி உருவம் யோகானந்தரின் முன்பாய் தோன்றி, அதிகாலை நான்கு மணி புகையிரதத்தைப் பிடித்து கொல்கத்தாவிற்கு உடனே செல்லுங்கள் என்றது. அவர் தந்தையை வற்புறுத்தி புறப்படச் செய்தார். அவர்கள் கொல்கத்தா வீட்டைச் சென்றடைந்தபோது தாயின் உயிரற்ற உடலையே காண முடிந்தது.

யோகானந்தரின் வாழ்வில் இப்படி எத்தனையோ முறை தெய்வீக வழிகாட்டல்கள்



இருந்திருக்கின்றன. பல அதிசயங்கள் நிறைந்தது அவருடைய வாழ்க்கை.

தாய் மரணமடைந்து ஓராண்டு கழிந்த நிலையில் அவருடைய அண்ணன் சிறிய பேழையொன்றை அவரிடம் தந்தார். "நம்முடைய அம்மா உன்னிடம் கொடுக்கச் சொன்னது" என்றார். அவர்கள் குடும்பம் பஞ்சாபில் இருந்த போது ஒரு மகான் தந்த தாயத்து அந்தப் பேழையில் இருந்தது. மரணப்படுக்கையில் இருந்த தாய் அதை யோகானந்தரிடம் கொடுக்கச் சொல்லியிருக்கிறாள்.

அத்துடன் மற்றொரு செய்தியையும் அண்ணன் யோகானந்தரிடம் தெரிவித்தார். யோகானந்தர் குழந்தையாக இருந்த போது லாஹிரி தமது கையை குழந்தையின் நெற்றியில் வைத்தாராம். அவ்விதமாய் அவர் ஞானோபதேசம் செய்திருக்க வேண்டும். அவர் குழந்தையின் தாயிடம் "அம்மா, உன்மகன் ஒரு யோகியாவான். ஆன்மீகத்தில் பலருக்கும் அவன் வழிகாட்டியாகத் திகழ்வான்" என தெரிவித்திருக்கிறார். அது முதல் யோகானந்தர் ஆன்மீகப் பயணமாய் பல இடங்களுக்குச் செல்வது வாடிக்கையாகி விட்டது.

எப்படியும் உயர்நிலைக் கல்வியை முடித்து விடுவதாக தந்தைக்கு வாக்களித்திருந்தார் அவர். எனினும், வகுப்பிற்குச் செல்வதைவிட கங்கையில் குளிக்கச் செல்வதுதான் அதிகமாயிருந்தது. லாஹிரிமகாசயரைக் கண்டு வணங்கவும் அவர் அடிக்கடி சென்று வருவார். லாஹிரிக்கு அவரிடம் கொள்ளைப் பிரியம்.

### "நண்பனைத் தேடி"

யோகானந்தருக்குப் பயணத்தில் ஆர்வமா? மகான்களைச் சந்திக்கச் செல்வதில் ஆர்வமா? என்று நம்மால் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. நாம் பிரித்தறிய முடியாதபடிக்கு இரண்டிலும் ஆர்வம் உள்ளவராகவே இருந்தார் அவர்.


ஒரு சமயம் அவர் காசிக்குச் சென்றிருந்தார். அங்கே தயானந்தரின் ஆசிரமத்தில் சிலநாள் தங்கினார். அவருடைய சிநேகிதன் ஜிகேந்திரன் அங்கு தங்கியிருந்தான். அவனைச் சந்திப்பதும், அவனுடன் சேர்ந்து பொழுதைக் கழிப்பதும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. ஆனால் இரண்டு விடயங்கள் அவருக்குச் சங்கடமாய் தெரிந்தன. "கையில் பணம் வைத்துக் கொள்ளக்கூடாது" என்று தயானந்தர் கண்டிப்பாகச் சொல்லியதும், குறிப்பிட நேரத்தில் மட்டுமே சாப்பிட முடியும் என்கிற ஆசிரமக் கட்டுப்பாடும்தான். யோகானந்தர் வீட்டில் ஒன்பது மணிக்கே காலை உணவு உண்டு பழகியவர். ஆசிரமத்தில் முதல் உணவு பகல் பன்னிரெண்டு மணிக்குத்தான் பரிமாறப்படும்.

தம் வயதொத்த பிள்ளைகளைப் போல் கேளிக்கைகளில் ஈடுபடுபவரல்ல அவர். அவருக்கு விளையாட்டையும் படிப்பையும்விட தியானமே கண்.

"உன் குருவை நீ சந்திக்கப் போகிறாய்" என்றொரு குரல், ஒரு தெய்வீகக் குரல் ஒலித்துக் கொண்டேயிருந்தது. யோகானந்தர் அந்தக் குரலை நம்பினார்.

"நீ குருவைத் தேடிச் செல்ல வேண்டாம். உரிய நேரத்தில் குருவே உன்னைத் தேடி வருவார். தமது சீடனை குருதான் தேர்வு செய்கிறார்" என்பார்கள். தமது குருவின் வருகைக்ககாகக் காத்திருந்தார் யோகானந்தர்.

(தொடரும்...)



## எல்லாம் முன்வினைப்பயன்!

எல்லாம் முன் வினைகளின் பயனே என்பதை மனிதன் எப்போது உணர்கிறானோ, அப்போதே அவனுக்கு ஏற்படும் இடர்கள் எல்லாம் நிலை குலைய ஆரம்பித்துவிடும். கூடவே, உரிய பரிகாரங்களையும் செய்து கொண்டால் பாதிப்புகள் பெருமளவில் நம்மைத் தாக்காமல் போகும்.

# பாண்டவர்களின் மத்ஸ்யதேசப் பிரவேசம்



**யுதிஷ்டிரர் திரௌபதியைப் பார்த்து, "மிகவும் நல்லது. ஆனால் இந்த உலகத்தைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது. ஜாக்கிரதை! தீய மனிதர்களின் கொடிய பார்வை உன்மீது படாதவாறு நடந்து கொள்" என்று கூறினார்.**

பிறகு தௌம்யன் மற்றும் பிற பிராமணர்களைப் பார்த்து, "நீங்கள் துருபதனுடைய சபையில் வாழ்வதே உங்களுக்குப் பொருத்தமாக இருக்கும்" என்று கூறினார். இந்த ஏற்பாடுகளின் மூலம் யுதிஷ்டிரர் திருப்தி அடைந்தார்.

பிறகு பாண்டவர்கள் விடைபெற்று, மத்ஸ்ய நாட்டின் பகுதியான யமுனை ஆற்றின் தென்கரைக்கு வந்து சேர்ந்தனர்.

"இந்த இடத்தில் ஒரு பாதை தெரிகிறது. விராட மன்னருடைய தலைநகரம் தொலைவில் தென்படுகிறது. இன்றிரவு நாம் இங்கு தங்கி ஓய்வெடுக்கலாம். நான் மிகவும் களைத்து விட்டேன். என்னால் இனி நடக்க முடியாது" என்று கூறினாள் திரௌபதி. யுதிஷ்டிரர் அர்ஜுனனை நோக்கி திரௌபதியைத் தோளில் சுமந்து வருமாறு கூறினார். அவ்வாறே அர்ஜுனன் திரௌபதியைத் தோளில் சுமந்து செல்ல அவர்கள் விராடனின் தலைநகரை அடைந்தனர்.

"நம்முடைய ஆயுதங்களை எங்கே ஒளித்து வைப்பது?" என்று யுதிஷ்டிரர் கேட்டார். "அதோ அந்த மலையிலுள்ள மயான பூமிக்குப் பக்கத்தில் ஒரு பெரிய மரம் உள்ளது. ஒன்றோடொன்று பிணைந்துள்ள அதன் கிளைகளில் நம் ஆயுதங்களை ஒளித்து வைப்போம்" என்றான் அர்ஜுனன்.

நகுலன் அந்த மரத்தின் மீது ஏறி அதனுடைய வலுவான கிளைகளில் ஆயுதங்களைக் கட்டிவைத்தான். தூரத்திலிருந்து பார்த்தால், அதுஒரு பிணத்தைப் போல் காட்சி அளித்தது. சில இடையர்கள் பாண்டவர்களிடம், "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டனர்.

அதற்கு பாண்டவர்கள், "இது நூற்றெண்பது வயதில் இறந்த எங்கள் தாயாரின் சடலம். சடலத்தை இவ்வாறு மரத்தில் கட்டித் தொங்க விடுவது எங்களுடைய வழக்கம்" என்று கூறினர். பிறகு அவர்கள் விராட மன்னரின் தலைநகரை அடைந்தனர். யுதிஷ்டிரர் அங்கு தனக்கும் சகோதரர்களுக்கும் ரகசியப் பெயர்களைத் தேர்ந்தெடுத்தார். அவை பின்வருமாறு ஜெயன், ஜெயந்தன், விஜயன், ஜெயத்சேனன், ஜெயத்பாலன்.

யுதிஷ்டிரர் மத்ஸ்ய நாட்டிற்குள் பிரவேசிக்கு முன், மானசீகமாக துர்க்காதேவியைப் பிரார்த்தித்து, அவளைத் துதித்தார். சந்தோஷமுற்ற துர்க்கை அவர்கள் முன் தோன்றி "ஓ யுதிஷ்டிரா! நான் உன்னை ஆசீர்வதிக்கிறேன். நீ இழந்த நாட்டை வெகுவிரைவில் பெறுவாய்" என்று கூறினாள்.

பிறகு யுதிஷ்டிரர் விராட மன்னருடைய சபையில் நுழைந்தார். இந்திரனைப் போல சபையினுள் யுதிஷ்டிரர் நுழைவதைக் கண்ட விராட மன்னர் தன்னுடைய ஆலோசர்களைப் பார்த்து, "ரதங்கள். யானைகள், அடிமைகள் என புடைசூழ யாரும் இல்லாவிட்டாலும் ஒரு அரசரைப்போல காட்சி அளிக்கும் இவர் யார்?" என்று கேட்டார்.

யுதிஷ்டிரர் மன்னரைப் பார்த்து பணிவாக, "எல்லாவற்றையும் இழந்து தற்போது தங்களுடைய உதவியை நாடி வந்துள்ள நான் ஒரு பிராமணன்" என்று கூறினார்.

"நான் தங்களை அன்புடன் வரவேற்கிறேன். நீங்கள் யார், எங்கிருந்து வருகிறீர்கள் என்பதை எனக்குச் சொல்லுங்கள்" என்று விராட மன்னர் கேட்டார். அதற்கு யுதிஷ்டிரர், "நான் ஒரு பிராமணன். யுதிஷ்டிரருடைய நண்பன். என் பெயர் கனகன். சதுரங்க ஆட்டத்தில் நான் வல்லவன்" என்று கூறினார்.

விராட மன்னர் யுதிஷ்டிரருக்குத் தன்னுடைய அரண்மனையில் ஒரு தகுந்த இடம் கொடுத்து, அவரைத் தன் சொந்த ஆலோசகராகவும் நியமித்தார்.


"இந்த நாடு எனக்கு எவ்வளவு உரிமையானதோ, அந்த அளவிற்கு உமக்கும் உரிமையானதே" என்று கூறியதிலிருந்து அவர் யுதிஷ்டிரரிடம் கொண்ட மதிப்பு புலனாகிறது.

(தொடரும்)

# உங்களின் செல்லக் குழந்தைகளை நல்வழிப்படுத்துங்கள்!



சிறுவயதிலிருந்தே தெய்வபக்தி தூய எண்ணங்கள். நல்ல பழக்கவழக்கங்கள், நல்லவர்களுடன் பழகுதல் (சத்சகவாசம்), தினமும் ஆலயத்திற்குச் செல்வது, மகான்களின் பாடல்களைக் கேட்பது என்று ஆரோக்கியமான ஆன்மீகப் பொழுது போக்குகளில் குழந்தைகளின் மனத்தைத் திருப்பிவிட்டால் நாம் குழந்தைகள் அவர்களது வயோதிப காலத்தில் கூட மனத் தெளிவுடனும், மனநிறைவுடனும் வாழ்வார்கள். தயவு செய்து உங்கள் வீட்டின் ரி.வி. பெட்டியை மூடி, உயர வைத்து விடுங்கள். பல்லாண்டுகளாக ரி.வி. இல்லாமல் நமது முன்னோர்கள் வாழவில்லையா? ரி.வி இல்லாததால் அவர்கள் என்ன முட்டாள்களாகவா வாழ்ந்தார்கள்? தினமும் காலை, மாலை இருவேளைகளிலும் கந்தர் சஷ்டிக் கவசம், ஸ்ரீஹயக்ரீவர் ஸ்தோத்திரம், ஸ்ரீ அனுமன் ஸ்தோத்திரம் ஆகியவற்றைப் படித்து வரும்படி கூறுங்கள். தினமும் காலையில் நீராடிய பின்பு, சிறிய வெள்ளி கிண்ணத்தில் சிறிதளவு சுத்த ஜலத்தை எடுத்து வைத்துக் கொண்டு "ராம் ராம்" என்ற நாமத்தை 1008 தடவை சொல்லி, அந்த ஜலத்தை உங்கள் குழந்தைகளிடம் கொடுத்துப் பருகும்படி சொல்லி வரவும். ஆறே மாதங்களில் சிறந்த பலன் தெரியும். வேண்டியது நம்பிக்கை மட்டுமே.





போட்ஸ்வானா கபரோனில்


# சிவன் ஆலயம்!

பிரார்த்தனை என்பது மனித சமுதாயத்திற்கு கிடைக்கப்பெற்ற ஒரு வரப்பிரசாத மாகும். பூமியில் படைக்கப்பட்ட உயிரினங்கள் யாவும் தனக்கு துன்பங்கள் நேர்ந்த போதும் நோயில் உழலும் போதும் அவற்றை மன உறுதியுடன் பொறுத்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தை தவிர வேறு வழியேதும் அவற்றிற்கு இல்லை. ஆனால் ஆறு அறிவு படைத்த மனித இனத்திற்கு எவ்வகையிலான துன்பங்களாயினும் அவற்றை களைவதற்கும் குறைப்பதற்கும் இறைவனின் திருவடி எப்போதும் காத்துக் கொண்டிருக்கிறது. பிரார்த்தனை என்பது மனிதர்களுக்கு ஆத்மார்த்தமான அமைதியையும், சாந்தியையும், மன நிம்மதியையும் அளிக்க வல்லதாக இருக்கின்றது.

தீர்க்க முடியாத சில பிரச்சினைகளுக்குக் கூட பெற்ற தாயிடம் செல்வது போல, பெரும்பாலான இந்து சமயிகள் இறைவனின் திருவடியை சரணாகதி அடைகின்றார்கள். நம்பினோர் கைவிடப்படுவதில்லை என்கின்ற அந்த உயர்வான நம்பிக்கை அவர்களை உய்விக்கின்றது என்பது தான் உண்மை. ஆகவே இப்படிப்பட்ட உயர்ந்த பயன்களை தரக்கூடிய பிரார்த் தனையை செய்வதற்கு இந்த உலகில் எந்த மூலையில் இருந்தாலும் ஆலயம் என்ற ஒன்று அவசியப்படுவது இயற்கையே. எனவே தான் உலகின் எந்த மூலையிலும், எந்த பணியை அடிப்படையாக கொண்டு வாழ்ந்தாலும் இந்து சமய மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தான் வாழ்கின்ற இடத்தில் அற்புதமான ஒரு ஆலயத்தை ஏற்படுத்தி தம்முடைய ஆன்மீக தேடல்களுக்கு விடையைக் காண்கின்றார்கள்.

இப்படியானதொரு ஆன்மீக தேடலின் விடையாய் இருப்பது தான் தென் அமெரிக்க எல்லையில் அமைந்திருக்கும் குடியரசு நாடான போட்ஸ்வானாவில் அமையப் பெற்றிருக்கும் சிவன் ஆலயம். போட்ஸ்வானா நாடானது நான்கு புறங்களிலும் நிலத்தால் சூழப்பட்டதாகும். இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் தம்மை பெருமையுடன் "பட்ஸ்வானா" என சொல்லி கொள்கின்றார்கள். தம்முடைய நாட்டின் தனி ஒருவரை குறிப்பிட்டு சொல்லும் போது "மோட்ஸ்வானா" எனவும் சொல் கின்றார்கள். போட்ஸ்வான தேசமானது தாம் விடுதலை பெற்றவுடன் தமது நாட்டின் பெயரை 1966ஆம் ஆண்டு முதல் போட்ஸ்வானா என அமைத் துக் கொண்டது.

அது முதல் தம்முடைய தனித்தன்மையை பாரம்பரிய பண்பாட்டு நடைமுறைகளின் மூலமாகவும் ஜனநாயக அரசியல் மூலமாகவும் நிலைநிறுத்திக் கொண்டது நில அமைப்பின் படி போட்ஸ்வானா



ஆலய நுழைவிலேயே நவக்கிரகங்களுக்கான சன்னதி அமைந்திருக்கின்றது. அதை அடுத்து சிவனுக்கான சன்னதி ஒரு பெரிய லிங்கத்துடன் அமைந்துள்ளது. சிவனின் சன்னதியை சுற்றிலும் பரிவார தெய்வங்களாக கணேசர், சுப்பிரமணியர் மற்றும் பார்வதிதேவி ஆகியோர் அமைந்தி ருக்கின்றார்கள். ஆலயத்தின் சுவற்றை ஒட்டி சிவ பெருமான் சோமாஸ்கந்த வடிவத்தில் தன் னுடைய துணை பார்வதி தேவியுடனும் மக்களா கிய பால கணபதியுடனும் பாலசுப்பிரமணியத்து டனும் காட்சி அளிக்கின்றார். சிவன் சன்னதிக்கு எதிர் புறத்தில் நந்தி தேவர் வீற்றியிருக்கின்றார். ஆலயத்தின் உட்புறத்தில் ஒரு பெரிய கூடம் அமையப் பெற்றுள்ளது. அங்குள்ள ஒரு சிறிய மேடையின் மீது ஸ்ரீராமர், சீதா, லட்சுமணர் மற்றும் அனுமார் ஆகியோரின் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இங்கும் ஒரு சிவன் சிலை உள்ளது.

தேசமானது மலைகள் அதிகமில்லாமல் தட் டையான அமைப்பை கொண்டிருப்பதோடு சுமார் 70% நிலப்பரப்பு கடுமையான பாலைவனமாகவும் காட்சியளிக்கின்றது. இந்த பாலைவனம் காளகாரி பாலைவனம் என அழைக்கப்படுகின்றது. இந்த உலகில் மிக குறைந்த ஜனத்தொகையை கொண்ட நாடுகளில் போட்ஸ்வானாவும் ஒன்றாகும். நாட்டின் 10% மக்கள் தலைநகர் கபரோனில் வசிக்கின் றார்கள். தனி நபர் வருடாந்திர வருமானத்தை மிகக் குறைவாக கொண்டிருந்த போட்ஸ்வானா இப் போது வளர்ச்சி பாதையை நோக்கி முன்னெடுத்து செல்கின்றது.

போட்ஸ்வானாவின் தலைநகரான கபரோனில் கால்டெக்ஸ் என்னும் பெற்ரோல் நிரப்பும் நிலை யத் திற்கு பின்பாக ஹிந்து ஹால் என்னும் பிரபலமான பெயருடன் அமைந்திருக்கின்றது சிவன் ஆலயம். இந்த ஆலயம் மருவபுலா றொபோட்ஸ்க்கு மிக அருகாமையில் அமைந்திருக்கின்றது. வெகு காலங் களுக்கு முன்பாக பலவிதமான தொழில் வியா பாரம் முதலியவற்றின் அடிப்படையில் இங்கு வந்து குடியேறிய இந்து மக்கள் இந்த சிவாலயத்தை தம்முடைய ஆன்மீக தேவைகளுக்காக உருவாக் கியிருக்கின்றார்கள். மேலும் இந்த நாட்டில் இருக் கின்ற ஒரே சிவாலயமும் இதுவே தான். இந்த ஆல யத்திற்கு அருகிலேயே பிரசித்தி பெற்ற பிரின்சஸ் மரீனா மருத்துவமனை மற்றும் புகழ்மிக்க கபரோன் சன் என்னும் ஹோட்டலும் அமைந்திருக்கின்றன. ஆலயத்தின் முகப்பிலேயே ஓம் என்னும் அமைப்பு மிகப் பெரிய அளவில் இந்து மதச் சின்னமாக நிறு வப்பட்டுள்ளது. கபரோனில் அமைக்கப்பட்டுள்ள ஒரே இந்து ஆலயம் என்பதால் இதனை யாரும் எளிதில் அடையாளம் கண்டு கொள் எலாம்.

கபரோனின் சிவா ஆலயத்தில், மகா சிவராத்திரி, ஸ்ரீராம நவமி, தசரா விழா, தீபாவளி விழா ஆகியவை வெகுச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.

பக்தர்களின் தரிசனத்திற்காக ஆலய வளாக மானது காலை 05.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை தொடர்ந்து திறந்திருக்கின்றது.

பூஜைகள் செய்யப்படும் போது, இங்கு அமைந்துள்ள அனைத்து தெய்வங்களுக்கும் தீபராதனைகள் செய்யப்படுகின்றன.

◀◀ அபிதா மணாளன்



# ஆசையை முறைப்படுத்துங்கள்!

வறுமையும், ஐந்து பெரும் பழிச் செயல்களும் தான் உலக மக்களுக்கு என்றுமே வருத்தமளித்து வருகின்றன. இவையோ முறைப் படுத்தப்படாத அறுவகை மாணா மன நிலைகளால் தான் தோன்றுகின்றன. இவ்வுண்மையை முற்காலப் பேறறிஞர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அவ்வாறு உணர்ந்ததாலேயே "சமயங்கள்" என்ற பெயரால் மக்களுடைய எண்ணம், சொல், செயல்களை ஒழுங்குபடுத்த முற்பட்டனர். இறைவழிபாடு என்னும் தெய்வ வணக்கம் மூலம் மக்களின் மனநிலையை உயர்த்தவும் மாணா மன நிலைகளை மாற்றவும் வழிகாட்டியுள்ளனர். உயிர் வாழ்பாடு எனும் அறநெறி மூலம் செயல்களில் தூய்மை பெறவும் செய்தனர். அத்தகைய பக்தி நெறியோடு மனிதனுக்குச் சிந்தனையால், தானே உணர்ந்தாற்றும் விளக்க நெறியும் இப்போது தேவை.

இக்காலத்தில் விஞ்ஞான அறிவு விரைவாக முன்னேறிக்கொண்டு வருகின்றது. செயலுக்கும், விளைவுக்கும் உள்ள தொடர்பைத் தெளிவாகச் சிந்தித்து உணரும் ஆற்றல் மக்களிடம் பெருகி வருகின்றது. விளைவறிந்து விழிப்போடு செயலாற்றி வாழும் இக்காலத்தில் சிந்திக்கும் ஆற்றல் பெற்ற எல்லோரும் தங்கள் உணர்ச்சி வயமாகும் அறுவகை மனோநிலைகளை ஒழுங்குபடுத்திக் கொள்வது இனறியமையாத தாகி விட்டது. எல்லா சமயங்களின் முடிவான நோக்கமும் இதன் மூலமே நிறைவு பெறும் என்பது திண்ணம். முறையான பயிற்சியும், முயற்சியும் எளிதில் இத்துறையில் வெற்றி கிட்டச் செய்யும். பல ஆண்டுகள் தொடர்ந்த ஆராய்ச்சியினாலும் பலர் பயின்று கைவரப் பெற்ற வெற்றியாலும் கண்ட "அறுகுணச் சீரமைப்பு" முறையை நான் இங்கு உங்களுக்கு விளக்குகிறேன். நீங்களும் இத்துறையில் பயன்பெற வேண்டுமென்ற அன்பு நினைவால் விளக்குகின்றேன்.



## பிரார்த்தனை பலன்கள்

மலையில் இருந்து புறப்படும் ஆறுகள் பலநிலைகளை கடந்து கடலில் கலக்கிறது. அணைகள் கட்டி ஆற்று நீரை நாம் பயனுள்ள வகையில் பயன்படுத்துகிறோம். அதுபோல பரிகாரங்கள் என்பது பிரார்த்தனை. இறைவனை பக்தி சிரத்தையுடன் வேண்டுதல், கடமை தவறாது இருத்தல் போன்ற காரியங்களால், கிரக சஞ்சாரங்களால் ஏற்படும் தீய பலன்களை குறைத்து அதன் மூலம் நன்மை ஏற்படவே பரிகாரங்களைச் செய்கிறோம். பரிகாரங்கள் எளிமையாக இருக்க வேண்டும். ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும். செய்ய வேண்டிய கடன் இருக்கிறதே என்று செய்யக்கூடாது. பக்தி சிரத்தையுடன் செய்யும் பரிகாரங்களுக்கு பலன் அதிகம்.

### அறுகுணச் சீரமைப்புக்கான பயிற்சி முறை

முதலில் ஆசையைப் பற்றி அறிந்து கொள்வோம். ஆசையை ஒழித்து விட முடியாது. ஒழிக்கவும் கூடாது. உயிர் இயங்குகின்றது என்பதற்குச் சான்று ஆசையேயாகும். உயிர் இயங்கினால் தான் உணர்ச்சிகள் எழும். உணர்ச்சிகள் எழுந்தால் தான் தேவைகள் எழும். தேவைகளின் எடுத்துக் காட்டே ஆசை என்ற மனமலர்ச்சி. ஆசையில்லையேல் எந்தச் செயலையும் செய்ய முடியாது. ஆசையை ஒழித்துவிட முனைந்தால் அது இயற்கையின் ஒழுங்கமைப்பை அறியாத மயக்கமே ஆகும். எனவே ஆசையை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். துன்பம் எழாத அளவிலும் முறையிலும் அதனைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏன்? நாம் இன்பமாக வாழ விரும்புகிறோமல்லவா? அந்த நல்விழைவினால் ஆசையை அளவு முறை என்ற காப்போடு ஆள வேண்டும்.

ஆசை எழும்போது, அதாவது ஏதோ ஒரு பொருளை நாம் விரும்பும் போது அறிவிலே விழிப்போடு இருக்க வேண்டும். தவறினால் பல தீய விளைவுகள் உண்டாகும். வாழ்க்கையில் எளிதில் தீர்க்க முடியாத பல சிக்கல்கள் தோன்றி விடும். ஒரு பொருள் மீது ஆசை எழும்போது அதனோடு உறவு கொண்டு கண்ட முன் அனுபவம், தற்காலச் சூழ்நிலை. எதிர்கால விளைவு இம் மூன்றையும் ஒன்றிணைத்து நோக்க வேண்டும். அப்போதுதான் அறிவு தனது நிலை பிறழாது. மயக்கமுறாது. நலம் என உணர்ந்தால் அளவோடு முறையோடு அப்பொருளைப் பெறவும், துய்க்கவும் முயல வேண்டும். அறிவில் விழிப்போடு இருக்கும் வரையில் மாணா மனநிலை என்பது ஏது?

ஒருவருக்குப் பல பொருட்கள் மீது விருப்பம் எழலாம். அவற்றை வரிசையாகக் குறித்துக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒரு பொருளின் தேவை இன்றியமையாததா, அதனை அடையத் தனது ஆற்றலும் சூழ்நிலைகளும் ஒத்து இருக்கின்றனவா, கணிக்கும் அல்லது எதிர்பார்க்கும் விளைவுகள் என்ன, இவற்றைக் கொண்டு சிந்தனை

செய்யுங்கள், தேவையும், ஆற்றலும், சூழ்நிலையும், விளைவாகக் காணும் நலனும் ஒத்திருந்தால் அதனை அடைய முறையான முயற்சியை உருவாக்கிக் கொள்ளுங்கள். செயலாற்றி வெற்றி பெறுங்கள். இல்லையெனில் "இன்னின்ன நிலைமைகளால் இந்த ஆசையை நான் நீக்கிக் கொள்கிறேன்" என்று பல தடவை காலை மாலை அதற்கென உட்கார்ந்து தானே மனதிற்கு உறுதி கூறிக்கொள்ள வேண்டும். சில குறிப்பிட்ட பொருட்களைப்பற்றி இவ்வாறு முடிவு செய்து கொண்டால் மீண்டும் பிற பொருள் மீது முறையற்ற அவா எழாது. நலம் தரும் பொருட்களைப் பெறத் தேவையான ஆற்றலும் நன்கு வளர்ச்சி பெறும். அடுத்தடுத்து வாழ்வில் வெற்றிகள் பல கிட்டும். வாழ்வில் முழு அமைதியும் பெறலாம். இவ்வழியில் ஆசையை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**சினமின்றி வாழ காரணங்கள்**

அடுத்தபடியாகச்சினத்தை எடுத்துக்கொள்வோம். ஆசையின்றி வாழ முடியாது என்று கண்டோம். அதனை முறைப்படுத்தா விட்டால் எழும் தீமைகளை அறிந்தோம். அதனை முறைப்படுத்தவும் வழி வகுத்துக் கொண்டோம். ஆனால் சினம் எனும் கொடிய மனநோயை அடியோடு ஒழித்து விட வேண்டும். முதலில் போதிய வலுவான சூழ்நிலையில் தான் சினம் எழும். பிறகு பழக்கத்தால் மிக எளிதில் அது எழுந்து கொண்டே இருக்கும். அறிவை மயக்கி கேடுகள் பல விளைவிக்கும்.

உடல் நலம், அறிவு நலம், செல்வ நலம், துணை நலம் எல்லாவற்றையும் சினம் சிறுகச் சிறுகவோ. விரைவாகவோ அழித்து விடும். இது ஒரு மன நோயாகவே மாறி வலுப் பெற்றுவிடும். எழுந்த சினம் செயல்படவில்லையேல் தண்டிக்கவோ, சீரழிவு செய்யவோ முடியாத சூழ்நிலையில் எதிரி வலுப் பெற்றிருக்கும் போது அல்லது எதிரியே இல்லாத நிலையில் சினமே கவலையாகவும், கண்ணீராகவும் மாறி விடும். எனவே இச்சினத்தை எவ்வாறு ஒழிப்பது? நினைவோடு பிடித்து முறையாகப் பயின்று வெற்றி பெறுங்கள். தனியே ஒரு இடத்தில் அமைதியாக உட்கார்ந்து கொள்ளுங்கள்.

உங்களுக்கு யார் மீது அடிக்கடி மிகுதியாகச் சினம் எழுகின்றது? அவரை முதலில் நினைவில் கொள்ளுங்கள் என் சினத்திற்கு அவர் தான் காரணமா? அல்லது என் தவறும் துணையாக உள்ளதா? என் தவறு எத்தனை சதவீதம்? என் தவற்றைத் திருத்திக் கொள்ள இதுவரை யான் எடுத்த முயற்சி என்ன? அவர் தவறை நான் என் சினத்தின் மூலம் போக்க முடிந்ததா? இவ்வாறு சிந்திக்கும் போது சினத்தால் இழந்த இழப்புகள் நினைவிற்கு வரும்.

உங்கள் தவறு இருந்தாலும் அங்கே தெளிவாகத் தெரியும். சினத்தை ஒழித்துவிட வேண்டும் என்ற முடிவும் ஓங்கும்.

வேதாத்திரி மகரிஷி





# சிவனை அடைவது எப்படி?

சத்குரு ஜக்கி வாசுதேவ்

சிவன் என்னும் பரிமாணத்தை நம் கலாசாரம் கதை வடிவமாக சொல்லி வந்திருக்கிறது. அந்தக் கதையிலிருந்து ஒரு கணக்கு சூத்திரத்தை நம்மால் உருவாக்கிக் கொள்ள இயலும். ஆனால், சூத்திரங்களை கண்டறியும் முயற்சியில் பல பேருக்கு புத்தி கழண்டுவிடுகிறதுஎன்பதே உண்மை. பல ஆயிரம் பக்கங்களுக்கு பார்முலாக்கள் எழுதிய பின்னரும் ஒரு விடயம் முற்றுப்பெறாமல் இருப்பதை கணிதவியல் அறிஞர்கள் உணர்கின்றனர். எண்களால் ஏதோ "ஒன்றை" விளக்க முடியும், ஒன்றும் "அற்றதை" விளக்க இயலாது. ஏனெனில், எண்கள் முற்றுபெறக் கூடியவை.

சிவனெனும் அந்தப் பரிமாணத்தை அதுவென்றும் இதுவென்றும், அவனென்றும் இவனென்றும் அழைக்க இயலாது. ஏனெனில் அந்தப் பரிமாணம் இதுவுமில்லை அதுவுமில்லை. அதனால் தான், அவனை பாதி ஆண், பாதி பெண்ணாய்

சித்திரிக்கிறோம். அவன் ஆண்மையின் உச்சம், ஆனால் அவனில் பாதி பெண். இந்த பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டே செல்கிறது என்கிறார்கள். எதற்குள் விரிவடைகிறது? அசைவில்லாத வெறுமைக்குள் விரிவடைகிறது. "சிவா" என்றால் எது இல்லையோ அது அதாவது ஒன்றுமற்ற ஒரு வெளிக்குள், சிவனுக்குள் இந்த பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டிருக்கிறது என்கிறார்கள். சிவனை எப்போதுமே அசைவில்லாதவன் என்போம், அல்லது பரவசத்தின் உச்சம் என்போம். ஒன்று அவன் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறான் அல்லது அசைவில்லாமல் இருக்கிறான்.

அவன் பேரானந்த தாண்டவத்தில் இருக்கும் ஒரு கடவுள். அவன் தீவிர தாண்டவத்தில் இருக்கிறான் அல்லது அசைவற்ற நிச்சலனத்தில் இருக்கிறான் என்பார்கள். இது பிரபஞ்சத்தை ஒத்த ஒரு சித்திரிப்பு. பிரபஞ்சத்தின் ஒரு பரிமாணம் அசைவில்லாம் நிச்சலனமாய் இருக்கிறது. மற்றொரு பரிமாணம் தாண்டவத்தில் இருக்கிறது. அணுவிலிருக்கும் மூலக்கூறுகளை அருகாமையில் பார்த்தால் ஒரு அழகான நடன அசைவாய் அது இருப்பதைப் பார்க்கலாம். "அதெல்லாம் சரி, அப்போது யோகி என்று சொல்கிறீர்களே அந்த மனிதன் யார்?" என்ற கேள்வி உங்களுக்குள் எழும்புவது இயல்பு தான்.



நீங்கள் எதனை உணர்ந்து கொண்டீர்களோ, அதுவாகத்தான் இருக்கிறீர்கள். அந்த யோகி எல்லையில்லாததை உணர்ந்தவன். அதனால் அவனை சிவன் என்று அழைக்கிறோம். நம் நாட்டில் பெரும்பாலான மனிதர்களின் பெயர் "சிவன்" என்று இருக்கிறது. இன்று நாம் நவீன மனிதர்களாகி விட்டதால், அந்த எண்ணிக்கையும் குறைந்து விட்டது. தன்னை ஜேக் சாம் என்று பலவாறாக அழைத்துக் கொள்கின்றனர்.

"எதற்காக மனிதர்கள் தனக்கு சிவனென்று பெயரிட்டுக் கொண்டனர்?" என்று நீங்கள் கேட்கலாம். அவர்களது பெற்றோர் பக்தர்களாய் இருந்திருக்கலாம். சிவன் என்ற பெயரைத்தவிர வேறொன்றை உச்சரிக்க அவர்களது மனம் ஒத்துழைக்காமல் போயிருக்கலாம். இரவும் பகலும் "சிவா, சிவா, சிவா, சிவா..." என்று உச்சரித்துக்கொண்டே இருக்க இந்த வாய்ப்பை பயன்படுத்தி இருக்கலாம். ஒருவர் சிவனாய் வளரத் துடிக்கும் பருவத்தில், "நீ இன்னும் சிவனாய் மாறவில்லை. நீ சிவனாய் மாற வேண்டும் என்று உனக்கு நினைவூட்டுகிறேன்," என்று சொல்லும் விதமாய் அந்தக் காலத்தில் அப்பெயரிட்டு அழைத்திருக்கலாம்.

**சிவன் என்பது ஒரு பாதை. அதனை நீங்கள் நம்பத் தேவையில்லை. அதனுடன் நீங்கள் முழுதாய் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது மட்டுமே அவசியம்!**

சிவா, சிவா என்று சொல்லி அதைச் சுற்றியே பல வாழ்க்கை முறைகளை அமைத்தது மதத்தின் வசதிக்காக அல்ல. அது மதமும் அல்ல. சிவன் என்பது ஒரு பாதை. அதனை நீங்கள் நம்பத் தேவையில்லை. அதனுடன் நீங்கள் முழுதாய் உங்களை ஈடுபடுத்திக்கொள்வது மட்டுமே அவசியம். அதனுடன் உங்களை ஈடுபடுத்திக் கொண்டு, அந்த செயல்முறையின் அங்கமாகும்போது அந்த பரிமாணத்தை சுவைக்க தொடங்குவீர்கள். சிவனை நம்பத் தொடங்கினால், சிவனின் ரசிகர் மன்றத்தில் மட்டுமே இணைய முடியும். ஆனால், சிவன் எனும் அந்த கதையில் நீங்கள் அங்கமாய் மாறினால், அந்தக் கதை உங்கள் வளர்ச்சிக்கு வித்தாய் அமையும். அப்படித்தான் அதனை அமைத்திருக்கிறார்கள்.

சிவன் கோவிலுக்குச் சென்று நீங்கள் வழிபட்டால், அவனுக்கு உங்கள் மீது நாட்டம் ஏற்படாது. அதுவே அவனுடன் தாண்டவம் ஆடினாலோ அவனைப் போல் அசைவற்று அமர்ந்தாலோ, அவனுக்கு உங்களைப் பிடிக்கும். அசைவில்லாமல் அமர இயலவில்லையா, ஆடுங்கள். தாண்டவம் ஆடுங்கள். தாண்டவம் ஆடிட இயலவில்லையா? அமருங்கள், அவன் போல் அசைவற்று அமருங்கள். இவை இரண்டுமே வேலை செய்யும். ஆனால் இரண்டும் கட்டான் நிலையில் இருப்பது அவனிடம் வேலை செய்யாது. ●



## இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

சனிக்கிழமைகளில் நவக்கிரக தரிசனம் செய்து மூன்று நல்லெண்ணெய் தீபம் இட்டு மேற்கு முகம் அமர்ந்து உங்களை வேண்டுதலை சொல்லி வர விரைவில் நடக்கும்.

### இம்மாதம் அதிர்ஷ்ட கிழமைகள் : புதன், வெள்ளி, சனி



# மிதுனம்

### துர்முகி ஆண்டு புரட்டாதி மாதம் 17.09.2016 முதல் 16.10.2016

சுறுசுறுப்பாக இயங்கி தன்னை மேலும் உயர எண்ணும் மிதுன ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு செவ்வாய் பார்வை பெறுவதும் சாதகமான சூழ்நிலையில் ராசிநாதன் அமர்வதும் உங்களின் செயல்களால் மேலும் முன்னேற்றம் பெறுவீர்கள். பதிய முயற்சிகளை தவிர்த்து விடுவது நல்லது. உங்களின் பொருளாதார நிலை ஒரே சீராக இருக்கும்.

**பணியாளர்களுக்கு**

பணியின் போது உங்களின் கடமைகளை சரியாக செய்தாலும் கூடுதல் பணி சுமை உங்களின் மன நிலை பாதிப்பை தரும். தொழில் ஸ்தானாதிபதி குரு உங்களுக்கு அதிக பாதிப்பை தராவிட்டாலும் உடல் நல குறைவு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் உங்களின் உடல் நலனை கவனிப்பது நல்லது. பொருளாதார நிலை சம்மாக இருக்கும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது விடயங்களில் உங்கள ஆலோசனைகளை பெறுவார்கள். காரியங்களில் உங்களை தவிர்த்து விட்டு சென்று வருவார்கள். உங்களின் செயல்பாடுகளில் குறை எதுவும் காணாதபடி செயல்படுவீர்கள். உங்களின் பேச்சாற்றல் அனைவரையும் கவரும் வகையில் அமையும்.

**வியாபாரிகளுக்கு**

வியாபாரத்தில் கவனம் செலுத்தி சமயோசிதமான செயல்களால் வியாபாரத்தை பெருக்கி கொள்வீர்கள். தங்க நகை அடவு, கவரிங் நகைகள், ஆயத்த ஆடைகள் வியாபாரம் சிறப்பாக அமையும். வெளியூர் சென்று வியாபாரத்தை விருத்தி செய்யும் வாய்ப்பும் அமையும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையில் வசனகர்த்தா, பாடல் ஆசிரியர்களில் சிலருக்கு வாய்ப்புகள் அமையும். நடிகர்களுக்கு ஆடைகளை வடிவமைக்கும் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். எதையும் மறைக்காமல் வெளிபடையாக பேசும் திறனால் அனைவரின் அன்பை பெறுவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**பெண்களுக்கு**

பெண்களின் அன்றாட செயல்களில் திறம்பட செயல்படுவீர்கள். வெளி தோற்றத்திற்கு எளிமையாக இருந்தாலும் ஆடம்பர செலவுகளை செய்வீர்கள். புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. பொருளாதார நிலையில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

**மாணவர்களுக்கு**

மாணவர்களின் கல்வி திறமை சிறப்பாக அமையும் ஆரம்ப கல்வி முதல் உயர் கல்வி வரை நல்ல கல்வியை பெறுவீர்கள். எலக்ட்ரிக்கல், இலத்திரனியல் கல்வி இன்னும் சிறப்பாக அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

09.10.2016 ஞாயிறு இரவு 09.56 முதல் 12.10.2016 புதன் அதிகாலை 04.50 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

**மிருகசீரிடம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

விடாமுயற்சிகளில் மூலம் உங்களின் செயல்கள் வெற்றியை தரும். துரித பரிவர்த்தனைகளால் நடவடிக்கைகள் விரைவில் முடிவுக்கு வரும். பொருளாதாரம் சிறக்கும்.

**திருவாதிரை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

எதையும் அவசர அவசரமாக செய்யாமல் நிதானமாக செய்வதால் தடைப்பட்ட காரியம் விரைவில் முடியும். திடீர் அதிர்ஷ்டம் பெறுவீர்கள். லொத்தரில் பணம் வரும்.

**புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

முகமலர்ச்சியும், பேச்சில் கனிவும் உங்களை எழுச்சியுடன் செயல்பட உதவியாக இருக்கும். உங்களின் தெளிவான பேச்சு அனைவரின் மன அமைதியை தரும். பொருளாதாரம் வளம் பெறும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**

பச்சை, வெண்மை, நீலம்

**அதிர்ஷ்ட திசைகள் :**

மேற்கு, தென்மேற்கு, கிழக்கு

# கீதை ஒரு வற்றாத ஆன்மீகச் சுரங்கம்!



பகவத்கீதை மிகவும் உயர்ந்த ஆன்மீகக் கருத்துக்களை வழங்கும் வற்றாத சுரங்கமாக விளங்குகிறது. தனது பக்குவத்திற்கேற்ப, புதிய புதிய உயர்ந்த கருத்துக்களை கீதா மாதாவிடமிருந்து ஆன்மீக சாதகர்கள் பெற முடியும்.

கீதையில் இடம் பெற்றிருக்கும், எல்லாத் தர்மங்களையும் விட்டு என்ற சொற்களுக்குப் பல மேற்கோள்களைக் காட்டி, தர்மங்கள், என்ற சொல்லுக்குக் கர்மங்கள் என்று பொருள் கொள்ளும்படி ஆதிசங்கரர் கூறியுள்ளார். அவ்விதம், எல்லாக் கர்மங்களையும் விட்டு, என்று நாம் பொருள் கொண்டால், கர்மங்கள் என்ற சொல் சுயநலத்துடன், பலன்களை எதிர்நோக்கி, நான் செய்கிறேன் என்ற பரவசத்துடன் செய்யும் கர்மங்களையே குறிக்கும். உலகின் நன்மைக்காக (லோக ஸங்க்ரஹத்திற்காக), நான் தான் கர்த்தா என்ற கர்த்ருத்வபாவம் (Sense of doorstep) இன்றிச் செய்யும் கர்மங்கள் கர்மயோகமாக மாறிவிடும். எனவே, "எல்லாத் தர்மங்களையும் விட்டு என்ற சொற்கள் கர்மயோகத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

என்னிடம் சரண் புகுவாயாக என்ற சொற்கள் பக்தியோகத்தைக் குறிக்கிறது. உண்மையான பக்தியின் இலட்சணம் சரணாகதியாகத்தான் இருக்கும். அதாவது ஆத்ம நிவேதனமாகத்தான் இருக்கும். மூன்றாவது சொற்றொடரான நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன் என்பது ஞானயோகத்தைக் குறிக்கிறது என்று கொள்ளலாம். பாவங்களிலெல்லாம் மிகவும் பெரிய பொல்லாத பாவம், ஆத்மாவை உணராத அஞ்ஞானம் என்ற பாவம்தான். இந்த அஞ்ஞானம் என்ற பாவம் ஒழிக்கப்பட்டால் அனைத்து பாவங்களும் ஒழிந்துவிடும்.

கருத்துடன் ஆற்றப்படும் கர்மயோகம், பரவசத்துடன் உண்மையாகக் கடைப்பிடிக்கப்படும் பக்தியோகம் ஆகிய இரண்டும் இறுதியில் ஞானயோகத்தில் நிறைவுபெறும் என்பதே கீதையின் சரம சுலோகத்தின் தாற்பரியமாகும். கீதையின் சாராம்சமே இருந்த சரம சுலோகத்தில் அடங்கியிருக்கிறது என்று பெரியோர்கள் கருதுகிறார்கள்.





# ராகு தோஷ நிவர்த்தித் தலமாய் திருநாகேஸ்வரம்!

பக்தர்களுக்கு பல நன்மைகளை அருளும் இத்தலம் கும்பகோணத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ளது. அருள்மிகு நாக நாதசுவாமி திருக்கோயிலின் பிரகாரத்தில் தென்மேற்கில் தமது தேவியர் இருவருடன் ராகு பகவான் எழுந்தருளியிருக்கிறார். இறைவியின் பெயர் பிறையணி அம்மன். இத்தலத்தில் மறொரு அம்மன் கிரிகுஜாம்பிகை.

**நாக அரசராகிய ராகு பூசித்தமையால் இத்தலத்திற்குத் திருநாகேஸ்வரம் எனப் பெயர் பெற்றது.**

ஜோதிடமுறையில் பார்க்கும் போது இராகு பகவானின் பெருமை அளவிடற்கரியதாகும். பூமியானது சிறிது நீண்ட வட்டகதியில் சூரிய னைச் சுற்றி வருகின்றது. தனது பாதையில் சந்தி ரன் பூமியை இரு இடங்களில் சந்திக்கின்றது. சந்திரன் மேல்நோக்கிச் செல்லும் போது பூமியின் கதியில் குறுக்கிடும் இடம் இராகு எனவும் சந்திரன் கீழ்நோக்கி வரும் போது பூமியில் குறுக்கிடும் இடம் கேது எனவும் பெயர் பெறும்.

நவகோள்களில் சனியை விட செவ்வாயும், செவ்வாயைவிட புதனும், புதனை விட குருவும், குருவைவிட சுக்கிரனும் சுக்கிரனைவிட சந்திரனும், சந்திரனை விட சூரியனும் இவர்கள் அனைவரையும் விட இராகுவும் கேதுவும் பலம் பொருந்தி விளங்குகின்றனர். சோதிட முறையில் இதனை "நைசர்க்கபலம்" என்றும் கூறுவர்.

## இராகு பகவான் புராணம்

ஷப்ரசித்தி என்ற அரசனுக்கும், சிம்மிகை என்ற அசுரப் பெண்ணுக்கும் மகனாகப் பிறந்தவர் ராகு. பாற்கடலில் அமுதம் கடைந்து எடுத்த போது மோகினி ரூபத்தில் அமுதத்தைத் தேவர்களுக்கு பங்கிட்டுத் தந்தார். மகாவிஷ்ணு அமுதம் சாப்பிட ஆசைப்பட்ட ராகு தேவரைப்போல உருமாறிச் சென்று அமுதம் பருகினார். சூரியனுக்கும், சந்தி ரனுக்கும் சந்தேகம் ஏற்படவே திருமாலிடம் ராகுவைக் காட்டிக் கொடுத்தனர். உடனே விஷ்ணு பகவான் தன்கையில் இருந்த கரண்டியால் ராகுவின் தலையைத் துண்டித்தார். தலையற்ற முண்டமாக ராகு தரையில் விழுந்தான். ஆனால் இறக்கவில்லை. அப்போது பைடிஸைன் என்ற தம்பதியர் தலையற்ற ராகுவைத்தம் அரண் மனைக்கு எடுத்துச் சென்று வளர்த்தனர். (உடல் வேறு பகுதியானது அது கேது) தன்னைக்

காட்டிக் கொடுத்த சூரியனையும் சந்திரனையும் சாபமிட்டான். ராகு இதனால் கிரக தோஷம் வந்தது. ராகுவும், கேதுவும் சூரிய சந்திரர் இருவரையும் பிடிப்பது கிரகணம் எனப்படுகிறது.

### சம்புமாலி மன்னன் சாப நீக்கம் பெற்ற வரலாறு

திருநாகேஸ்வர தல புராணத்தில் காணப்படாத ஆனால் வழக்கத்திலிருந்து வரும் சம்புமாலி மன்னன் சாபம் நீக்கம் பெற்ற வரலாறு மிகச் சுவை யானது. கேரள நாட்டு மன்னனாக விளங்கிய சம்புமாலி என்பவன் பொன்னால் பல அறங்கள் செய்து வந்தான். ஒரு நாள் காலங்கரி முனிவர் அவனிடம் சென்ற போது, அதற்கு முதல்நாளே அவன் அறத்தைமுடித்து விட்டானாதலால் அவ னால் அம்முனிவருக்கு பயன்கிட்டவில்லை. வெகுண்ட முனிவர் அவனை "அலகையுருப்பெற்று அலைக" என சாபமிட்டார். முனிவரிடம் அவன் சாபவிமோசனம் வேண்டினான். பேய் உருவுடன் 1008 சிவத்தலங்களுக்குச் சென்று வணங்கி கடைசியில் செண்பகவனம் எனும் திருநாகேஸ்வரம் சென்று சூரியபுஷ்கரணியில் நீராடி நாகநாதப்பெருமானையும் வழிபட்டுச் சாபவிமோசனம் பெறுக என்றார். அவ்வாறே சென்று திருநாகேஸ்வரத்தில் சம்புமாலி விமோசனம் பெற்றதாக கூறப்படுகிறது. சம்புமாலியின் உருவம் இக்கோயில் அலங்கார மண்டபத்தில் ஒரு தூணில் காணப்பெறுகிறது.

### ராகுக்கிரக பரிகாரங்கள்

ராகு பகவானுக்கு உரிய நாளாகிய ஞாயிற றுக்கிழமை விரதம் இருந்து, கறுப்பு அல்லது நீல வண்ண ஆடை அணிந்து கோமேதகம் அணிந்து, ராகு பகவானுக்கும் நீலநிறம் அல்லது கறுப்புநிற ஆடை அணிவித்து நீலமந்தாரை மலராலும், இலுப்பைப் பூவாலும் அலங்கரித்து, அருகு சமித்துக் கொண்டு தூபம் காட்டி நெய்விளக்கு ஏற்றி, உளுத்தம் பருப்புப் பொடி சாதம் நிவேதனம் செய்து, மற்றவர்களுக்கும் தானம் அளித்திட வேண் டும்.

### விளக்கு பரிகாரம்

திருநாகேஸ்வரம் திருக்கோயிலில் தோஷங்கள் நீங்குவதற்குக் கீழ்கண்ட முறையில் விளக்குகள் ஏற்றினால் பரிகாரம் உண்டாகும்.

ராகுதோஷம் நீங்க 21 தீபங்கள், திருமணத் தோஷம் நீங்க 21 தீபங்கள், புத்திர தோஷம் நீங்க 51 தீபங்கள், சர்ப்பதோஷம் நீங்க 48 தீபங்கள், களத்திரதோஷம் நீங்க 108 தீபங்கள், சனிதோஷம் நீங்க 9 தீபங்கள், குருதோஷம் நீங்க 33 தீபங்கள், செவ்வாய்தோஷம் நீங்க 9தீபங்கள், ஈஸ்வரனுக்கு 11 தீபங்கள், துர்க்கைக்கு 9 தீபங்கள். ராகுபகவான் ரிஷபத்தில் உங்கள் ஜாதகத்தில் நீசம் பெற்று இருந்தாலும் பகை பெற்று இருந்தாலும் 7, 8இல் இருந்தாலும் புத்திர தோஷம், களத்திரதோஷம், காலசர்ப்ப யோகம், மாங்கல்ய தோஷம் போன்ற தோஷங்களுடன் கூடிய அமைப்புக்களில் இருந்தாலும், ராகு திசை, ராகு புத்தி நடந்தாலும், ராகு காலத்தில் பிறந்திருந்தாலும் 4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் பிறந்திருந்தாலும் சதயம், சுவாதி, திருவாதிரை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்திருந்தாலும் திரு நாகேஸ்வரம் வந்து ராகு பகவானை, ராகு காலத்தில் பால் அபிஷேகம் செய்து, பரிகார பூஜை செய்து வழிபட்டால் சிறந்த பலன்கள் உண்டாகும்.

தல அமைவிடம் கும்பகோணத்திலிருந்து காரைக்கால் பாதையில் 6 கி.மீ. தூரத்தில் உள்ளது. மயிலாடுதுறையிலிருந்து 32 கி.மீ. தொலைவில் உள்ளது.


■ S.L.S. பழனியப்பன்



### பூஜைக்குரிய சுவாமி படம்!

நாம் பூஜிக்கும் சுவாமி படம், பூச்சி அரித்துக் கெட்டுவிட்டால் அதை ஆற்றிலோ குளத்திலோ விட்டுவிடலாம். அல்லது அதை நீரில் ஊற வைத்து, ஒரு பூச்செடியின் கீழ் விட்டுவிட்டு, வேறு படத்தைப் புதிதாக வைத்துக் கொள்ளலாம்.





அழகர் நம்பி

# தர்மம் சார்ந்த வாழ்வே இயற்கையானது!

நான் பாட்டுக்கு விறகு பிளக்கிறேன். எதுவும் கடினமாகத் தெரியவில்லை. சொல்லப் போனால் அந்த வேலை நேர்த்தியானது. எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. தண்ணீர் அவசியம். கிணற்றில் இருந்து இறைக்காமல் எப்படி? இப்போதெல்லாம் அது ஒரு வேலையாகவே தெரியவில்லை. அது எனக்குப் பிடித்தமாயிருக்கிறது. அந்தப் பெரியவரை நான் நேசிக்கிறேன். இதோ குளிர்காலம் வரப்போகிறது. விறகு அவசியம். நாளுக்கு நாள் குரு முதுமை அடைகிறார். அவருக்குக் கணப்புச் சூடு வேண்டும். அவருடைய அறையின் வெப்பத்தை நாங்கள் பராமரித்தாக வேண்டும். நான் அப்போது விறகு உடைக்கிறேன். அந்த அன்பு மாறாமல் நீர் இறைக்கிறேன். ஆனால், எத்தனை பெரிய வேறுபாடு! முந்தைய எதிர்ப்புணர்வோ, தயக்கமோ தற்போது கிடையாது. அணுவளவும் அகந்தை கொண்டிருக்கவில்லை. யாருடைய உத்தரவுக்கும் நான் கீழ்படியவில்லை. அந்த கணத்தின் தேவைக்கேற்ப எதிர்ச்செயல் (respond) செய்கிறேன்.

*"தர்மத்தைச் சிந்தித்தபடி வாழ்வதே*
*இயற்கை சார்ந்த வாழ்வு"*
*என்கிறார் போதி தர்மர்.*

உங்கள் மூச்சுக் காற்று செயற்கையானதல்ல. அதை கட்டாயத்தின் பேரில் நீங்கள் உட்கிரகிக்கவோ, வெளியிடவோ செய்வதில்லை.

எவ்வித இடையூறுமின்றி, யாருடைய குறுக்கீடுமின்றி அதன் போக்கில் அது நிகழ்கிறது. உங்கள் வாழ்க்கையையும் அவ்வாறே நிகழ விடுங்கள். யாருடைய உத்தரவுக்கோ, அதிகாரத்துக்கோ, ஆதிக்கத்துக்கோ இடமளிக்காதீர்கள். இது உங்கள் வாழ்க்கை, அதை வாழ வேண்டியவரும் நீங்களே! மற்றவர்களின் யோசனைப்படி வாழாதீர்கள். அடுத்தவரைத் திருப்திப்படுத்துவதற்காக, அவர்களுடைய விருப்பத்துக்கு இணங்க வாழாதீர்கள்.



## நவதுர்க்கா வழிபாடு!

கன்னி வடிவத்தில் நவதுர்க்கையின் பெயர்கள் வருமாறு: கௌமாரீ. த்ரிபுரா, கல்யாணி, ரோஹிணி, காமினி, சண்டிகா, சாங்கரீ, துர்க்கா, சுபத்திரா. வனதுர்க்கா, சூலினீ துர்க்கா, சாந்தி துர்க்கா, ஜாதவேத துர்க்கா, சபரி துர்க்கா. ஜ்வால துர்க்கா, லவண துர்க்கா, தீப துர்க்கா, அசுர துர்க்கா என்றும் ஒன்பது துர்க்கா வழிபாடுகள் உண்டு.

*"உங்கள் இதயம் சொல்வதை*
*உற்றுக் கவனியுங்கள்*
*உள்ளிருந்து ஒலிக்கும் குரலை*
*அமைதியாகக் கேளுங்கள்*

அதைப் பின்பற்றி வாழுங்கள். அதுவே தர்மத்தைக் கருத்தூன்றிக் கவனிப்பதும், தர்மத்தில் நிலைத்திருப்பதும் ஆகும்.

"நான் யார்?" என்ற கேள்வியெழும் போது. புத்தரின் சொற்களை நினைவில் கொள்ளுங்கள்.

உங்கள் மனத்தின் அடியாழத்துக்குச் சென்று பாருங்கள். உங்கள் உடலல்ல நீங்கள் என்பதைக் கண்டு கொள்வீர்கள். அதேபோன்று உங்கள் மனமும் இதயமும் நீங்களல்ல என்பதும் உங்களுக்குப் புரியவரும். நீங்கள் வெறும் இருப்புணர்வு (being) மட்டுமே. பிரக்ஞையும் சாட்சியுமாக நீங்கள் இருக்கறீர்கள். ஆக, தியானத்தில் ஆண் என்றும், பெண் என்றும் யாருமே கிடையாது. தியானத்தின்போது உங்கள் அடியாழத்துக்கு நீங்கள் சென்று விடுகிறீர்கள். மேற்பரப்பில்தான் வேறுபாடுகள். புத்த இயல்பில் ஆணுக்கும், பெண்ணுக்குமிடையே எந்த வேறுபாடும் கிடையாது. அவர்களுக்கென்று தனித்தனி செயலுண்மை நிலைகள் (entities) வடிவமைக்கப்படவில்லை.

*"புல்லாகட்டும், மரமாகட்டும்*
*மனிதர்களைப் போல்*
*தூலப் பொருளால் ஆனவைதாம்*
*உயிரினங்கள் அனைத்தும்!*


ஆனாலும், எல்லாவற்றையும் ஒன்றுபோல் பார்ப்பதில்லை நாம். புல், மரம் என்று ஒப்பிடுதலை மேற்கொள்கிறோம். நம் தவறான எண்ணங்களுக்கு (மாயை) அத்தனை வகைப் பெயர்களையும் சூட்டி விடுகிறோம். உளதாயிருக்கிற அனைத்தையும் ஒரு மாயை என்று எவன் கண்டு கொள்கிறானோ, அவனே சராசரி மனிதனைக் காட்டிலும் மேம்பட்ட இடத்தில் இருப்பவன்" என்கிறார் புத்தர்.

சராசரி மனிதன் தன்னுடைய சரீரத்தில் வாழ்கிறான். சரீரமும் தான் என்று எண்ணிக் கொண்டு. மனத்தால் வாழ்பவனோ, அந்த மனமே தான் என்று எண்ணிக் கொள்வான். உடல், மனஅமைப்புகளைக் கடந்து செல்லத் தொடங்கியதுமே நீங்கள் சிறந்த தன்மையுடையவராகி விடுகிறீர்கள். மேம்பட்ட தளத்தில் வாழத் தொடங்குவீர்கள். மேல்தளங்களில் கருத்து. பொருள், செயல் எல்லாமும் வேறாகி விடும்.

உங்கள் மனத்தின் முரண்பாடுகளில் முக்கியமானது, அது எழுப்பும் கேள்விகள்தாம். அது கேட்கிற கேள்விகள் எப்போதுமே சரியாக இருக்கும் என்று சொல்ல முடியாது. காரணம் அந்த மனத்தின் இரட்டைத் தன்மை (duality)

சரியான கேள்விக்குள்ளேயே இருக்கும் அதற்கான விடை தேடிப் பெறுகிற அவசியம் இருக்காது. உங்களால் சரியான கேள்வியைக் கேட்க முடியுமெனில், நீங்கள் கேட்க வேண்டியதில்லை. கேள்வியைப் புரிந்து கொண்டாலே விடையைப் புரிந்து கொண்டு விட்டது போலத்தான். எதுவுமே இல்லாத மனத்தால் மட்டுமே (nomind) அத்தகைய கேள்வியைக் கேட்க முடியும். ஆனால், அது கேட்பதில்லை.

மனம் கேள்விகளைக் கேட்கிறது. ஆனால், அது எழுப்புகிற கேள்விகள் எல்லாமே தவறாக இருக்கின்றன. காரணம், மனமே தவறாக இருக்கின்றது. தவறான கேள்வி ஒருபோதும் உங்களைச் சரியான விடையை நோக்கி இட்டுச் செல்வதில்லை. மனம் லட்சோபலட்சம் கேள்விகளைக் கேட்கும். ஆனால் அதற்கான விடைகளை எங்கு தேடினாலும் கிடைக்காது. உங்கள் மனம் இரட்டைத் தன்மையில் கவனத்தைக் குவித்திருக்கும். போதி தர்மர் முழுமையாக முயற்சிப்பது அந்தக் கவனத்தை மாற்றத்தான். ●



# தவயோக வலிமைகளுக்கு பெயர் பெற்ற விஸ்ரவ மகரிஷி

மனித லட்சணங்களுக்கு ஒரு முன் உதாரணமாய் இருந்தது பூமியில் ஏற்பட்ட ஸ்ரீ ராமரின் அவதாரம். மனித குலத்தில் ஆண்களும் பெண்களும் எந்தவிதமான நல்ல ஒழுக்கங்களை தர்மத்தின் தலைவாசலிலே நின்று கொண்டு கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாய் ஸ்ரீ ராமரின் திரு அவதாரம் இருந்தது. ராமரின் அபூர்வ சக்திகளை தமக்கானதாக பயன்படுத்திக் கொண்டு, தான் செய்ய இருக்கும் யாகத்தை காத்திடுவதற்காக ராமரையும் அவருடைய தம்பி இலக்குமணனையும் உடன் அழைத்துச் சென்றார் விஸ்வாமித்திர மகரிஷி.

உதாரண புருஷர்களாய் விளங்கிய ராம லட்சுமணரின் அபூர்வ சக்திகளையும், மன உறுதிப் பாட்டையும் கண்டு வியந்த விஸ்வாமித்திர மகரிஷி அவர்கள் செய்ய வந்த நல்ல காரியத்தைச் செவ்வனே செய்திடல் வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் அவர்களுக்கு பலா அதிபலா ஆகிய மந்திரங்களை போதித்து தாகமும் பசியும் எடுக்காத வண்ணம் செய்தார். விஸ்வாமித்திர மகரிஷி அருளிச் செய்த இந்த அபூர்வ சக்திகளினால் மேலும் வல்லமை பெற்ற சகோதரர்களான ராம லட்சுமணர்கள் மகரிஷியின் எண்ணத்தை நிறைவேற்றி யாகம் செவ்வனே நடைபெற ஆவன செய்தார்கள். பூமியில் மனிதர் கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்பதற்கு ஒரு சான்றாக தசரத புத்திரர்களான ராம லட்சுமணர்கள் வாழ்ந்தார்கள். அவர்களுடைய அந்த தீர சரித்திரத்தை ராமாயணம் மூலமாக நாம் படித்து உணர் கின்றோம்.

அதைப் போலவே புராண காலங்களில் வேதங்களையும் தர்ம சாஸ்த்திரங்களையும் நன்கு கற்றுணர்ந்த முனிபுங்கவர்களும் மகரிஷிகளும் மனித குலத்திற்கு பல விதங்களிலும் வழிகாட்டியாக வாழ்ந்தார்கள். இவர்களில் பலர் சாஸ்திர சம்பிர



தாயங்களை மட்டும் மக்களுக்கு எடுத்துச் சொல்லாமல், வீரத்துடனும் விவேகத்துடனும், ஆரோக்கியத்துடனும் மண்ணில் வாழ்வது எங்ஙனம் என்றும் எடுத்து இயம்பினார்கள். ஆகவே மகாமுனிவர்களும் மகரிஷிகளும் மனிதர்களுக்கும், தேவர்களுக்கும் மத்தியிலான ஒரு அந்தஸ்தை வகித்தார்கள்.

இப்படியாக தவ வலிமையும் ஆன்ம பலமும் அதிகம் நிறையப் பெற்றவராக இருந்தவரே விஸ்ரவ மகரிஷி ஆவார். இவருடைய தந்தை புலஸ்திய மகரிஷி என்றும், இவருடைய பாட்டன் உலகைப் படைக்கின்ற பிரம்மா என்றும் பழைமை மிக்க புராணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. வேத பாடங்கள், தர்மசாஸ்திரங்கள் முதலிய எல்லாவற்றையும் ஐயம்திரிபுர கற்ற விஸ்ரவ மகரிஷி மற்ற மகரிஷிகளால் பெரிதும் மதிக்கவும் புகழவும் பெற்றார். இவருடைய ஆத்ம யோக பலங்களை நேரில் கண்டு அதி சயித்துபோன பரத்வாஜ மகரிஷி அவரின் பால் பெரிதும் ஈர்க்கப் பட்டார். எனவே விஸ்ரவ மகரிஷியின் நற்குணங்களையும், நற்பண்புகளையும், தவவலிமையும் பாராட்டிப் போற்றும் விதமாக தன்னுடைய மகளான இளவிதா என்பவளை இவ ருக்கு மணம் முடித்து வைத்தார்.

விஸ்ரவ மகரிஷிக்கும் இளவிதாவுக்கும் மகனாய் பிறந்தவரே செல்வங்களுக்கெல்லாம் அதிபதியாய் கருதப்படும் குபேரர். ஆதியில் இலங்காபுரியை ஆண்டவரும் இதே குபேரன் தான் என்று தான் வரலாறுகள் தெரிவிக்கின்றன. தவ வலிமையும் யோக சக்தியும் நிறையப் பெற்றிருந்த விஸ்ரவ மகரிஷி யின் பெருமைகளை கேள்வியுற்ற சுமாலி என்ற அசுரனும், அவனுடைய மனைவி தத்தக்கா என்பவளும் அவர்களுடைய சக்தியை அதிகப் படுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படை எண் ணத்தில் மிகச் சிறந்த அரசர்கள் மற்றும் ரிஷிகளுடன் திருமண பந்தங்கள் ஏற்படுத்த விரும்பினார்கள். அங்ஙனமே அவர்கள் சில ஏற்பாடுகளை செய்து தங்களின் மகளான மற்றும் அதிரூபினியான கைகேசி என்பவளை விஸ்ரவ மகரிஷி கண்ணால் காணும் சந்தர்ப்பத்தை உருவாக்கினார்கள்.

பார்த்தவர் போற்றும் பேரழகியான கைகேசியை கண்டவுடன் விரும்பிய விஸ்ரவ மகரிஷி அவளை திருமணம் செய்து கொண்டு அவளை நான்கு குழந்தைகளுக்குத் தாயாகும் பாக்கியத்தை நல்கினார். கைகேசியின் முதல் குழந்தையான ராவணன் தன்னுடைய மூத்த சகோதரனான அதாவது பெரியன்னை இளவிதாவின் மகனான குபேரனை ஆட்சியிலிருந்து விலக்கி விட்டு தானே இலங்கைக்கு அதிபதியானான். இந்த ராவணனே, அழியா புகழ் பெற்ற இலக்கியமான ராமாயணத்தில் தீயவனாக சித்திரிக்கப்பட்டிருக்கும் ராவணேஸ்வரன். இவன் ஒரு மிகச் சிறந்த சிவ பக்தன் ஆவான். தன்னுடைய இசையால் சிவ பெருமானை கவர்வதற்காக தனியானதொரு ராகத்தை அதாவது சாமகானம் என்னும் ராகத்தை உருவாக்கினான். தன்னுடைய தனிப் பெரும் இசையால் சிவனின் ஆசியை பெற்றவன் ராவணேஸ்வரன். ஆனாலும், விதியின் வசத்தால் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருந்தபடி இவனின் கர்ம வினையானது இவனை ராமாயணத்தில் எதிரி பாத்திரத்தில் நிலைப் பெறச் செய்து விட்டது.

கைகேசியின் மூலமாக விஸ்ரவ மகரிஷிக்கு ராவணனுக்கு அடுத்தபடியாக விபீஷணன் என்னும் மகனும் மற்றும் ஒரு மகனாக கும்பகர்ணனும் ஒரே ஒரு மகளான சூர்ப்பனகையும் பிறந்தார்கள். தன்னுடைய மூத்த சகோதரன் குபேரனுக்கு எதிரான ராவணனின் துவேச மனப்பான்மையைக் கண்ட விஸ்ரவ மகரிஷி வெறுப்புற்று கைகேசியை விட்டு பிரிந்து தன்னுடைய முதல் மனைவியான இளவிதாவிடம் சென்று விட்டார்.

விஸ்ரவ மகரிஷி வாழ்ந்த காலகட்டத்தில், இவருடைய மிகச் சிறந்த தவவலிமைக்காகவும் யோக சக்திக்காகவும் பெரிதும் பாராட்டப்பட்டார். இவர் தம்முடைய அதீத சக்தியினால் எப்போதும் பிறருடன் நல்ல எண்ணங்களையும், உயர்ந்த செயல்களையும் பகிர்ந்து கொள்பவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒத்தக்கடை ராமன்

S. ஆகாஷ்

# நலம் தரும் நவராத்திரி விரதம்!



புரட்டாதி மாதத்து பூர்வஞ் பக்க பிரதமைத்திதி முதலாக உள்ள ஒன்பது இரவுகளை நவராத்திரி எனவும், பத்தாம் நாள் விஜய தசமி எனவும் பூஜைக்குரிய விரத நாட்களாகக் கொண்டாடப்படுகின்றன. சக்தியின் பல்வேறு அருட்செயல்களை நினைவுகூர்ந்து, தேவியின் பாதங்களை வணங்கி வரங்கோருவதையே நவராத்திரி விரத தினங்கள் குறிக்கின்றன.

இலக்குமி, சரஸ்வதி, சாவித்திரி, துர்க்கை,காளி, புவனேஸ்வரி, பாலாம்பிகை, பெரியநாயகி, பருவதவர்த்தினி, தையல்நாயகி, இராஜ ராஜேஸ்வரி, வீரலட்சுமி, விஜயலட்சுமி, தனலட்சுமி முதலான அனந்த திருநாமங்களைக் கொண்டு பக்தகோடிகளுக்கு அருள்பாலிக்கின்றாள் பராசக்தி. முக்கிய மாக சக்தியானவாள் நவராத்திரி தினங்களில் முறையே மகேஸ்வரி, கௌமாரி, வராகி, மகாலட்சுமி, வைஷ்ணவி, இந்திராணி, பிராஹ்மி, நரசிம்மி, சாமுண்டி என்கின்ற நவசொரூபிகளாக விளங்கி அருள்புரிகின்றாள். லோகநாயகி உமா தேவி சராசரங்களிடத்தே விளங்குகின்ற எல்லா அழகின் அம்சமாகும். ஆன்மாக்கள் சோர்வடைந்த காலத்தில் நவசக்திகளையூட்டி ஈடேற்றி அருள் செய்கின்றாள்.

நவராத்திரி தினங்களில், முதல் மூன்று நாட்களும் வெற்றியை வேண்டித் துர்க்கா தேவியையும். அடுத்த மூன்று தினங்களும் செல்வத்தை வேண்டி இலக்குமியையும், இறுதி மூன்று தினங்களும் கல்வியை வேண்டிச் சரஸ்வதியையும் வழிபடல் வேண்டும். ஒன்பதாம் நள்ளிரவு ஆயுத பூஜை எனப்படும். ஒவ் வொருவரும் தமது முயற்சிக்கு ஆதாரமான பொருட்களை ஆயுத வகைகள், புத்தகங்கள், இரத்தினம், பொன் முதலியவற்றை வைத்து வழிபடுவர். பத்தாம் நாள் விஜயதசமி எனப்படும். அன்று ஏடு தொடங்குதல் முதலான வித்தியாரம்பங்கள். வித்தை அறிந்தவர் அப்பியாசித்தல், ஆயுத வித்தைகள் ஆரம்பித்தல் என்பவற்றிற்கு விசேட தினமாகும்

விஜயம் என்பது வெற்றி. பராசக்தியும் பரமாத்மாவும் ஒன்றேயாகும். "சக்தியும் சிவமுமாய் தன்மையில் உலகமெல்லாம் என்பது சிவஞான சித்தியார் வாக்கு பராசக்தியே பிரம்மனிடம் சிருட்டி சக்தியாயும், விஷ்ணுவிடம் ஸ்திதி சக்தியாயும், உருத்திரனிடம் சம்கார சக்தியாயும் விளங்குகின்றாள். நவராத்திரி நாட்களில் மேற்கூறியவாறு அருள்புரிகின்றது. சகல ஐஸ்வரியங்களையும் அளிக்கும் மகாசக்தி பெண், கல்வி, சங்கீதம், கீர்த்தி, செல்வம், தானியம், வெற்றிபூமி, தண்ணீர் முதலான எல்லா அம்சங்களுக்கும் தலைமை தாங்குவன பெண் சக்திகளே.

சக்தி, வீட்டின் திருவிளக்கு. குடும்பக்குல விளக்கு, ஆண்களுக்கு வீரம், புகழ், கீர்த்தி, மதிப்பு யாவுமளிப்பன சக்தியே. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் குறிக்கோள்களைச் சக்தியின் மூலமே அடையலாகும். சாத்வீகம், இராச்சதம், தாமசம் என்பன மூக்குணங்கள். இவை அமைந்துள்ள ஞானசக்தி, கிரியாசக்தி. இச்சாசக்தியென்னும் மூவகைத் தோற்றங்களைக் கொண்டருளும் பராசக்தி, இலக்குமி, துர்க்கை, சரஸ்வதியெனவும் குறிப்பிடுவர்.

இப்புண்ணிய தினத்தில் யாராயினும் தேவியை வணங்கத் தவறமாட்டார்கள். தேவாலயங்கள், வித்தியாலயங்கள், மடாலயங்கள், வீடுகள் முதலாக எங்கும் வழிபாடு நடைபெறும். ஆசிரியர்கள் பலகை விருத்தங்கள், பாக்கள், கோலாட்டங்களை மாணவருக்குப் பயிற்றுவிப்பார்கள். பெரியோர் இல்லங்களுக்குச் சென்று அவர்களை மகிழ்வித்துச் சன்மானம் பெறுவர். நாமும் நவராத்திரி வழிபாடுகள் செய்து

அன்னையின் அருள் பெறுவோமாக!

# திருந்த நினைப்பவர்கள் திருந்தலாம்!



— சுகி சிவம்

தொடர்ந்து தவறு செய்ய நினைப்பவர்கள் இந்த யுக்தியை விடவே மாட்டார்கள். பிறரது குற்றங்களைச் சுட்டிக் காட்டினால் திருந்தும் எண்ணமே அவர்களுக்கு இல்லை என்பதுதான் பொருள் இருவருமே தவறுகளால் ஏன் அழிய வேண்டும் என்கிற விழிப்பு அல்லது அக்கறை ஏற்பட்டால் அப்படிச் செய்ய மாட்டார்கள்.

வேடிக்கையான துணுக்கு ஒன்று.

13 பிள்ளைகளை பெற்ற பெண் ஒருத்தி டாக்ஸியில் பயணிக்க நேர்ந்தது. டிரைவர் நன்றாகக் குடித்திருந்தார். தாறுமாறாக வண்டி ஓட்டினார் பதறிப்போன பெண்மணி இதோபார். என்னை எதிர்பார்த்து வீட்டில் 13 பிள்ளைகள் காத்திருப்பார்கள். எனக்கு ஏதாவது நேர்ந்தால் அவர்களது கதி என்ன ஆகும்? அதனால் கவனமாக ஓட்டு என்று எச்சரித்தாள்.

உடனே டிரைவர் எந்த முட்டாளாவது 13 பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வார்களா? வாழ்க்கையையே கவனமின்றி நடத்திய நீ வண்டியைக் கவனமாக ஓட்டு என்று எனக்கு அறிவுரை சொல்வதா? வாயை மூடிக் கொண்டு வா என்றாராம் எனில் இவர் திருத்துகிற எண்ணமே இல்லாதவர் என்று தானே பொருள்?



எல்லோருமே குற்றம் குறைகள் உடையவர்கள் தான் ஒருவரை ஒருவர் திருத்த வழி சொன்னால் ஒன்றும் தவறு இல்லை.

திருந்த நினைப்பவர்கள் திருந்திக் கொள்ளலாம்.

## நவராத்திரி கொண்டாடலாம்!



சித்திரையில் வசந்த நவராத்திரி (ராம நவமிக்கு முன்பு) வரும். ஐப்பசியில் சாரதா நவராத்திரி வரும். மற்ற இரண்டு நவராத்திரிகளும் ஆடி மாதம் சுக்லபக்ஷத்திலும் (வளர்பிறையிலும்). தை மாதம் சுக்லபக்ஷத்திலும் வருபவை. இவைபெரும்பாலும்கடைப்பிடிக்கப்படுவதில்லை. கிரகஸ்தர்கள், சாதாரணமாக எல்லோரும் கொண்டாடும் ஒரு நவராத்திரியைக் கொண்டாடினால் போதும்.

# மமகாரம் அகன்று ஆன்மா உய்வு பெற...!

ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தங்கள் வாழ்நாளில் அடிக்கடி சென்று வழிபட வேண்டிய தலம் திருக்கண்டியூரில் எழுந்தருளியுள்ள பிரமசிரக்கண்டீஸ்வரர் மங்களநாயகி கோயில் உள்ள பைரவர் ஆவார்.

இத்தலம் பைரவர் பற்றிய செய்திகளுள் மிக முக்கியமான செய்தியை உள்ளடக்கிய தலமாகும்.

பிரமனுக்கு ஆதியில் ஐந்து தலைகள் இருந்தன.



உலகில் வாழ் உயிர்க்குலங்களையெல்லாம் நாம் தானே படைக்கிறோம் என்ற அகங்காரம் பிரமனுக்கு இருந்து வந்தது அதன் காரணமாக அளவற்ற ஆற்றலைக் கொண்ட பெருமைக் குரியவனான சிவபெருமானையே இழிவாக எண்ணி ஏளனப்படுத்த தொடங்கினான்.

இதையுணர்ந்து கொண்ட சிவபெருமான் பிரமனின் ஆணவத்தை அடக்கும் வகையில் தம்முடைய அம்சமாக சகல ஆற்றல்களும் பொருந்திய பைரவர் என்ற அம்சத்தை உண்டாக்கினார். அந்தப் பைரவர் சிவ பெருமானின் கட்டளைக்கிணங்க பிரமனின் ஐந்து தலைகளில் ஒரு தலையைக் கிள்ளியெடுத்து விட்டு ஐந்து முகனாயிருந்த பிரமனை நான்முகன் ஆக்கினார். பிரமனின் சிரங்களில் ஒன்றைத் தன் நகத்தினால் கொய்து கண்டனம் செய்தமையால் இவ்வூர் கண்டியூர் எனப் பெயர் பெற்றது.

மாசிமாதம் 13, 14, 15 ஆகிய திகதிகளில் மாலையில் 5.45 மணி முதல் 6.15 மணிவரையில் சூரிய ஒளி நேராகக் கருவறையிலுள்ள சுவாமி மீது படுகின்றது.

பிரமனும் கலைவாணியும் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஒரேயொரு தலம் இதுவேயாகும்.

பிரமன் சிரம் கொய்தபின் அவன் வேண்டிட ஐம்முகங்களின் அழகினை நான்கு முகங்களில் இறையருள் செய்ய பிரமன் பெற்றடைந்ததாக வரலாறு. சிரம் கொய்த இறைவன் மேற்கொண்ட வடுகக்கோலம் சுவாமி சந்நிதிக்கு எதிராக இடப்பால் பிரமன் சந்நிதிக்கு செல்லும் வாயிலில் சுவரை ஒட்டி சிறிய சிலைவடிவம் உள்ளது.

அகங்காரத்தை அழித்து ஆன்மா உய்வு பெற வேண்டுமெனில் அனைவரும் இக்கண்டியூர் சிவபெருமானைத் தரிசித்தல் வேண்டும். இதனால் ஆன்மா அறிவு விளக்கம் பெற்று மெல்ல மெல்ல இறைவனை நாடும் நலம் பெறும் என்றும் அறிக.

**தல இருப்பிடம்**

தமிழ்நாட்டின் தஞ்சை திருவையாறு பேருந்துச் சாலையில் தஞ்சாவூரிலிருந்து 9 கி.மீ. தொலைவிலும் திருவையாற்றிலிருந்து 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது திருக்கண்டியூர்.

■ S.L.S.பழனியப்பன்

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

ஞாயிறுக்கிழமைகளில் ராகு காலத்தில் நவக்கிரக வழிபாடு செய்து இரண்டு விளக்கு நல்லெண்ணெய் இட்டு ஏற்றி வழிபாடு செய்ய காரிய அனுகூலம் கிடைக்கும்.



**இம்மாதம் அதிர்ஷ்ட கிழமைகள் : திங்கள், புதன், வியாழன்**



# கடகம்

### துர்முகி ஆண்டு புரட்டாதி மாதம் 17.09.2016 முதல் 16.10.2016

மனதில் பட்டதை மறைக்காமல் வெளிப்படுத்தும் குணம் கொண்ட கடக ராசி வாசகர்களே! இம் மாதம் உங்களின் ராசிக்கு செவ்வாய் பார்வை பெறுவதும், பாக்கிய ஸ்தானத்தில் ராசிநாதன் அமர்வதும் வளர்ச்சியையும், எழுச்சியையும் பெற்று திகழ் வீர்கள். பல்வேறு தடைகளை உடைத்த வளர்ச்சி பாதையை நோக்கி செல்வீர்கள்.

**பணியாளர்களுக்கு**

பணியாளர்களின் ஒற்றுமையை நிலை நாட்ட உடன் இருந்து உதவிகளை செய்வீர்கள். பொறுப் பான பதவிகளில் இருப்பவர்கள் அதில் கவனம் செலுத்தி திறம்பட செயல்பட்டு வளர்ச்சியை பெறுவீர்கள். மருத்துவ உபகரணத் தொழிலில் இருப்பவர்களுக்கு நல்ல பலன்கள் வந்து சேரும். பொருளாதாரம் சிறப்பாக அமையும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது வாழ்வில் பிறரின் வாழ்வுக்கு வளம் பெறும் வகையில் ஏதாவது பொது விடயங்களை செய்து கொடுப்பீர்கள். மருத்துவ வசதிகளை அனைவருக்கும் கிடைக்கும் வகையில் சில முயற்சிகளை செய்து தருவார்கள். தொழிலில் கவனம் செலுத்தி அனைவரின் வாழ்க்கை தரத்தை உயர்த்த பாடுபடுவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**வியாபாரிகளுக்கு**

தொழில் ஸ்தானாதிபதி உங்களின் ராசியை பார்ப்பது நல்ல முன்னேற்றம் என்றாலும் உங் களின் நம்பிக்கையானவர்கள் கூட ஏமாற்றும் சூழ்நிலை மனதிற்கு வருத்தத்தை தரும். உணவு விடுதிகள், சீட்டு நிறுவனங்கள் நடத்துபவர்களுக்கு சிறந்த வளர்ச்சியை தரும். பொருளாதாரத்தில் முன் னேற்றம் அடைவீர்கள்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் கல்வி வளர்ச்சி யால் கலைத் துறையில் சிறந்து விளங்குவீர்கள். உங்களின் வாழ்க்கை தரம் உயரும். நினைத்ததை அடைய எதையும் செய்வீர்கள். உங்களுக்கு கொடுத்த வேலையை சரியாக செய்து நன்மையை அடைவீர்கள். சகோதரர்கள், தாயார் உதவி உங்களின் வளர்ச்சிக்கு உதவியாக இருக் கும்.

**பெண்களுக்கு**

பெண்களின் தொழில் பயிற்சி கல்வி வாய்ப்பு கள் கிடைக்கும். அமைதியான வாழ்க்கை சூழ்நிலை களை உருவாக்கி கொள்வீர்கள். உறவுகள் சீராக இருக்கும். தொழிலில் முன்பைவிட சிறப்பாக செயல்பட்டு மேலும் தொழில் முன்னேற்றம் பெறு வீர்கள்.

**மாணவர்களுக்கு**

கல்வியில் உங்களின் விருப்பமான பாடங் களில் முன்னேற்றம் உண்டாகும். சொந்த அறி வாற்றல்களாலும் உங்களின் முயற்சியாலும் கல்வி வாய்ப்புகளில் சிறந்து விளங்குவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

12.10.2016 புதன் அதிகாலை 04.51 முதல் 14.10.2016 வெள்ளிகாலை 09.25 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### புனர்பூசம் 4ஆம் பாதம்

ஆற்றலை பெறும் நீங்கள் காலம் அறிந்து செயல்படுவீர்கள். உங்களின் செயல்களில் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பம் விரைவில் முடிவுக்கு வரும்.

#### பூசம் 1, 2, 3, 4 ஆம் பாதம்

பூமி சார்ந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். சட்ட ரீதியான மோதல்கள் முடிவுக்கு வரும். கருத்துகளை வெளிப்படுத்தி பிரபலம் அடைவீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

#### ஆயில்யம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

கல்வியில் சிறந்து விளங்கும் உங்களுக்கு வேலை வாய்ப்புகள் விரைவில் கிடைக்கும். தொழில் துறையில் சிலருக்கு கணனி பிரிவு வேலை சீக்கிரம் வரும். முயற்சிகளுக்கு நல்ல பலன் கிட்டும்.

**அதிர்ஷ்ட நிறங்கள் :** வெண்மை, ஒரஞ்சு, மஞ்சள்

**அதிர்ஷ்ட திசைகள் :** வடக்கு, வடமேற்கு, வடகிழக்கு

# கனவுகளும் பலன்களும்

# உடல்!



**உங்கள் மனைவி அல்லது மைந்தர்கள் உங்களது உடம்பைப் பிடித்து விடுவது போல் கனவு கண்டால் நீங்கள் தாட்சண்யத்துக் கட்டுப்பட்டு, சில தவிர்க்க முடியாத நஷ்டங்களுக்கு ஆளாக நேரிடும். ஆகையால், அது பற்றி எவரிடமும் எரிச்சல் அடையாமல், பெருந்தன்மையோடு நடந்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால் பணம் போவதோடு கூட, வீணான கெட்ட பெயருக்கும் ஆளாக நேரலாம்.**

உடம்பில் நெருப்புப் பற்றி எரிவது போல் கனவு கண்டால் உங்கள் வாழ்வில் ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவாகும். உங்களுக்குப் பலவிதமான தீமைகள் வருவது போல் தோன்றும். ஆனால் உண்மையில் ஒரு தீமையும் வராது. நீங்கள் எது எதற்குப் பயந்தீர்களோ, அவை எல்லாம் வெறும் கயிற்றுப் பாம்புகளைப் போல் பொய்மை ஆகிவிடப் போகின்றன. இருந்தாலும் அந்தப் பயத்தின் அனுபவம் உங்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும். வாழ்க்கையில் நீங்கள் மிகவும் தூய ஒழுக்கம் உடையவர்களாக மாறிவிடுவீர்கள்.

உங்கள் உடம்பு ஓர் ஒளிபிழம்பாய் விளங்குவது போல் கனவு கண்டால் உங்களுக்கு இறைவன் திருவருள் பெருகும். ஞானநெறியில் அல்லது பக்தி நெறியில் அல்லது யோக நெறியில் உங்களுக்கு ஆர்வம் ஏற்படும். அதில் தீவிரமாக ஈடுபட்டால் விரைவில் சித்தியும் அடையலாம்.

உடம்பில் கொப்புளங்கள் கிளம்பியிருப்பது போல் கனவு கண்டால் உங்களுடைய பூர்வீகச் சொத்துகளிலிருந்து திடீரென்று புதையல் கிளம்பினாற்போல் வருமானங்கள் பெருகத் தொடங்கும் நீங்கள் பிறந்த குடும்பத்துக்கே ஒரு புதுமையான பெருமை ஏற்படும். உங்களுடைய புகழ் பெருகும்.

« தமிழ்வாணன்

### "பரந்யாசமும்" ஸ்மாச்ரயணமும்"!

வாழ்க்கையின் பாரத்தை இறைவனிடம் ஒப்படைத்தல் "பரந்யாசம்" எனப்படும். வைணவத்தில் குரு ஒருவரை அணுகி, அவரைச் சேர்ந்தவன் என்று உடலில் முத்திரை பதித்துக் கொள்வது "ஸமாச்ரயணம்" எனப்படும்.



## பாபநிவர்த்தி அளிக்கும்

# தீப தரிசனம்

**ம**னுஷ்யர்களுக்குள் ஜாதி, யோக்கியதை முதலானவைகளைப் பார்க்காமல் உபகாரம் பண்ண வேண்டும் என்பது மட்டுமில்லை. இம்மாதிரி மனித இனம் மட்டுமின்றி, சகல ஜீவராசிகளுக்கும் சிரமங்கள் தீர வேண்டும் என்று சொல்லித்தான் ரத்தின தேவனும் பஞ்சமனுக்குத் தீர்த்தத்தை வார்த்தான்.

கார்த்திகைப் பண்டிகையன்று நிறைய அகல் ஏற்றி வைக்கிறோமல்லவா? இப்படி தீபத்தை ஏற்றும் போது ஒரு சுலோகம் சொல்ல வேண்டும் என்று தர்ம சாஸ்திரத்தில் விதித்திருக்கிறது.

கீடா பதங்கா, மசகாச்ச வ்ருக்ஷா
ஜலே ஸ்தலே யே நிவ ஸந்தி ஜீவா
த்ருஷ்டவா ப்ர.தீபம் நச ஜன்ம பாஜா
பவந்தி நித்யம் ச்வபசா ஹி விப்ரா

"புழுக்களோ. பட்சிகளோ அல்லது ஒரு நுளம்புவாகத் தான் இருக்கட்டும். அந்த நுளம்போ. எம் மாதிரி உயிரில்லை என்று நினைக்கப்படுகிற விருட்சமோ, இன்னும் பூமியிலும். ஜலத்திலும் எத்தனை தினுசான ஜீவராசிகள் இருக்கின்றனவோ அவற்றில் எதுவாகிலும் அதுவோ, மநுஷ்யர் களுக்குள்ளேயே பேதம் இல்லாமல் பிராம் மணனோ, பஞ்சமனோ எவனானாலும் சரி, ஏதுவானாலும் சரி. இந்தத் தீபத்தைப் பார்த்து விட்டால் அந்த ஜீவனுடைய சகல பாபங்களும் நிவிருத்தியானந்தத்தில் சேரட்டும் என்று இந்த சுலோகத்துக்கு அர்த்தம்.



முன்பெல்லாம் சொக்கப்பானை என்று ஆலயத்திலிருந்து தீபத்தைக் கொண்டு வந்து பெரிசாக ஏற்றினார்களே, திருவண்ணாமலையில் இப்போதும் மலை உச்சியில் மகாபெரிய ஜோதி யாகத் தீபம் ஏற்றுகிறார்களே இதன் உள் அர்த்தம் என்ன? சின்ன அசலாக இருந்தால் அதன் ஜூவாலை கொஞ்ச தூரம்தான் பரவும் சொக்கப்பானை என்றால் அதன் பிரகாசம் ரொம்ப தூரத்துக்குத் தெரியும். அண்ணாமலை தீபம் மாதிரி மலையில் ஏற்றி வைத்துட்டாலோ, அது எத்தனையோ ஊர்கள் தாண்டி கூடத் தெரியும். அத்தனை பெரிய எல்லைக்குள் இருக்கிற சகல ஜீவஜந்துக்களின் மீதும் இந்த பிரகாசம் பட்டு அவற்றின் பாபங்கள் போக வேண்டும் என்ற உத்தமமான சிந்தனையில் தான் சொக்கப்பானை அண்ணாமலை மீது என்றெல்லாம் நம் பூர்வீகர்கள் ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள்.

**கவிஞர் கண்ணதாசன்**



# வண்ணமற்ற தெளிவான குவார்ட்ஸ் கற்கள்!

இங்கு சொல்லப்படும் கிரிஸ்டல் குவார்ட்ஸ்கள் எல்லாமே தெளிவான எந்த வண்ணமும் சேராத கற்களைப் பற்றியே சொல்லப்பட்டுள்ளது. வண்ண கிரிஸ்டல்களை தனியாக குறிப்பிட்டும் உள்ளது. குழப்பம் நேராமல் இருப்பதற் காகவே இதைச் சொல்கிறோம்.

குவார்ட்சின் சுத்தமான தெளிவான தன்மையால் மற்ற வண்ணங்களை பிரதிபலிக்கச் செய்ய முடியும். இத்தகைய கண்ணுக்குத் தெரியாத வண்ணங்களை வெளியிடும் கிரிஸ்டல் சக்திகள் நோய் தீர்ப்பதற்காக உபயோகப்படுத்தப்படுகின்றன. கிரிஸ்டலின் ஒளிக் கதிர்கள் சரீரத்தில் பரவி பல நன்மைகளைச் செய்கின்றன. இதனால் நோய்களை குணப்படுத்த முடிகிறது.

கிரிஸ்டல்கள் லேசான பால் வண்ணத்தில் தெரிந்தாலும் முனைகள் தெளிவான வெண்மையாக இருக்கும். சில மேகமூட்டம் போல லேசாகத் தெரியும். நூறு சதவிகிதம் சுத்தமான கிரிஸ்டல்கள் கிடைப்பது என்பது அரிதாகும்.

ஆனால், பார்வைக்கு இந்தக் குறைகள் தெரியாது. கிரிஸ்டல்கள் ஒரு அங்குலத்தில் இருந்து பல அடிகள் உயரத்திலும், பருமனிலும் கிடைக்கின்றன.

சாதாரணமாக நான்கு அங்குல நீளம் வரை உள்ள கிரிஸ்டல்கள்தான் பெருவாரியாகக் கிடைக்கின்றன. அடிக்கணக்கில் நீள அகல கிரிஸ்டல்கள் அபூர்வமாகவே கிடைக்கின்றன. இத்தகைய கிரிஸ்டல்கள் ஒன்று இரண்டு கிடைத்தாலும் அவற்றின் விலை மிக மிக அதிகமாக இருக்கும். கிரிஸ்டல்கள் பலவித உருவங்களில் கிடைக்கின்றன.



## பலவித கிரிஸ்டல் உருவங்கள்

படத்தில் கொடுத்துள்ள வடிவங்களில் குவார்ட்ஸ் கிரிஸ்டல்கள் பூமியில் இருந்து கிடைக்கின்றன. பல கிரிஸ்டல்கள் பூமியில் இருந்து கிடைக்கின்றன. பல கிரிஸ்டல் முனைகள் சேர்ந்த கற்றை கிரிஸ்டல்கள் சாதாரணமாக நிறைய கிடைக்கின்றன. இவைகள் மேலே தனித்தனி பென்சில் போல ஆறு பட்டைகளுடன் இருந்தாலும் அடிப்பகுதி ஒன்றாக ஒரே பாறை போல சேர்ந்து இருக்கும். இப்படிப்பட்ட கற்றைகளில் உள்ள கிரிஸ்டல்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்ததாகவே ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்டு இருக்கும்.

எல்லாமே ஒரே மாதிரியாக இருக்காது.

மொத்தமாக ஒரே சக்தியை வெளியிட்டாலும் அவைகளை தனித்தனி பென்சிலாக பிரித்து எடுத்து விட்டால் ஒவ்வொரு பென்சில் கிரிஸ்டலும் வித்தியாசமான சக்தியைத் தருகிறது என்கிறார்கள்.

கிரிஸ்டல் கற்றைகளில் உள்ள முனைகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று சக்தியை வெளியேற்றியும். ஒன்றில் இருந்து மற்றொன்று சக்திகளை தன்னுள் இழுத்தும் சேமிக்கின்றன.

இதுபோல கற்றையாக உள்ள கிரிஸ்டல் பாறையை ஒரு அறையின் மையப் பகுதியில் வைத்துவிட்டால் அதன் சக்தியானது அந்த அறையில் உள்ள நெகடிவ் எண்ணங்களையும் வேறு எதிர்மறையான, கெடுதலான எண்ணங்களையும் வெளியேற்றி அந்த அறையை சுத்தப்படுத்துகிறது.

பல பேர் சேர்ந்து கூட்டமாக உட்கார்ந்து தியானம் செய்யும் இடங்களில் இதுபோன்ற கிரிஸ்டல் கற்றை பாறைகளை வைத்துவிட்டு தியானம் செய்தால் தியானத்தில் மனம் நல்ல விதமாக லயித்து தியானம் சிறப்பாக அமைந்து விடும். சில வகை கிரிஸ்டல்கள் பல முனைகளுடனும், இரண்டு முனைகளுடனும் கற்றைகளாக விளைகின்றன. சில சமயம் கிரிஸ்டல் கற்றையில் ஒரே முனை உள்ளது கூட விளையும். ஒரு இடத்தில் பலர் கூடி பலவிதமான பிரச்சினைகளை காரசாரமாக விவாதித்துக் கொண்டு இருப்பார்கள். பலர் பலவித எண்ணம் உடையவர்களாக இருக்கலாம். அங்கே இது போன்ற கிரிஸ்டல் கற்றைகளை வைத்து விட்டால் கொஞ்ச நேரத்தில் எல்லோரும் அமைதியடைவார்கள்.

### ஒரு முனை உள்ள பென்சில் கிரிஸ்டல்கள்

இத்தகைய பென்சில் கிரிஸ்டல்கள் முனை கூராகவும் இருக்கும் கூர் இல்லாமலும் இருக்கும். ஆறு பட்டையாக வந்து முனை குவிந்து முக்கோண வடிவில் கூராக முனை இருக்கும். இவற்றை சாதாரணமாக தியானம் செய்வதற்கும். நோய்களை குணப்படுத்தவும் உபயோகப்படுத்துகிறார்கள்.



### இரு பக்கமும் முனை உள்ள கிரிஸ்டல்கள்

இத்தகைய குவார்ட்ஸ் கிரிஸ்டல்கள் மிக அபூர்வமாக களிமண் பாங்கான பூமியில் விளைவதாகச் சொல்கிறார்கள். இவை அபூர்வமாகத்தான் கிடைக்கின்றன. இதன் இரு பக்கங்களும் மேலே கீழே கூராக இருக்கிற படியால் அதிக சக்திகளை இழுத்து இரு பக்கங்களிலும் செயல்படுகின்றன. இதனால் இரு முனை கிரிஸ்டல் பென்சில்கள் அதிக சக்திகளைத் தருகின்றன. இத்தகைய இரு முனை கிரிஸ்டல்களின் விலை சற்று அதிகமாகவே இருக்கும்.

■ என். தம்மண்ணன்

## நதி நீராடல் புண்ணியம் தரும்!

மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொரு வரும் தம் வாழ்நாளில் ஒரு முறையாவது கங்கை, யமுனை, சரஸ்வதி, காவேரி, நர்மதை, துங்கபத்திரை போன்ற புண்ணிய நதிகளில் நீராட வேண்டும். அவ்விதம் முடியாதவர்கள் தினமும் ஸ்நானம் செய்யும் முன்பு மானசீகமாக அந்நதிகளை வணங்கி விட்டு அதன் பிறகே, ஸ்நானம் செய்ய வேண்டும். அதனால் அந்நதிகளில் ஸ்நானம் செய்த புண்ணியபலன்களை அவர்களும், அவர்கள் குடும்பத்தினரும் அடைவார்கள்.



## இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

குரு அருள் கிடைக்க தினமும் தட்சிணாமூர்த்தி காயத்ரி சொல்லி வரவும். சனிக்கிழமை பைரவருக்கு நல்லெண்ணெய் தீபம் போட்டு வழிபட்டு வர காரிய தடை நீங்கி சுபிட்சம் பெறுவீர்கள்.



**இம்மாதம் அதிர்ஷ்ட கிழமைகள் : ஞாயிறு, திங்கள், வெள்ளி**



# சிம்மம்

**துர்முகி ஆண்டு புரட்டாதி மாதம்**
**17.09.2016 முதல் 16.10.2016**

தைரியமும், துணிச்சலும் கொண்டு எதையும் தைரியமுடன் செயல்படும் சிம்ம ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு தொழில் ஸ்தானத்தை குரு பார்வை இடுவதும் மறைவு ஸ்தானத்தை குரு பார்வை இடுவதும் இதுவரை பட்ட கடன் தொல்லைகள் மறையும். தொழிலில் பதவி உயர்வும். பண பலன்களும் கிடைக்கும். பொருளாதாரம் வளர்ச்சியை தரும்.

### பணியாளர்களுக்கு

பணியாளர்களின் வளர்ச்சி நன்றாக அமையும். செய்யும் தொழிலில் மாற்றம், இடமாற்றம், வேலையின் தன்மைகள் மாறும். சிலருக்கு உத்தி யோகத்தில் பதவி உயர்வும், பண பலன்கள் வந்து சேரும். தொழிற்சங்கத்தில் முக்கிய பொறுப்புகள் உங்களை தேடி வரும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொதுவாழ்வில் பொது மக்களின் பிரச்சினைகளுக்கு தகுந்த முடிவுகளை தெரிவிப்பதில் சிறந்து விளங்குவீர்கள். புதிய பதவிகள் வகிக்க வேண்டி வரும். உங்களின் செயல்களுக்கு நல்ல வெற்றியை தேடி தரும். ஒரு முடிவை எடுத்த பின்பு அதிலிருந்து பின்வாங்க மாட்டீர்கள். பொருளாதார நிலை சிறப்பாக அமையும்.

### வியாபாரிகளுக்கு

உங்களின் ராசிக்கு தொழிலில் ஸ்தானாதிபதியும் குரு அனுக்கிரகமும் இருப்பதால் செய்யும் தொழிலில் திடீர் வளர்ச்சியும் பொருளாதாரத்தில் மேன்மையும் உண்டாகும். வங்கி கடன் மூலம் மேலும் தொழிலை மேன்மைப் படுத்தும் வாய்ப்புகள் அமையும். எரிபொருள்கள் விற்பனை சிறப்பாக அமையும்.

### கலைஞர்களுக்கு

கலைஞர்களின் வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்புகள் அமையும். அனைத்து கலைத்துறையிலும் சிறந்து விளங்குவீர்கள். வேற்றுமை மறந்து எல்லோரிடமும் அன்பாக செயல்படுவீர்கள். நினைத்ததை செயலில் காட்டுவீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களின் வாழ்க்கையில் சில மாற்றங்கள் அமையும். முன்பு செய்து வந்த தொழிலை காட்டிலும் சிறந்த தொழிலை உருவாக்கி கொள்வீர்கள். மருத்துவ பெண்களுக்கு தொழிலில் நன்மைகள் வந்து சேரும். பொருளாதாரம் மேன்மை அமையும்.

### மாணவர்களுக்கு

மாணவர்களின் கல்வித் தரம் உயரும். உங்களின் மன விருப்பம் நிறைவேறும் வகையில் உயர் கல்வியை தெரிவு செய்து கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். ஆசிரியர்களின் மேலான அன்பை பெறுவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

14.10.2016 வெள்ளி காலை 09.26 முதல் 16.10.2016 ஞாயிறு பகல் 12.29 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### மகம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

மாற்றங்களை விரும்புவீர்கள். எதிர்காலத்திற்கு தகுந்த பணி மேன்மைகளை எதிர்நோக்கி காத்திருப்பீர்கள். உங்களின் வலிமை உங்களை மேலும் உயர செய்யும். பொருளாதாரம் மேம்படும்.

#### பூரம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

தெளிவான செயல்களால் உங்களின் எதிர்ப்புகளை வெல்வீர்கள். பெண்களின் வாழ்க்கை சூழ்நிலை சிறப்பாக அமையும். தோல் சார்ந்த நோயால் பாதிக்கப்படலாம்.. உடல் நலனை கவனிப்பது நல்லது.


#### உத்திரம் 1ஆம் பாதங்கள்

தனக்கு தெரிந்த விடயங்களை பிறரிடம் பகிர்ந்து கொள்வீர்கள். வரவுக்கு மீறிய செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது. பொது விடயங்களில் அதிக நேரம் செயல்படுவீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**
சிவப்பு, ஒரஞ்சு, மஞ்சள்

**அதிர்ஷ்ட திசைகள் :**
கிழக்கு, வட்மேற்கு, மேற்கு

# பலா அதிபலா மந்திரங்கள்



பலா, அதிபலா மந்திரங்கள் வால்மீகி ராமாயணம், சாவித்ரி உபநிஷதம் ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளன. இவை உபநயன சமஸ்காரம் பெற்றவர்களுக்கு மட்டும் தான் உபதேசிக்கப்படுவது வழக்கம். அப்படி உபதேசம் பெற்றவர்கள்தான் அந்த ஜபம் செய்யலாம், புத்தகத்தில் பார்த்து ஜபம் செய்வதைப் பெரியோர் அனுமதிக்கவில்லை.

ஏற்கெனவே பலா, அதிபலா மந்திரங்களை ஜபம் செய்து வருபவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரிடம் இந்த மந்திரங்களை நேரில் கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது.

இந்த மந்திரங்கள் சென்னை ஶ்ரீராம கிருஷ்ண மடம் வெளியிட்டிருக்கும், "ஜபவிதானம்" என்ற நூலில் இடம் பெற்றுள்ளன.

அவை பின்வருமாறு

விராட் புருஷ ரிஷி காயத்ரீச் சந்த காயத்ரி தேவதா அம் பீஜம் மம் சக்தி உம் கீலகம் காய்த்ரீப் ரஸாதத்வாரா க்ஷுதாதிநிரஸனே விநியோக க்லாம் க்லீம் க்லூம் க்லைம் க்லௌம் க்ல இதி ந்யாஸ

த்யானம் அம்ருதகரதலார்த்தரௌ ஸர்வ ஸஞ்ஜீவனாட்யௌ அகஹரண ஜுதக்ஷௌ வேதஸாரே மயூகேப்ரணவமய விகாரௌ பாஸ்கரா கார தேஹௌ ஸதத மனுபவேஸஹம் தௌபலாதி பலாம் தௌ

மந்த்ரம் ஓம் ஹ்ரீம் பலே மஹாதேவி. ஹ்ரீம் மஹாபலே க்லீம் சதுர்வித புருஷார்த்த ஸித்திப்ரதே, தத்ஸவிதுர் வரதாத்மிகே ஹ்ரீம் வரேண்யம் ப்ர்க்கோ தேவஸ்ய வரதாத்மிகே அதிபலே ஸர்வதயா மூர்த்தே பலே ஸர்வ க்ஷுத்ப்ரமோபநாசினி தீமஹி தியோ யோ நோ ஜாதே ப்ராசுர்ய யாப்ரசோதயாத் ஆத்மிகே ப்ரணவ சிரஸ்காத்மிகே ஹூம் பட் ஸ்வாஹரி



## எல்லாம் உடையவர் ஈசன்!

"ஈசன்" என்பதற்கு எப்பொருளையும் (எல்லாவற்றையும்) உடையவன் அல்லது ஆள்பவன் என்று பொருள். "இறைவன்" என்பதற்கு எப்பொருளிலும் (எல்லாவற்றிலும்) தங்குகின்றவன் என்று பொருள்.



# அமர ஆத்மாக்கள்

## உரையும் ஒளியுலகம்!

வை. தட்சிணாமூர்த்தி

அன்பு மணி ஆசிரியராக வாழ்ந்தவர். நல்ல தெய்வ பக்தியுள்ள குடும்பம். ஓய்வு பெற்று சில ஆண்டுகளில் உத்தராயண காலத்தில் தேய் பிறை பட்சத்தில், மக நட்சத்திரத்தில் அவருக்கு மரணம் வாய்க்கிறது. உடன் இருக்கும் மனைவி, மக்கள் அழுது தவிக் கின்றனர். அன்புமணி சாவதற்கு முன் எழுதிய உயிலில் மரணம் ஒரு பிரமோஷன், மரணம் மகிழ்வாகக் கொண்டாட வேண்டிய சுபச் செயல். என் மரணத்துக்காக அழாது, தெய்வப்பாடல்கள் பாடி அன்போடு எனது ஆன்மாவை வழி அனுப்புங்கள் என்று எழுதி இருந்தார். மனம் தேறாது சிலர் அழுத கண்ணும் கம்பலையுமாக இருந்தனர். ஆசிரியர் அன்புமணியின் ஆத்மாவுக்கும், உடலுக்கும் இடையே இருந்த, வெள்ளிகம்பிக் கயிறு அறுபடுகின்றது. பிரமரந்திரம் என்னும் தலைப் பகுதியில் லப்டப் என்ற ஒரு இன்னோசையுடன் ஒரு நுண்ணிய தீப்பொறி வெளிவந்ததை இளைய மகள் கண்டாள். பூத உடல் கீழே கிடக்க, சூட்சும உடல் மேலே மிதக்கிறது. விண்ணுலக வெள்ளை நிற தேவதையர் இருவர் ஆசிரியர் அன்புமணியின் ஆத்மாவை வரவேற்று வழி காட்டுகின்றனர். இதற்கு முன்பு மரணமடைந்து, அமர உலகில் வாழும் ஆசிரியர் அன்புமணியின் மூதாதையர்கள், நண்பர்கள், உறவினர்கள் இத்தேவதைகளின் பின்ன ணியில் நின்று ஆசிரியரைப் புன்முறுவலுடன் வர வேற்கின்றனர்.

ஒரு இனிய சுகமான நேரம். உடல் சுமை முழுவதுமாகத் தளர்ந்து விட்டது. பரமாத்மா தரிசனம் பேரவா மிகுந்து விட்டது. வரவேற்க வந்த அமர ஆத்மாக்களிடையே அன்று இளவயதில் வாடா போடா போட்டு கோலி விளை யாடிய இளவயது நண்பர் இருந்தார். ஆசிரியரின் ஆசிரியரான குருநாதர் பன்மொழிப் புலவர் இருந்தார். ஆசிரியரின் ஞான குருவான ஒரு யோக முனிவரின் அமர ஆத்மா இருந்தது. வாழ்வில் கிடைத்திராத சுகானுபவம். இராமநாதபுரம் அரசர் அமரர் இருவரும் ஆசிரியரை விண்ணுலகத்துக்கு வரவேற்க வந்துள்ளார்.

### ஒளியுலகம்

அறக்கடவுள் பரமாத்மா அண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்து, காத்து அருள் செய் நிலையில், மரணத்துக்குப் பின் செல்லும் சூட்சும ஆத்மாக்களின் தங்குதலுக்காக வெவ்வேறு சுவர்க்கப் பிதுர் உலகம் போன்ற அண்டங்களை ஏற்படுத்தியுள்ளது. இல்லறக் கடவுள், நம்மனோரால் உருவ நிலையில் வழிபடப்பட்டாலும் அது அங்கெங்கெனாதபடி, எங்கும் பூர்த்தியாகி, ஆனந்த மயமாக ஒளிமயமாக அமைந்த ஒன்று. பஞ்ச பூதச் சேர்க்கையால் ஆன மண்ணுலகம் போலன்றி, சூக்குமமான ஆகாய அணுக்களால் ஆகிய உலகமாக அவ்வுலகம் அமைகின்றது. இவ்வாகாய உலகம் பிதுர் உலகம் சுவர்க்க உலகம் பூத ஆகாயத்திலும் பன்மடங்கு நுண்ணியதாய், எங்கும் ஒளியமாய், இரவு பகல் அற்றதாய், அமைந்துள்ளது.

### அறக்கடவுள்

பரமாத்மா மனிதனுக்கு தூரத்தில் உள்ளது. மனிதன் தியானிக்கும் போது அண்மையில் வருகின்றது. அவனுள் அதுவாகி, அதுவுள் அவனாகும்

## வயோதிகத்தில் வைராக்கியம்!

வயோதிக காலத்திலும், குடும்ப் ஆசாபாசங்களில் தீவிரமாக நமது மனத்தைச் செலுத்திவிட்டால், அதனா வேதனையும் துன்பமும்தான் மிஞ்சும். இதுவொ வறட்டு வேதாந்தமல்ல. மனித வாழ்க்கையின் உண் நிலை இதுதான். ஆதலால்தான், வயோதிகத்தில் பாசத் குறைத்துக் கொண்டு வைராக்கியத்தை வளர்த்துக் கொள் வேண்டுமென்று பெரியோர்கள் அறிவுறுத்தியுள்ளன பிள்ளை, பாசம் என்ற தளையிலிருந்து தங்களை விடுவித்து, இறைவனுக்கு அருகில் கொண்டு சேர்க்கிறான். தினமும் பகவானை ஆராதியுங்கள். தினமும் ஒரு சருக்கமாவது சுந்தரகாண்டம் பாராயணம் செய்து வாருங்கள் மனம் அமைதி பெறும்.

நிலை வருகிறது. இந்த ஒளி உலகில் வந்து சேர்ந்த பக்குவிகள் அவனும் அதுவும் இரண்டற இணையும் புனித உணர்வு மேம்பட்டவர்கள். அங்கே பரவும் ஒளிமயம் தேஜோமயம். அவன் சென்று சேர்ந்துள்ள மனித சூட்சும ஆத்மாக்களும் அணுப்பிரமாண ஒளியுடம்பினராகவே ஆகிவிடுகின்றனர். அங்கே காண இயலா, ஆனால் கண்டு கொண்டே இருக்கின்ற அந்த காண்பரிய காட்சியான இறைவனின் எண்ண மயமாகவே, அங்கேயுள்ள அனைத்தும், அந்த ஆத்மாக்களும், ஆகிவிடுகின்றனர். ஆகியுள் ளனர், ஆகியிருப்பர். அவன் ஆண்டவன் எங்கும் எப்பொழுதும் போல் எல்லாமாகி, யாதுமாகி எல்லாம் அறிந்த எல்லாவற்றிற்கும் எப்பொழுதும் சாட்சியாக உள்ளான். இதே நிலை தான் மண்ணுலகத்திலும், ஆனால் ஒரு வேற்றுமை. விண்ணுலகு வந்தெய்திய ஆன்மாக்களும், இறையருளால் காலம் தூரம் கடந்த நிலையில், நிகழ் காலத்தையும், இறந்த காலத்தையும், மண்ணுலகில் அவரவர் நாட்டமுடை அண்டப் பகுதியில் நடப்பன அனைத்தையும் பார்க்கும் அறியும் எல்லை கடந்த ஆற்றல் மிகு கண்ணும் சிந்தனையும் உடையனவாக அமைந்துள்ளன.



### கண்

மண்ணுலகில் அகக்கண், புறக்கண், மூன்றாவது கண் என்றெல்லாம், நாம் பின்னிப் பின்னி ஆராய்ந்த செய்திகள் யாவும், நிதர்சனமானதாக, அமரனால் அமர ஆத்மாக்களுக்குக் கண்ணாகவுள்ளன. கண்ணாக ஆம் கண்கள் இங்கே இரண்டில்லை. உடம்போடு கூடிய மனிதனுக்குத் தான் இரண்டு கண். இவண் அணுப்பிரமாண தேஜோமய நுண் அமர சூட்சும ஆத்மாவுக்கு கண் என்ற உறுப்பு இருப்பது புறத்தே தெரியாது. இறைவன் அருவும் உருவும் அகன்ற, பிரமாண்ட நுண் பொருளாக இருப்பது போலவே அவனுக்கு அண்மையில் வந்த அமர ஆத்மாக்களின் நிலையும், நமது இரு கண்களின் பார்வை வீச்சு நூற்றெண்பது டிகிரி எனும் அரை வட்ட வீச்சு நம் இரு கண்களின் பார்வை எல்லை எதிரே மதில், சுவர், மரம் முதலிய மறைப்பு தெரியும் வரை. அமர ஆத்மாக்கள் மலை காடு, மரம், வீடு, சுவர் எல்லாவற்றையும் ஊடுருவி, நெடுந்தூரம் பார்க்க வல்லவை. ஆனால் ஒரு எல்லை அது வாழ்ந்த, வாழும், அண்டம் வரை தான். அமர ஆத்மாவின் நுண் கண்ணின் வீச்சு முன்னூற்று அறுபது டிகிரி என்னும் மேலும், கீழும், பக்கங்களும், முழு வட்டமாகச் சுழன்று காணும் வலிமை உடையது. அது போன்றே இவ்வமர ஆத்மாக்கள் நெடுந் தொலைவாகிலும் நினைத்த மாத்திரத்தில் சென்றடையும், வேகப் பயண வல்லமை உடையன. அவை பறக்கின்றனவா? பாய்ந்து நழுவகின்றனவா, என்றெல்லாம் நினைப்பதற்கு மேல் தூரத்தைக் கடக்கின்றன. அந்த அமர ஆத்மாக்கட்கு கண், காது, மூக்கு முதலியனவாய இந்திரியங்கள் என்னும் உறுப்புகளோ அதன் உணர்வுகளோ இல்லை.

### இல்லாதன

பசி இல்லை, அதனால் உணவுக் கூடமில்லை, தாகம் இல்லை எனவே தண்ணீர் வசதி இல்லை. காம உணர்வு இல்லை எனவே குடும்ப வாழ்க்கை இல்லை. பரிசுத்தமாகவே யாவும் இருப்பதால் குளித்தல், துப்புரவு செய்தல் இல்லை. ஒளிமயமாக இருப்பதால் விளக்கு இல்லை. இரவு இல்லை பகல் இல்லை, இவண் எல்லா அமர ஆத்மாக்களும் இறைத் தன்மையைப் பருகி உயர்ந்த சக்தி யுடையனவாக இருப்பதால், தூக்கம் இல்லை. விழிப்பு என்னும் ஜாக்கிரதை உணர்வு மட்டும் உயர்ந்திருக்கும் ●

ராஜயோகி



# வேங்கடவனும் விரிசடைக் கடவுளும்!

வைணவ இலக்கியங்களில் திருமாலும், சிவனும் ஒருவரே என்ற உண்மை விளக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வேங்கடவன் திருமலையில் திருமாலும், விரிசடைக் கடவுளும் சேர்ந்து ஒருருவிற் காட்சி கொடுப்பதாகப் பேயாழ்வார் பாடியுள்ளார்.

*தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்*

*சூழ்அரவும்பொன்நாணும் தோன்றுமால் சூழும்*

*திரண்டவிபாயும் திருமலைமேல் எந்தைக்கு*

*இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து*

இந்தப் பாடலில் தாழ்ந்த சடையும், ஒளிவீசும் மழுவாயுதமும் உடலைச் சுற்றியுள்ள பாம்பும் சிவனைக் குறிக்கின்றன. நீண்ட முடியும், சக்ராயுதமும், பொன்னால் ஆகிய அரைஞாணும் திருமாலைக் குறிக்கின்றன. இவ்வாறு இருஉருவமும் ஒருவாய்க் கொண்டு ஸ்ரீனிவாசப் பெருமாள் திருவேங்கட மலையில் சேவை சாதித்ததாகப் பேயாழ்வார் கூறுகிறார்.

*"நான்முகனே முக்கண்ணப்பா என்பொல்லாக்*


*கனிவாய்த் தாமரைக்கட் கருமாணிக்கமே"*

என்று பாடிப் பரவசமடைகிறார். அதே போல சிவபெருமானை, "தாமரையான் செங் கண்மால் தாளே கண்டாய்" என்று திருநாவுக்கரசரும், "அலைகடல் அறிதுயில் அமர் அரியுரு இயல்பான்" என்று திருஞான சம்பந்தரும் பாடியுள்ளனர்.

மேலும் இராமநுஜர் காலத்தில் வேங்கடவன் எவ்வித சமய சர்ச்சைகளும் இல்லாதிருந்ததாகவும், வேங்கடவன் சிவனா அல்லது மாலா என்ற குழப்பம் இருந்ததாகவும் தெரிகிறது. இராமானுஜர் வேண்டுகோளுக்கு இணங்க வேங்கடவன் சிவச் சின்னங்களான மான், மழுவை ஏற்காமல் சங்கு சக்கரங்களை ஏற்றுத் "தான் திருமாலே" என்று தெளிவுபடுத்தியதாக இராமாஜர் வரலாறு கூறுகின்றது. சங்கரன்கோயில் என்னும் திருப்பதியில் சிவன் சங்கர நாராயணராகக் காட்சி கொடுப்பதும் வேங்கடவன் கைகளில் நாகத்தையே அணிகலனாக பூண்டுள்ளதும் அரியும் அரனும் வேறல்ல. விரி சடைக் கடவுளும், திருவரங்கப் பெருமாளும் ஓர் உருவாய் அமைந்துஅருள் பாலிப்பவரே திரு வேங்கடமுடையான் என்பது தெளிவாக விளங்கும்.

## வேங்கடவனும் பராசக்தியும்

திருமால் திருத்தலங்கள் அனைத்திலும் மதில் சுவர்களின் மேலும் விமானத்தின் நாற்புறங்களிலும் கருடாழ்வார், ஆஞ்சநேயர் உருவங்களையே காண முடியும். அதற்கு மாறாக திருவேங்கட மலையில்



ஸ்ரீனிவாசப் பெருமாள் ஆலயத்தின் விமானத்தின் மேல் பகுதியில் நான்கு மூலைகளிலும் சிங்க உருவமிருப்பது யாவரும் அறிந்த உண்மை. சிங்கம் அம்பிகையின் வாகனம், இங்கு அன்னை பராசக்தியின் உருவங்கள் உள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே திருமலையில் எழுந் தருளியுள்ள வேங்கடவன் விமானத்தில் நான்கு புறங்களிலும் சிங்கங்கள் இருப்பது பராசக்தியும் திருமாலும் வேறல்ல என்ற உண்மையை உணர்த்தவே ஆகும்.

சிவபெருமான் உமா தேவியை இடது பாகமாகக் கொண்டு சங்கர நாராயணராகவும் விளங்குவதால் உமை யும் நாராயணரும் ஒரு வரே என்ற உண்மை புலப்படுகின்றது. தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலில் அமுதம் கடைந்தெடுத்த பிறகு திருமால் மோகினி உருவம் கொண்டதும் சிவபெருமான் மோகினியிடம் காதல் வயப்பட்டதும் அதன் விளைவாக அருந்தவச் செல்வன் ஐயப்பன் தோன்றியதும் புராண வரலாறு. மேலும் உலக மாயைகளுக்கெல்லாம் காரணியாகிய பராசக்தி மாயாதேவி, மாயாசக்தி என்ற பெயர்களால் அழைக்கப்படுவது போல் அடியார்களை ஆட்கொள்ளும் கண்ணபிரான் மாலவன், மாயவன் என்ற திருப்பெயர்களாலும் அழைக்கப்படுகின்றார். இவற்றோடு உமாதேவ சங்கையும் சக்கரத்தையும் கைகளில் ஏந்தி வைஷ்ணவியாகவும், விஷ்ணு துர்க்கையாகவும் நின்று அருள்பாலிப்பதும் சிலப் பதிகாரம் மதுரைக் காண்டம் வேட்டுவ வரியில் வரும்.

*"சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்*

*செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்றாயால்"*

என்ற அடிகள் அன்னை பராசக்தி சங்கையும், சக்கரத்தையும் தாமரை போன்ற கைகளில் தாங்கி சிவந்த கண்களை உடைய ஆண் சிங்கத்தின் மேல் நிற்கின்றாள் என்று கூறுவதும் திரு.வேங்கடத்தவனும் தில்லை மாகாளியும் ஒருவரே என்று உறுதிப்படுகின்றது.

## முருகக் கடவுளே திருவேங்கடவன்

முருகக் கடவுளும் திருமாலும் ஒன்றே என்பதற்குக் கண்ணனின் பகவத்கீதையே போதுமான ஆதாரமாகும். கீதையில் கண்ணன் தான் படைத்தலைவர்களில் முருகனாகவே இருப்பதாகக் கூறுகிறார். அதை உறுதி செய்யும் வண்ணம் ஆண்டாள் திருப்பாவை 24ஆம் பாசுரத்தில் பெருமானை "வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி" என்று சிறப்பிக்கின்றார். அருணகிரிநாதர் திருவேங்கடமலையானை திருப்புகழ் 244ஆம் பாடலில்

*"மறப்புரிசை வளையும் இலங்கை*
*அரக்கன் ஒரு பது முடி சிந்த*
*வளைத்த சிலை விஜயமுகுந்தன் மருகோனே*
*மலர்க் கமல வடிவுள செங்கை*
*அயற்குமர குகை வழிவந்த*
*மலைச் சிகர வடமலை நின்ற பெருமாளே"*

என்றும் 247ஆம் பாடலில்

*"திரை நீண்டிரைவாலியும்*
*நெடிதோங்கும் மராமரம் ஏமொடு*
*தெச மரம் சிராவணனார் முடிபொடியாகச்*
*சிலை வாங்கிய நாரணனார் மரு*
*மகனாங்குகனே பொழில் சூழ்தரு*
*திருவேங்கட மாமலை மேவிய பெருமாளே."*

என்றும் போற்றி வழிபடுகின்றார். எனவே பழந்தமிழ் நாட்டில் வட எல்லையான வேங்கட மலை யில் நின்று சேவை சாதிக்கும் பரந்தாமன் குறிஞ்சி நிலக் கடவுளான முருகனே என்பதில் சிறிதும் ஐயமில்லை. ●





# சடையப்ப சுவாமிகளின் பாலப் பருவம்!

கா.சிவலிங்கம்

ஏனையோரைப் போலவே சுவாமிகளும் அன்னையின் மடியிற் கிடந்து பால் குடித்து, பின் தொட்டிற் படுக்கையிற் கையசைத்துக் கால சைத்து, அன்னை தந்தையின் முகம் பார்த்து சிரித்து, பாலுக்கு அழுது. குப்புற புரண்டு நிலத்தில் அரைத்து சிரித்து, பாலுக்கு அழுது, குப்புற புரண்டு நிலத்தில் அரைத்து நகர்ந்து பின் எழுந்திருந்து கை, கால் ஊன்றித் தவழ்ந்து எழுந்து விழுந்து அடிமேல் அடிவைத்து நடந்து திரிந்து, யாழினுமினிய மழலை மொழி பேசி. புழுதி மண் அளைந்து, அன்னம் புசித்து, ஓடியாடி விளையாடித்திரிந்து, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து சிறுவர் பராயத்தையடைந்தார்.

அவரது ஐந்தாவது வயதில் தந்தை அவரை பாடசாலையில் சேர்த்து படிக்க வைத்தார்.' துரதிரஷ்டவசமாகத் தந்தையார் தம்பி யப்பா அவர்கள் சுவாமியின் ஆறாவது வயது பூர்த்தியாகும். சமயத்தில் இறைவனடி சேர்ந்து விட்டார். அதன்பின்பு 3ஆம் வகுப்புவரை கல்வி கற்ற அன்னாருக்குப் படிப்பில் நாட்டமில்லாமல் போய்விட்டது. அதற்கு இரண்டு காரணங்கள் முக் கியமானவையாக அமைந்திருந்தன. முதலாவது காரணம் சிறு வயதில் தந்தையை இழந்தது. இரண் டாவது காரணம் குடும்பத்தில் வறுமை. அதனால் உழைத்துப் பணம் தேடி தாயையும் காப்பாற்றித் தாமும் வாழவேண்டுமென்ற கட்டாய நிலை சுவா மிகளுக்கு ஏற்பட்டது.

"கொடிது கொடிது வறுமை கொடிது அதனினுங்

கொடிது இளமையில் வறுமை" என்ற ஔவையின் கூற்றை நிரூபிப்பதுபோல் அவரது வாழ்க்கை வறுமையின் காரணமாகப் பரிதாபத்திற்குரியதாயிற்று. எனவே சின்னஞ் சிறு வயதில் பணம் சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாகப் பாடசாலை படிப்பை 3ம் வகுப்புடன் நிறுத்திக்கொண்டார். படிப்பை விட முக்கியம் தாய்தான் என்பதை அந்த சிறு வயதிலேயே உணர்ந்து கொண்ட உத்தமர் தான் சுவாமி அவர்கள். அன்னைக்காக உழைக்கத் தொடங்கிய சுவாமிகளுக்கு இன்னுமோர் அதிர்ச்சி காத்திருந்தது. சுவாமிகளது 12ஆவது வயதில் அவரது தாயாருக்கு ஏற்பட்ட மரணமே அந்த அதிர்ச்சியாகும். தாயாரின் மரணத்திற்குப்பின் குடும்பத்தில் அனாதரவான நிலைக்குள்ளானார். இருப்பினும் உற்றார் உறவினர்களின் ஆதரவு அவருக்கு சிறிது ஆறுதலையும் தெம்பையுங் கொடுத்தது. தனித்துத் தொழில்களில் ஈடுபட்ட காரணத்தால் அன்றாட வாழ்க்கை பிரச்சினைகளின்றிச் சுமுகமாக நடந்தது. சிறுவனாக இருந்தது. இளைஞனாக மாறிக் காளைப் பருவத்தை அடைந்தபோதிலும் உறவினர்களின் கண்காணிப்பிலும் ஆதரவிலுமே அவர் வாழ வேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாததாயிற்று.

## பைரவி முத்திரை



சங்கல்பங்களும் விகல்பங்களும் மனதில் மாறி மாறி எழுகின்றன. இந்த நிலை விளக்குச் சுடர் காற்றில் அலைபாய்வது போன்றது. சங்கல்ப விகல்பங்கள் ஒடுங்கி உள்ளம் தெய்வத்துடன் ஒன்றியிருக்கும் நிலை, ஆத்ம சாதனங்களில் ஆழ்ந்து செல்லச் செல்லப் படிப்படியாக ஏற்படுகிறது. இதனுடன் தொடர்புடையது பைரவி முத்திரை.

பைரவி முத்திரையில் சாதகனின் கண்கள் மூடாமல் திறந்திருக்கும். ஆனால் அந்த நிலையில் அவன் மனமோ வெளிவியாபாரமின்றி, அகமுகப்பட்டுத் தெய்வ நினைவில் தோய்ந்திருக்கும். எனவே கண்கள் திறந்திருந்தாலும், பைரவி முத்திரையின் போது அவன் புறவுலகம் பற்றிய நினைவிலிருந்து விடுபட்டிருப்பான். இந்த மனநிலையைக் காற்றில் அலைபாயாத விளக்குச் சுடருடன் ஒப்பிடலாம்.

## சித்தானைக் குட்டிச் சுவாமிகள் நோய் தீர்த்தமை

சுவாமிகளின் சிறு பராயத்தில் அதாவது அவரது 13ஆவது வயதளவில் நடந்த ஒரு சம்பவம் இங்கு நினைவுகூரத்தக்கது. சுவாமிகளின் உடலெங்கும் சொறிசிரங்குகள் உண்டாகியிருந்தன. அதனால் அவர் மிகுந்த துன்பத்துக்குள்ளானார். எந்த வைத்தியத்திற்கும் அது குணமடையவில்லை. அதனால் அவரது உறவினர்கள் தாங்கள் தீர்மானித்தபடி சுவாமிகளைக் காரை தீவிலிருந்த சித்தானைக் குட்டிச் சுவாமியிடம் கூட்டிச் சென்று காட்டினர். அந்நேரம் சித்தானை குட்டி சுவாமிகள் உணவு உட்கொண்டவாறு இருந்தார். அவர்கள் கூறியவற்றை செவிமடுத்த சித்தானைக் குட்டிச்சுவாமி சாப்பிட்டு முடிந்ததும் பாத்திரத்தை கழுவி அதிலிருந்த எச்சில் தண்ணீரை யாரும் எதிர்பார்த்திராத நிலையில் சடையப்பர் சுவாமிகள் மீது வேகமாக வீசி ஊற்றினார். இதைப்பார்த்ததும் சுவாமிகளோடு வந்தவர்களுக்கு கோபம் உண்டாயிற்று. "ஏன் இவ்வாறு செய்தீர்கள்" என்று சித்தானை குட்டிச் சுவாமி மீது கடிந்தனர். அவரும் "போங்கள் நாளைக்கு வாருங்கள்" என்று கூறினார். அவர்களும் மன வருத்தத்துடன் சுவாமிகளையுங் கூட்டிக் கொண்டு வீட்டுக்கு வந்தனர். என்ன அதிசயம் மறுநாட்காலை எழுந்து பார்த்த போது சொறிச் சிரங்குகள் யாவும் இருந்த இடமும் தெரியாது மறைந்து குணமாகியிருந்தன. எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. பின்பு அவர்கள் சித்தானைக் குட்டிச் சுவாமியிடம் சென்று தாங்கள் கடிந்து கொண்டதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு சொறிசிரங்கு குணமடைந்ததற்கு நன்றியையும் தெரிவித்துக் கொண்டு திரும்பினர். இதன் பின்னர் சுவாமிகளுக்கு சித்தானைக் குட்டிச் சுவாமி மீது நம்பிக்கையும் முருகனிடத்தில் மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் ஏற்பட்டது.

முதலில் தந்தையை இழந்து பின் தாயையும் இழந்த நிலையில் சுவாமிகள் தனிமையில் இருப்பதை எண்ணி உறவினர்கள் மனம் வருந்தினர். எத்தனை உறவுகள் இருந்தபோதிலும் தாய்க்குப்பின் தாரம் தான் ஒருவனுடைய கருத்தறிந்து செயற்பட்டு நல்லதுணையாக இருக்க முடியும் என்பதையும் அவர்கள் உணர்ந்தனர்.

எனவே காளைப் பருவமெய்தி வயது 30இல் அடியெடுத்து வைத்து சுவாமி அவர்கட்கு திருமணம் செய்து வைக்க உறவினர்கள் தீர்மானித்தனர். அதற்கான காலமும் கனிந்து வந்தது. மட்டிக்கழிக்கு மேற்குப் பக்கத்தில் கருவேப்பங்கேணி என் னும் ஊர் உண்டு. அங்கே சுவாமிகளின் உறவி னர்களும் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் ஒருவரிடமிருந்து திருமணப்பேச்சு ஆரம்பமாகி வெற்றியிலும் முடிந்தது. அதன்படி அக்காலத்து முறைப்படி பதினாறு வயது நிரம்பிய மங்கை மாரிமுத்துவிற்கும் காளை சுவாமி அவர்கட்கும் கோலாகலமாகத் திருமணம் நடந்தேறியது. புதுமணத் தம்பதிகளின் வாழ்க்கைப் படகு சம்சார சாகரத்தில் அமைதியாகவும், இனிமையாகவும், மகிழ்ச்சியுடனும் நகர்ந்து சென்று கொண்டிருந்தது.

(தொடரும்...)



என்.தம்மண்ணன்

# கனவின் மூலமும் உதவியைப் பெறலாம்!

திருமதி ருத் ஒரு விதவைப்பெண். ஒரு டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் வேலை பார்த்து வருகிறார். அந்தப் பெண் வேலையில் சேர்ந்த ஆறு மாதத்துக்குள் அவருடைய தாயாருக்கு உடல்நலமில்லை என்று செய்தி வந்தது. தாயார் வெகு தொலைவில் 600 மைல்களுக்கப்பால் உள்ள நகரில் வசித்து வருகிறார்.

தாயாரைப் போய்ப்பார்க்க வேண்டும் என்ற ஆவல் திருமதி ரூத்துக்கு ஏற்பட்டது. ஆனால் அப்போது திருவிழாக் காலம் டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் விடுமுறை கொடுக்கமாட்டார்கள். வேலையை விட்டுவிட்டு வேண்டுமானால் போகலாம். அதற் குள் தாயார் நிலைமை மோசமாக இருப்பதாகத் தொலைபேசித் தகவல் திருமதி ரூத்துக்கு வந்தது.

வேலையை விட்டுவிட்டு தாயாரைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற முடிவுடன் வீட்டுக்குத் திரும்பினார். எப்படியும் தாயார் மரணப்படுக்கையில் இருக்கும் போது அவர் அருகில் இருக்க விரும்பினார்.

எதற்கும் கனவின் மூலமாக தாயாரின் நிலையைத் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணினார். திருமதி ரூத்துக்கு இந்த உபாயம் பரிச்சயமானதே. அவர் E.S.P. ஆற்றல்களை வளர்த்துக் கொண்டிருப்பதால் கனவில் முயற்சி செய்து பார்க்கத் தீர்மானித்தார்.

படுப்பதற்கு முன்பாக அமைதியான தியானத்தில் அமர்ந்து Dream ordering technique எனும் கனவை வரவழைத்து அதன் மூலம் தனது தாயின் உடல் நிலையைத் தெரிந்துகொள்ள விரும்பினார்.

அமைதியாக ஆல்பா நிலைக்கு வந்து ஆழ்ந்து இருக்கும் நிலையில் எனது தாயாரின் நோய், அவரது நிலைபற்றி எனக்குக் கனவில் தெரிவிக்க வேண்டும் என்று உள் மனதிடம் பல முறை சொல்லி அந்தக் கனவை நான் ஞாபகத்திலும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று உருக்கமாக அன்புடன் உள் மனதிடம் வேண்டிக் கொண்டு படுத்துவிட்டார்.

திருமதி ரூத் அதிகாலையிலேயே எழுந்துவிட்டார் அவளது தாயாரை அவர் கனவில் கண்டார். தாயார் சமையலறையில் வேலை செய்து கொண்டிருப்பதாக கனவில் கண்டார். தாயார் சமையலறையில் வேலை செய்து கொண்டிருப்பதாக கனவில் பார்த்தார் திருமதி ரூத் தாயார் தன் மகளைப் பார்த்து "நீ வேலை எதுவும் செய்ய வேண்டாம். போய் உன் வேலையைக் கவனி என்று சொல்வதை கனவில் பார்த்தார். அதற்குள் திருமதி ரூத் விழித்துக் கொண்டார். செய்தியை நன் றாக தெரிந்துகொண்டார். திருமதி ரூத் தாயார் நன்றாக இருப்பதை கனவில் பார்த்து விட்டார்.

அதனால் வேலையை விட்டுப் போகாமல் டிபார்ட்மெண்ட் ஸ்டோர்க்கு வேலைக்குப் போய் விட்டார். அங்கிருந்து டெலிபோன் செய்து கேட்டதில் தாயார் தேறி வருவதாகத் தெரிந்து கொண்டார்.

அதனால் வேலையை விட்டுவிட்டுப் போக



வேண்டிய அவசியம் திருமதி ரூத்துக்கு ஏற்பட வில்லை.

***கனவை வரும்படி அழைப்பது மிகவும் சுலபமானது இதற்கு எந்தவிதமான சிரமமும் படத்தேவையில்லை கீழ்க்கண்டபடி செயல்பட்டால் போதும்.***

1. படுக்கையில் இருந்து கொண்டு பார்வையை மேலே உயர்த்தி கண்களை மூடிக் கொண்டு ஆல்பா லெவல் தியானத்தில் இருக்கவும்.

2. மனதுக்குள் "நான் எனது பிரச்சினைகளுக்கு விடை காண கனவில் ஒரு தீர்வைச் சொல்லவும். நான் அதைப் பார்த்து விவரம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று உணர்வுடன் பல முறை மனதுள் சொல்லிக் கொண்டு படுத்துத் தூங்கி விடவும்.

3. காலையில் விழித்து எழுந்ததும் நீங்கள் பார்த்த கனவு உங்கள் ஞாபகத்துக்கு வரும். அதிலிருந்து உங் களது கேள்விக்கு விடையைத் தெரிந்து கொள்ளலாம்.

### உல்ப் மெஸ்ஸிங்கின் ஈ.எஸ்.பி. ஆற்றல்கள்

சோவியத் ரஷ்யாவில் கோமெல் என்ற பைலோ ரஷ்யாவின் நகரில் உல்ப் மெஸ்ஸிங் தனது ஈ.எஸ்.பி. வித்தைகளை ஒரு பட மாளிகையில் காட்டிக் கொண்டிருந்தார்.

அப்போது சோவியத் இரஷ்யப் பொலிசார் திடீ ரென மேடைக்கு வந்து அந்தப் படமாளிகையில் கூடியிருந்த மக்களிடம் மன்னிக்கவும் இத்துடன் இவரது மேஜிக் காட்சி முடிந்தது என்று சொல்லி விட்டு உல்ப் மெஸ்ஸிங்கை மேடையிலிருந்து வெளியே அழைத்துப் போய் அங்கு காத்திருந்த ஒரு காரில் ஏற்றிக் கொண்டு சென்று கொண்டிருந்தார் கள். அக்காலத்தில் 1940—45 ஆம் ஆண்டுகளில் ஸ்டாலின் சர்வாதிகாரம் நடந்து கொண்டிருந்தது. இது போல, திடீரென்று ரஷ்ய ரகசிய பொலிஸார் பலரை அழைத்துக் கொண்டு போவது வழக்கம். அப் படி போனவர்கள் அநேகமாக திரும்பமாட்டார்கள். அவர்களைப் பற்றிய எந்தச் செய்தியும் யாருக்கும் தெரிய வராது.

உல்ப் மெஸ்ஸிங் இரகசிய பொலிஸ் அதிகாரி களைப் பார்த்து "எனது பெட்டி ஹோட்டலில் இருக்கிறது. ஹோட்டல் பில்லுக்கும் பணம் கட்ட வேண்டுமே. எனது பெட்டியில் துணிமணிகள் இருக் கின்றன என்றார். ●

# விஸ்வரூப தரிசனம்!

இறைவனை எங்கும் நிறைந்திருப்பவராகக் காண்பது விஸ்வரூப தரிசனம் எனப்படும்.

"விஸ்வரூபம்" என்பது பகவானின் சர்வ வியாபகத்துவம் (All Pervasiveness or immanence) என்பதைக் காட்டுகிறது. எனவே விஸ்வரூப தரிசனம்" என்றால், "இறைவனின் சர்வவியாபகக் காட்சி" என்று பொருள்.

கீதை 10ஆவது அத்தியாயமாக "விபூதி யோகம்" அமைந்திருக்கிறது. இந்தப்பகுதியில் அர்ஜுனன் கேட்கக் கூறுகிறான். 10ஆவது அத்தியாயத்தில், இறைவனின் எல்லையற்ற ஏற்றங்கள் அர்ஜுனனால் "சிரவணம்" செய்யப்படுகிறது. 11ஆவது அத்தியாயமான "விஸ்வரூப தரிசனம்" என்ற பகுதியில், ஸர்வ வியாபகத்துவம் என்ற இறைவனின் தனிப்பெருமை காட்சியாக (தரிசனமாக) அர்ஜுனனுக்குக் காண்பிக்கப்படுகிறது.

முதலில் சிரவணம், பின்பு சிரவணம் செய்த கருத்துக்கள் நன்கு வேரூன்ற தரிசனம் என்ற கீதையின் அற்புதமான இந்த அமைப்பு சிந்தனைக்கும், பாராட்டுவதற்கும் உரியது.

அதிகாலையில் கோயில் திறந்ததும் தெய்வத்தைத் தரிசனம் செய்வதும் விஸ்வரூப தரிசனம் எனப்படும்.

அர்ஜுனன் பெற்ற விஸ்வரூப தரிசனம் நமக்கு எங்கே கிடைக்கப் போகிறது? இரண்டாவது சொல்லப்பட்ட கோயில் அல்லது பூஜையறையில், விடியற்காலை விஸ்வரூப தரிசனத்தை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து நாம் பெற்றாலே பெரிய பாக்கியம்.





### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வியாழக்கிழமை காலை 06.00 - 07.00க்குள் தட்சிணா மூர்த்தியை வணங்கி மஞ்சள் பொடி அர்ச்சனை செய்து நெய் விளக்கு ஏற்றி வர எல்லாம் சிறப்பாக அமையும்.

**இம்மாதம் அதிர்ஷ்ட கிழமைகள் : புதன், வியாழன், சனி**



# கன்னி

### துர்முகி ஆண்டு புரட்டாதி மாதம் 17.09.2016 முதல் 16.10.2016

ஆக்கப்பூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் சிந்தித்து செயல்படும் கன்னி ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ஜென்ம குருவும், சந்திரன் பார்வை ராசிக்கு வருவதால் கூட்டுத் தொழிலும், வெளிநாட்டுத் தொடர்புகளும், உங்களின் வாழ்க்கைக்கு வளர்ச்சியையும், பொருளாதார வளர்ச்சியையும் தரும்.

**பணியாளர்களுக்கு**

தொழிலில் கொடுத்த பணியை சிறப்பாக செய்து மேன்மை அடைவீர்கள். நீண்ட நாள் வெளிநாடு செல்லும் முயற்சி விரைவில் நடந்தேறும். விரும்பிய தொழிலில் சிறப்பாக செயல்படுவீர்கள். உயர் அதிகாரிகளின் அன்பையும், உதவிகளையும் பெறுவீர்கள். பொருளாதாரத்தில் சிறப்பாக அமையும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது வாழ்வில் கொடுத்த செயலில் விரைந்து முடிக்கும் வகையில் உங்களின் செயல்பாடுகள் அமையும். காலத்திற்கு தகுந்த சிறந்த முடிவுகளை எடுப்பீர்கள். மீனவர்களின் பிரச்சினைகளுக்கு உங்களின் ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும்படி அமையும். பொருளாதாரத்தில் நன்மையை பெறுவீர்கள்.

**வியாபாரிகளுக்கு**

வியாபாரத்தில் உங்களின் முயற்சிகளுக்கு செயல்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் உங்களின் தொழில் வளர்ச்சிக்கு சிறந்த நண்பர்களின் உதவியும், பண உதவியும் கிடைக்கும். வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளையும் அமையும். மாற்றங்களை எதிர் நோக்கி உங்களின் செயல்பாடுகள் அமையும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் சீர்திருத்தங்களை செய்து கலை வளர்ச்சிக்கு பாடுபடுவீர்கள். பாடலாசிரியர்கள், இணை இயக்குநர்கள், எடிட்டர்களுக்கு தொழில் வாய்ப்புகள் அமையும். கணணி மூலம் சிலருக்கு வீட்டில் இருந்தபடியே செய்யும் புராஜெக்ட் வேலை கிடைக்கும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**பெண்களுக்கு**

பெண்களின் சுயதொழில் வளர்ச்சி கூடும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். ஆன்மீகத்தில் ஆர்வம் அதிகம் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் வளர்ச்சியை பெறுவீர்கள். பொருளாதாரம் ஏற்றம் தரும்.

**மாணவர்களுக்கு**

பொருளாதாரம், சட்டம் அரசியல், கணனி கல்வியில் சிறந்து வளர்ச்சியை பெறுவீர்கள். தொலைதொடர்பு கல்வியில் வேலை வாய்ப்புடன் மேற்கல்வி பெறும் வாய்ப்புகள் அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

19.09.2016 திங்கள் அதிகாலை 04.34 முதல் 21.09.2016 புதன் காலை 06.50 மணி வரையும்

16.10.2016 ஞாயிறு பகல் 12.30 முதல் 18.10.2016 செவ்வாய் பகல் 02.54 மணி வரையும்

### நட்சத்திர பலன்கள்

### உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்

உறுதியான எண்ணங்களால் சிலருக்கு புதிய தொழில் வாய்ப்பும், கொடுத்த இடத்தில் பணம் வரவும் உண்டாகும். திறமைகளை வளர்த்து கொள்வீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### ஹஸ்தம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

தொழிலில் இருந்து வந்த இடையூறுகள் களையும். செய்யும் தொழிலை விருத்தி செய்து கொள்வீர்கள். பரபரப்பான சூழ்நிலையிலும் நீங்களே முன்னேறுவீர்கள். பொருளாதரம் சிறக்கும்.

### சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்

கலைத்துறையினர் நேரத்திற்கு தவறாமல் நிகழ்ச்சிகளை செய்து முடிப்பீர்கள். விருப்பமான விடயங்களில் அதிக ஈடுபாடு கொள்வீர்கள். பொருளாதாரம் வளர்ச்சியை தரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** பச்சை, மஞ்சள், நீலம்

**அதிர்ஷ்டதிசைகள்:** தெற்கு, தென்மேற்கு, வடகிழக்கு



டொக்டர் சிவப்பிரியா

# காஞ்சியின் அற்புதமாய் நந்திவாகனரின் தங்கத்திருமேனி!

சித்தர்கள் யோகிகள் காந்தர்வர் பட்சர் முதலியோர் பூச்செண்டுகளைக் கொண்டு வந்து ஏகாம்பரேஸ்வரரைப் பூஜித்துத் தங்கும் இடம் செண்டனை வெளி என்று பெயர் பெற்றது. காஞ்சிபுரத்து அற்புதங்களில் ஒன்று நந்திவாகனரின் தங்கத் திருமேனி. இவரை வழிபடுகின்றவர்கள் பிறவி நீங்கி முக்தி பெறுவர். பரம்பொருளை உணர்ந்து வழிபடும் மெய்யன்பர்கள் சிவ நினைவுடன் இவரைத் தீண்டினால் அவர்கள் கையில் இருக்கும் பொருள் எதுவாயினும் தங்கமாக மாறி விடும்.



ஏகாம்பரேஸ்வரர் கோவில்

இத்தகைய அதிசய மூர்த்தி மட்டுமன்று அதிசய தீர்த்தங்களும் காஞ்சிபுரத்தில் உள்ளன. புண்ணிய தீர்த்தம் என்ற குளத்தில் சிவநாமம் ஓதி ஈசன் நினைவுடன் முழுகி எழுந்தால் தீமையெல்லாம் நன்மையாக மாறுகின்றன. மற்றொரு தீர்த்தம் இஷ்ட சித்தி தீர்த்தம் என்னும் பொய்கை. இப் பொய்கையில் பரமனைப் போற்றி ஈஸ்வரனை உள்ளத்தில் நினைந்து நீராடுபவர்களின் விருப் பங்கள் நிறைவேறுகின்றன. இதனாலேயே இந்தப் பொய்கைக்கு இஷ்ட சித்தி தீர்த்தம் அதாவது வேண்டியதை அளிக்கும் நீர்நிலை என்று பெயர் உண்டாயிற்று. மற்றொரு அற்புதக் குளத்திற்கு சுந்தரக்குளம் என்று பெயர்.

இக்குளத்தில் அழகேசனைத் துதித்து நீராடினால் மிக அழகிய தோற்றத்துடன் வெளிவருகின்றனர். தில்லையில் திருநீலகண்டத்தம்பதியரை இளமையாக்கிய திருக்குளம் போன்று காஞ்சியில் அழகில்லாதவர்களையும் அழகாக்கும் சுந்தரக்குளம் உள்ளது. இவையேயல்லாமல் பைம்புனல் கிணறு, உலகாணி, சந்திர மாதிரம், காப்புடைத் தீர்த்தம், சாருவ தீர்த்தம் எனப் பலப்பல புனித நீர்நிலைகள் காணப்படுகின்றன.

காஞ்சிபுரத்தில் இருந்த மிக விந்தையான ஒரு இடம் மாய மண்டபம். இந்த மண்டபத்திற்குள் நுழைந்தவர்கள் மற்றவர்களின் கண்களுக்குப் புலனாக மாட்டார்கள். அவர்களால் மற்றவர்களைப் பார்க்க முடியும். வாலிக்குப் பயந்து வந்த சுக்கிரீவன் இந்த மண்டபத்தில் தங்கியிருந்தான். காஞ்சியின் மற்றொரு அற்புதம் இன்பக் குகை. முழுமுதற் பொருளின் நினைவோடு இந்தக் குகையில் நுழைந்து அங்குள்ள லிங்கப் பரம்பொருளைத் தரிசனம் செய்து வலம் வந்து தொழுபவர்களின் துன்பம் கவலையெல்லாம் காற்றாகப் பறந்து போக மிகுந்த இன்பம் பெறுகின்றனர். எல்லோருக்கும் இன்பம் அளிக்கும் இன்பக் குகையே அல்லாமல் சுக்கிரீவன் தங்கியிருந்த குரங்கு வடிவம் கொண்ட மற்றொரு குகையும் உள்ளது. இவ்வாறு எண்ணற்ற கோயில்களையும் தீர்த்தங்களையும் அற்புதங்களையும் குகைகளையும் கொண்டு காஞ்சித் திருநகரம் பதினான்கு உலகங்களிலும் உள்ள வளங்களையெல்லாம் உடைய கொள்கலம் என்று கூறும்

படிப் பொலிவுற்றுப் புகழ் பெற்றுச் சிறந்திருந்தது.

இத்தகைய சிறப்புகள் மிகுந்து பொன்னால் மிளிரும் பொன்னகரமான காஞ்சிபுரத்தை மாணிக்க வாசகப்பெருமான் மதுரையிலிருந்து தில்லை செல்லும் போது கண்டு தொழுதார். கச்சிக்கம்பன் மாணிக்கவாசகப் பெருமானுக்கு முப்புரம் எரித்த வில்லாளியாக ஒற்றை அம்புடன் காட்சி தந்ததால் ஏகம்பர் (ஏக+அம்பர்) என்று திருப்பெயர் உண்டா யிற்று. திருப்பெருந்துறையில் மாணிக்க வாசகரைத் தடுத்து நிறுத்தி தட்சிணாமூர்த்தி வடிவைக் காட்டி ஓங்காரப் பொருள் உபதேசித்து ஆட்கொண்டரு ளிய பரமசிவம் அவருக்கு அருளிச் செய்ததற்கு ஏற்ப தலந்தோறும் திருக்காட்சி தந்தருளினார். மாணிக்கவாசகர் ஏகாம்பரேஸ்வரரைத் தொழுத போது முப்புரம் எரித்த வில்லாளியாக ஒற்றை அம் புடன் பரமன் வெளிப்பட்டுக் காட்சி கொடுத்தார்.



மதுரையில் கொற்றாளாகவும் வேடுவ னாகவும் போர்ச் சேவகனாகவும் பரிப்பாகனாகவும் திருவாத வூரில் நடராஜப் பெருமானாகவும் அடியவரா கவும் திருவுத்தரகோச மங்கையில் ஜோதியாகவும்



இஷ்ட சித்தி தீர்த்தம்



நந்திவாகனம்

மாணிக்கவாசகருக்குத் திருக்காட்சி தந்தருளிய மூலப்பொருள் காஞ்சிபுரத்தில் ஒற்றை அம்புடன் கூடிய வில்லாளியாக திரிபுராரியாக வெளிப்பட்டுத் திருக்காட்சி தந்தார். ஏகாம்பரேஸ்வரர் ஏக அம்ப ராகக் காட்சி கொடுத்த கருணையை


*ஈரம்பு கண்டிலம் ஏகம்பர்*
*தன் கையில் ஓரம்பே முப்புரம் உந்தீபற*
*ஒன்றும் பெருமிகை உந்தீபற*
*தாம் அடியிட்டலும் அச்சு முறிந்தது என்று உந்தீபற*
*அழிந்தன முப்புரம் உந்தீபற*
*உய்யவல்லார் ஒரு மூவரைக் காவல் கொண்டு எய்யவல்லார்*

என்று ஓங்கார வாசகர் பாடியுள்ளார். ஏகம் பனது திருக்காட்சி பெற்ற மாணிக்க வாசகர் திருவுந் தியார் என்ற பதிகம் பாடித் தொழுதார்.

பரமேஸ்வரன் முப்புரம் அழிப்பதற்காக இமய மலையை (கல்) வில்லாக வளைத்த போது மகா விஷ்ணு அம்பாகிப் பணிபுரிந்தார். வாயு அம்பின் இறகாகவும் அக்கினி முனையாகவும் இருந்தன. பூமி தேரானது. சூரியனும் சந்திரனும் சக்கரங்களா யினர். பிரம்மன் தேரோட்டியானான். எல்லோரும் தாங்கள்தாம் இறைவனுக்குத் துணை. நாம் ஒன்று சேர முப்புரம் அழியப்போகின்றது என்று அகந்தையுடன் இருந்தனர்.

அப்பொழுது எல்லாம் வல்ல முழுமுதல் சிறிதே புன்னகை பூத்து தேரின் மீது திருவடியை வைத்தார். புன்னகை புரிந்த பரமன் திருவடிப்பட்ட அளவிலே தேர் அச்சு முறிந்து விழுந்தது. புன்னகையிலிருந்து புறப்பட்ட தீயால் முப்புரம் எரிந்து சாம்பலாயின. இவ்வாறு முப்புரங்களோடு எல்லோருடைய ஆணவம் முதலிய மூன்று மலங்களும் எரிந்து சாம்பலாகிப் போயின. ●

ஆர்.பி.வி.எஸ்.மணியன்



பகவான் கீதையில் அர்ஜுனனிடத்தில் உலகில் உள்ள உயர்ந்த விடயங்கள் எல்லாமே இறைவனின் விபூதியே என்பதை எடுத்துச் சொல்கையில் வேள்விகளில் தான் ஜபவேள்வியாக இருப்பதாகச் சொல்கிறான்.

"**யக்ஞானாம் ஜப யக்ஞோஸ்மி**" என்பது பகவானின் திருவாக்கு.

வெளியிலே அலைந்து திரிந்த மனிதன் தன் களைப்பைப் போக்கிக் கொள்ள வீட்டிற்கு வந்து. தன்னை எப்படி ஆசுவாசப்படுத்திக் கொள்கிறானோ அது போல நம் ஆணைக்குக் கட்டுப்படாமல் மேய்ந்து கொண்டிருக்கும் இந்திரியங்களை ஒருமுகப்படுத்தி ஆசுவாசப்படுத்துவதற்கு சிறந்த சாதனம் ஜபமேயாகும்.

மந்திரங்கள் சப்தரூபமாக உள்ளவை. இவை தேவதைகளின் சூக்ஷ்ம சரீரம். இவைகளில் இவ்வளவு என்று குறிப்பிட முடியாத சக்தி உண்டு.

பகவானுடைய நாமாவை மந்த்ரமாக ஜபிக்கின்ற போது "ஓம் நமோ" என்ற இரு வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்கிறோம்.

"**ஓம் நமோ நாராயணாய**" "**ஓம் நமசிவாய**"

"**ஓம் நமோ வாஸுதேவாய**"

என்றெல்லாம் சொல்வதன் தாற்பரியம் அவனுடைய சரணாரவிந்தங்களில் சரண் அடைவதான பாவனை முழுமையாக ஏற்படவே.

நமஸ்கரிப்பவன் தன்னிலும் உயர்வான ஒன்றின் முன்னால்தான் வணங்குவான். பகவானை நமஸ்கரிக்கும் போது தன் திறமை, தன் சக்தி. தன் புத்தி எல்லாமே அவன் தந்தது அதனை அவனிடத்தில் முற்றிலும் இழந்து நிற்கிறான்.

நமஸ்கரிப்பதனை வார்த்தைகளால் கூறுவதே



# ஜப வேள்வியும் நானே!

"நமோ" என்ற இரண்டு எழுத்துகளின் தாற்பரியம் "நமம" என்பதும் இதில் அடங்கும். என்னுடையது என்பதாக எதுவும் இல்லை. எல்லாம் உன்னுடையது என்பது இதன் பொருள்.

நமோ என்று சொல்லும் போது மானசீகமாகவே ஜபம் செய்பவன் இப்படிப்பட்ட சரணாகதி நிலையை எட்டி விடுகிறான். அவனுடைய போலித்தனமான தற்பெருமை, அகங்காரம், ஆணவம் எல்லாம் அவனை விட்டு விலகி விடுகின்றன. அந்த நிலையில் அவன் தனக்குள் இருக்கும் பரம்பொருளைப் புரிந்து கொள்வதும் எளிதாகிவிடுகிறது.

***ஓம் என்பது அந்தப் பரம்பொருளின் குறியிட்டு ஒலி குறியீட்ட வடிவம்.***

***"ஓம் நமோ நாராயணாய"*** என்று சொல்லும் போது இந்த மூன்றையுமே ஜபம் செய்பவன் கண்டுகொண்டு நாராயணன் என்ற பரம்பொருளின் முன்னிலையில் தன்னை இழந்து, பரம்பொருளை உணர்ந்து சரணாகதி நிலையை அடைந்துவிடுகிறான். இதை நாம் சாதாரணமாக எண்ணங்களின் மூலம் அடைய முடியாது.

அதை அடைய உதவும் சூத்திரமே ஜபம் செய்யும் போது உபயோகிக்கப்படும் மந்தரம் ஆகும். பல சூட்சுமமான சொற்கள் ஜபத்தில் பயன்படுத்தப் படுகின்றன. அவை "மந்த்ரங்கள்" என்று ஸம்ஸ்க்ருத மொழியில் அழைக்கப் பெறுகின்றன.

மந்த்ரம் என்பதற்கு ***"ஜபிப்பவனைக் காப்பாற்றி மோக்ஷம் அளிப்பதே மந்த்ரம்"***

***"மன்னாத் த்ராயதே இதி மந்த்ர"*** என்று ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

மந்த்ரம் என்பது இறை சக்திக்கு கடவுளுக்கு நிகரான ஒலி. அதனால் ஏற்படும் ஒலி அலைகள் நம்முள் தெய்வசக்தியைத் தோற்றுவிக்கின்றன.

தெய்வம் அதன் உருவம், அதன் நாமம், அதன் மந்த்ரம் ஆகிய அனைத்தும் ஒன்றே ஆகும்.

எல்லாச் சொற்களும் மந்த்ரங்களாக ஆக முடியாது. மந்த்ரங்களும் வெறும் சொற்களல்ல. அவை தெய்வ சக்தி வாய்ந்த அதி சூட்சுமமான சொற்கள்.

ஞானிகளும், ரிஷிகளும் ஆத்மஞானம் பெற்ற சமயத்தில் அந்த மந்த்ரங்களை உபதேசித்தார்கள் அவற்றை அவர்கள் ஒளி வடிவமாகவோ அல்லது ஒலி மூலமாகவோ கண்டார்கள்.

ஒரு சாதாரண மனிதனுக்கோ மந்த்ரம் என்பது வெறும் சப்தமாகவே தோன்றும். ஆனால் அதுவே ஒரு ஆத்ம சாதகனுக்கோ ஆத்ம ஞானத்தையே அளிக்கக்கூடிய வல்லமை பெற்ற ஒரு சொல்.

எப்படி ஒரு சிறிய ஆல விதையில் பிரம்மாண்டமான ஒரு பெரிய ஆலமரமே அடங்கியிருக்கிறதோ அது போலவே ஆத்ம ஞானமென்பது ஒரு மந்த்ரத்தில் சூட்சுமமாகப் படிந்திருக்கிறது. •

## முகுந்தன் எனும் திருநாமம்!

"மு" என்பதற்கு முக்தியை வழங்குபவன் என்று பொருள். "கு" என்பதற்கு இந்த உலகத்தைச் சேர்ந்த இன்பங்களை அருள்பவன் என்று பொருள். எனவே இம்மை மறுமை எனப்படும் பர அபர ஞானங்களை வழங்குபவன் என்பதே, முகுந்தன் என்ற திரு நாமத்திற்கு உரிய சரியான பொருளாகும்.

## இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில் விநாயகரையும், சிவனையும் தரிசனம் செய்து கிழக்கு நோக்கி அமர்ந்து தியானம் செய்து உங்கள் வேண்டுதலை சொல்லி வர விரைவில் சிறப்பாக நடக்கும்.



**இம்மாதம் அதிர்ஷ்ட கிழமைகள் : வெள்ளி, புதன், சனி**



# துலாம்

### துர்முகி ஆண்டு புரட்டாதி மாதம் 17.09.2016 முதல் 16.10.2016

பிறருக்கு உதவி செய்து மன மகிழ்ச்சியை அடையும் குணம் கொண்ட துலாம் ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு மறைவு ஸ்தானத்தை குரு பார்வை பெறுவது சிறந்த வளர்ச்சியையும், கடன் தொல்லைகளிலிருந்து படிப்படியாக நிவர்த்தியும் கிடைக்கும். செய்யும் தொழிலில் இருந்து வந்த மந்த நிலை மாறி தொழிலில் முன்னேற்றம் அடைவீர்கள். சொந்த உறவுகளை காட்டிலும் வெளிவட்ட நண்பர்களின் மூலம் வளர்ச்சியை பெறுவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**பணியாளர்களுக்கு**

பணியாளர்களின் பணிகளில் தொடர்ந்து செயல்பட்டு முன்னேற்றம் காண்பீர்கள். மாற்று தொழில் வாய்ப்புகள் சிலருக்கு உண்டாகும். வர வேண்டிய பாக்கிகள் வசூலாகும். எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. பெண்களிடம் கவனமாக இருப்பது உங்களுக்கு நன்மையை தரும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொதுவாழ்வில் எப்பொழுது ஆர்வமுடன் செயல்படும் நீங்கள் மற்றவருக்கு உதவி செய்வதில் சந்தோசம் அடைவீர்கள். நல்ல செயல்களையும், தீர்க்கமான முடிவுகளை எடுப்பதில் வல்லவராக திகழ்வீர்கள். பொது விடயத்தில் எதையும் துணிவுடன் செயல்படுவீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**வியாபாரிகளுக்கு**

வியாபாரத்தில் சொந்த முயற்சிகளில் நல்ல வளர்ச்சியையும் புதிய வாய்ப்புகளையும் பெறுவீர்கள். உங்களின் தொழில் ஸ்தானாதிபதி உங்களுக்கு அடிக்கடி பொருளாதார வளர்ச்சியையும், வெளிவட்ட பழக்கங்களையும் உருவாக்கி தருவார். உணவு விடுதிகள், காய்கறி வியாபாரம் நன்றாக இருக்கும். உழைப்பிற்கு தகுந்த வருவாய் பெறுவீர்கள்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் எதிலும் சிரத்தையுடன் செயல்படும்படி அமையும். உங்களுக்கு பலர் போட்டியாக வந்தாலும் உங்களின் கடமைகளை சிறப்பாக செய்து வளர்ச்சியை பெறுவீர்கள். நடிகர்களின் வாழ்கையில் நல்ல வளர்ச்சியும், புதிய வாய்ப்பும் அமையும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் கிடைக்கும்.

**பெண்களுக்கு**

முயற்சிகளுக்கு நல்ல வளர்ச்சியை பெறுவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். சுயதொழிலில் கவனம் செலுத்தி முன்னேற்றம் பெறுவீர்கள்.

**மாணவர்களுக்கு**

மாணவர்களின் தொழில் கல்வி மேன்மை பெறும். விடுபட்ட கல்வியை தொடர்வீர்கள். வெளிநாட்டு கல்வி வளர்ச்சி பெறும். ஆசிரியர்களின் உதவி நன்மையை தரும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

21.09.2016 புதன் காலை 06.51 முதல் 23.09.2016 வெள்ளி காலை 09.29 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

### சித்திரை 3, 4 ஆம் பாதங்கள்

சுதந்திரமான முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தில் பல சோதனைகள் வந்தாலும் எல்லாம் உங்களின் சீரிய முயற்சியால் சிறப்பாக அமையும். பொருளாதாரம் வரவும் செலவும் சமமாக இருக்கும்.

### சுவாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

சுறுசுறுப்புடன் எப்பொழுதும் இயங்கி கொண்டிருக்கும் நீங்கள் உறவுகளை நேசித்தாலும் உங்களின் கௌரவம் குறையாமல் இருந்து விடுவீர்கள். பொருளாதார நிலை ஏற்ற இறக்கமாக இருக்கும்.

### விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

முக்கிய முடிவுகளுக்காக காத்திருக்கும் நீங்கள் உருப்படியாக செயல்களை விரும்பி செயல்படுத்துவீர்கள். எல்லோரும் பயன் பெறும் வகையில் உங்களின் செல்பாடு அமையும். பொருளாதாரம் நன்மையாக இருக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள் : வெண்மை, நீலம், பச்சை**
**அதிர்ஷ்ட திசைகள் : மேற்கு, வடமேற்கு, கிழக்கு**



## துர்க்கா பூஜையாய் கொண்டாடப்படும்

# விஜய தசமி

ஒன்பது நாட்களாகக் கொண்டாடப்படும் நவராத்திரி விழாவுக்கு மறுநாள் அதாவது பத்தாவது நாள் கொண்டாடப்படும் திருநாள் விஜயதசமி ஆகும். மகிசாசுரன் என்னும் அரக்கனை அம்பாள் ஒன்பது நாட்கள் போரிட்டு வெற்றி வாகை சூடிய நாளே விஜயதசமியாகக் கொண்டாடப்படுகின்றது. விஜய் என்றால் வெற்றி எனவும் தசமி என்றால் "பத்து" எனவும் பொருள்படுகின்றன.

கொல்கத்தா உள்ளிட்ட இந்தியாவின் வட மாநிலங்களின் முக்கிய நகரங்களில் விஜயதசமி துர்க்கா பூஜையாகவே கொண்டாடப்படுகின்றது.

அம்பாளின் வெற்றியைக் கொண்டாடும் விதமாக பிரம்மாண்டமாக அலங்கரிக்கப்பட்ட அன்னையை ஊர்வலமாகக் கொண்டு செல்லும் வழக்கம் இன்றும் பழக்கத்தில் இருந்து வருகிறது.

விஜயதசமியன்று தொடங்கப்படும் எந்தக் காரியமும் வெற்றியைத் தரும் என்பது நம்பிக்கை.



# நவராத்திரியின் புனித நாளாய் போற்றப்படும் துர்க்காஷ்டமி!

***இந்துக்களால் பத்து நாட்களுக்கு தொடர்ந்து பக்தியுடன் கொண்டாடப்படுகின்ற துர்கை பூஜை விழாவில் துர்க்காஷ்டமி அல்லது மகாஅஷ்டமி என்பது மிக முக்கியமாக கொள்ளப்படுகின்றது. இந்த நாட்களில் இந்தியாவின் பல்வேறு மாகாணங்களில் துர்க்கா பூஜை விரதத்தை மக்கள் கடைப்பிடிக்கின்றார்கள். இந்த தினத்தில் துர்க்கைக்குரிய ஆயுதங்களை படையலிட்டு பக்தர்கள் வணங்குவார்கள். இந்த தினத்தை "வீர அஷ்டமி" தினம் என்றும் அழைக்கின்றார்கள்.***

நவராத்திரி கொண்டாட்டங்களில் எட்டாவது நாளில் வருவதே துர்க்கா பூஜை எனக்கொண்டாடப்படுகின்றது. இதைத் தான் துர்க்காஷ்டமி என்றும் சொல்லப்படுகின்றது. இந்து சாஸ்திரங்களின்படி துர்க்காஷ்டமி தினமானது மிக புனிதமானதாக கருதப் படுகின்றது. சித்திரை மாதத்தில் வருகின்ற அஷ்டமி திதியன்று துர்க்காஷ்டமி மிகச் சிறப்பாக எங்கெங்கும் கொண்டாடப்படுகின்றது. இந்த தினத்தில் காளி மாதா துர்கா மாதாவின் நெற்றியிலிருந்து வெளிப்பட்டதாகவும் மகீசாசுரனின் கூட்டாளிகளான சண்டா, முண்டா மற்றும் ரக்தா பிசா ஆகிய துர்சக்திகளை அழித்ததாகவும் இந்தியாவின் ஒரு சில பகுதிகளில் உள்ள இந்துக்கள் நம்புகின்றார்கள்.

மகாஷ்டமி தினத்தில் துர்க்கா பூஜை சடங்குகளின் போது 64 யோகினிகளும் அஷ்ட நாயகிகளும் வணங்கப்படுகின்றார்கள். இந்த அஷ்ட நாயகிகள் எட்டு சக்திகளாக உருவகிக்கப்படுகிறார்கள். இந்த சக்திகள் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகள் வெவ்வேறு விதமாக சொல்லப்படுகின்றது. இருந்தபோதிலும் இந்த எட்டு சக்திகளும் காளியின் அவதார சக்திகள் தான் என்பதை அனைத்து இந்துக்களும் ஒரு மனதாக ஏற்றுக்கொள்கின்றார்கள். அஷ்ட நாயகிகளால் துர்க்கா பூஜை காலத்தில் வணங்கப்படும் சக்திகளின் பெயர்கள் பிராமிணி, மகேஸ்வரி, காமேஸ்வரி, வைஷ்ணவி, வராகி, நரசிங்கி, இந்திராணி மற்றும் சாமுண்டி என்பனவாகும்.

■நவநீதம்

# இந்திரபதவியில் அமர்ந்த கீதகன் !

எ. சோதி

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் வேடன் ஒருவன் இருந்தான்.அவன் செய்யாத கொடிய செயல்களே இல்லை. மக்கள் எல்லோரும் அவனைக் கண்டு அஞ்சினார்கள்.

அவன் இயற்பெயர் மறைந்தது. எல்லோரும் அவனைக் கீதகன் (கொடியவன்) என்றே அழைக்கத் தொடங்கினார்கள்.

ஒரு நாள் அவன் விலை மகளிர்க்குத் தருவதற்காகப் பூக்களை எடுத்துச் சென்றான். அந்தப் பூக்களில் சில தவறிக் கீழே விழுந்தன. பூக்கள் விழுந்த இடத்தில் சிவலிங்கம் ஒன்று இருந்தது. இதனால் அவன் மலர்களால் சிவபெருமானை வழிபட்டவன் ஆனான்.

அவன் சாகும் நேரம் நெருங்கியது. அவன் உயிரை எடுத்துச் செல்ல எமன் அங்கு வந்தான்.

அப்பொழுது அங்கு வந்த சிவ கணங்கள் "இவன் சிவ பக்தன். சிவபெருமானை மலர்களால் வழிபட்டவன். இவன் உயிரை எம உலகத்திற்கு எடுத்துச் செல்லக் கூடாது. நீயே இவனை இந்திர பதவியில் அமர வைக்க வேண்டும்" என்றார்கள்.

அப்படியே செய்தான் எமன்.

இந்திர பதவியில் அமர்ந்தான் கீதகன். இயல்பாகவே அவனுக்கு வாரி வழங்கும் பண்பு இருந்தது.

இந்திரனுடைய யானை ஐராவதத்தை அகத்தியருக்குப் பரிசாக வழங்கினான். குதிரை உச்சிரவசுவை விசுவாமித்திரருக்கு வழங்கி னான். காமதேனுவை வசிஷ்டருக்கு வழங்கினான்.

இந்திர பதவியில் கீதகன் காலம் நிறைவு பெற்றது. மீண்டும் இந்திரனே அதில் அமர்ந்தான்.


பெருமைக்கு உரிய ஐராவதம், உச்சிரவசு, காமதேனு ஆகியவற்றைக் கீதகன் தானமாகத் தந்ததை அறிந்து கோபம் கொண்டான் அவன்.

எமனை அழைத்த அவன், "தகாத ஒருவனை நீ இந்திர பதவியில் அமர வைத்தாய். என் கருவூலம் அனைத்தையும் அழித்து விட்டாய். நான் இழந்த பொருள்களை நீதான் மீட்டுத் தர வேண்டும்" என்று கோபத்துடன் சொன்னான்.

கீதகனிடம் எமன், "கொடியவனே! இன்னொருவருடைய பொருளை எடுத்து நீ தானம் வழங்கக் கூடாது. நிலவுலகில் வேண்டுமானால் வாரி வழங்கும் தன்மை போற்றிப் புகழப்படலாம். சொர்க்கத்தில் யாரும் இன்னொருவருக்கு எந்தப் பொருளையும் தருதல் கூடாது" என்று கோபத்துடன் சொன்னான்.

சித்திரகுப்தனைப் பார்த்து, "இந்தக் கீதகனை நரகத்தில் தள்ளு. கொடிய துன்பங்களை அங்கே அனுபவிக்கட்டும்" என்றான்.

"அரசே! நம்மால் எப்படி கீதகனை நரகத்திற்கு அனுப்ப முடியும்? எல்லோரும் போற்றிப் புகழும் நல்ல செயல்களையே அவன் செய்துள்ளான்.



முனிவர்களுக்கு வாரி வழங்கியதன் மூலம் அவன் பாவங்கள் அனைத்தும் நீங்கி விட்டன. சிவபெருமானின் அருளும் அவனுக்கு உள்ளது" என்றான் சித்திரகுப்தன்.

இந்திரனைச் சந்தித்த எமன் "நீங்களே சென்று முனிவரிடம் வேண்டுங்கள். அவர்கள் பெற்ற பொருள்களை வாங்கி வாருங்கள்" என்றான்.

அதன்படியே அந்தப் பொருள்களை இந்திரன் பெற்றான்.

தான் செய்த நல்வினையின் பயனாகக் கீதகனே விலோசன மன்னனுக்கு மகனாகப் பிறந்தான். மாவலி சக்கரவர்த்தி என்று பேரும் புகழும் பெற்றான்.

திருமாலே வாமனனாக இவனிடம் வந்து மூன்றடி மண் யாசித்துப் பெற்றார். •



# மணியோசையும் முன்ஜென்ம நினைவுகளும்!

**சா**ண்டியாகோவை சேர்ந்த ஜேன் என்ற பெண்மணிக்கு அவரது முன்ஜென்ம நினைவுகள் எந்தவிதமான துணைக்காரணமும் இல்லாமலேயே ஏற்பட்டதை ஆராய்ச்சியின் போது டொக்டர் பிரடெரிக் கண்டறிந்தார்.

இது குறித்து அந்தப் பெண்ணே கூறுவதைப் படியுங்கள்.

எனது பதினேழாவது வயதில் முன்ஜென்மக் காட்சிகள் எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் திடீரென்று தோன்றின.

ஒருநாள் என்னுடைய தங்கையை மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். என் மனம் லேசாக இருந்தது. எந்தவிதமான எண்ணங்களும் தோன்றவில்லை. நான் சுற்றுப்புறத்தைக்கூட மறந் திருந்தேன். எதனால் என் மனம் அப்படி ஆயிற்று என்பது புரியவில்லை.

எனது பெற்றோர் வெளியே சென்று விட்டனர். சிறிது நேரத்தில் எங்கிருந்தோ மிக மெலிதான மணியோசை கேட்டது. அது வெளியே இருந்து வருவதாக முதலில் நான் நினைத்தேன். ஆனால் அது எனக்கு மிக அருகாமையில் கேட்டது. ஆகவே அதைக்கூர்ந்து கவனித்தேன். என்ன ஆச்சரியம் அந்த மணியோசை என் காதுக்குள் கேட்க ஆரம் பித்தது. அது என் தலையில் இருந்தே வருவதாக அறிந்தபோது ஆச்சரியம் அடைந்தேன்.

மணியோசையை நான் கவனித்துக் கொண்டே இருந்தபோது அந்த அறை என் கண்களில் இருந்து மறைய ஆரம்பித்தது. எனக்கு மிகவும் பயமாகி விட்டது. எனது கண்கள் பழுதடைந்து விட்டதா என்று குழம்பிப் போனேன். புகையைப் போல அந்த அறையின் சுவர்களும், சுவரில் இருந்த பொருட்களும் தெரிந்தன. பிறகு அவைகள் கொஞ்சம். கொஞ்சமாக என் பார்வையில் இருந்து மறைந்துவிட்டன.

அடுத்த நொடியில் நான் உயரமான செங்குத் தான பாறை மீது நிற்பதை உணர்ந்தேன். அங்கி



ருந்தபடி நான் எதிரே தெரியும் கடலையும், அதில் உயர எழும்பும் அலைகளையும் பார்க் கிறேன். உயரமான அலைகள் ஓடிவந்து கடற் கரையில் மோதிச் சிதறுகின்றன. அவ்போது என் மீது கடல் நீரும், கடல்நுரையும் தெறிக்கின்றன.

சிறிது நேரத்தில் நான் உப்புக்காற்றை சுவா சித்தபடியே கடற்கரை மணலில் நடக்கிறேன். என்றாவது ஒரு நாள் கிரேக்க நகரங்கள் எல்லா வற்றையும் சுற்றிப் பார்த்து விடவேண்டும் என்ற எண்ணம் என் மனத்தில் பலமாக ஏற்படு கிறது. இதற்குப் பிறகு திடீரென்று அந்தக் காட்சி மறைந்து விட்டது.

நான் இப்போது என்னுடைய வீட்டில் அறை யில் உட்கார்ந்திருக்கிறேன். என் மடியில் சிறிய தங்கை படுத்திருக்கிறாள். எனக்கு என்ன நடந் தது என்பதே புரியவில்லை. இது பகல் கனவாக இருக்கலாம் என்றே நினைத்தேன். ஆனால் அது பகல் கனவல்ல என்பதையும் அது எனது முற்பி றவியில் நடந்தது என்பதையும் ஒரு சில மாதங்க ளுக்குப் பிறகு அறிந்து கொண்டேன்.

எங்கள் கல்லூரியில் ஐரோப்பிய நாடுகள் சில வற்றுக்கு உல்லாசப் பயணம் அழைத்துச் சென் றார்கள். அதில் நானும் கலந்து கொண்டேன். அவற்றுள் ஒன்று கிரீஸ் நாடு.

அங்கே சென்றபோது எனக்குப் பரவசம் ஏற்பட்டது. சிறிய கடற்கரை நகரங்கள் அங்கு இருந்தன. அவைகளை ஆனந்தமாகச் சுற்றி வந்தேன். ஒரு நாள் என் தோழி களோடு கடற்கரை நகரத்தில் காரில் பயணம் செய்தேன்.

ஒரு இடத்தில் கடலை ஒட்டியிருந்த மலைப் பாதையில் கார் சென்றது. அப்போது விவரிக்க முடியாத எண்ணங்கள் என் மனத்தில் தோன்றின. நான் இங்கே வந்திருக்கிறேன் என்று என் தோழி களிடம் திருப்பித் திருப்பி சொன்னேன். அதை அவர்கள் யாருமே கவனிக்கவேயில்லை.

ஒரு இடத்தில் காரை நிறுத்துங்கள் என்று சத் தமிட்டேன். கார் நின்றதும் நான் கீழே இறங்கி நடந்தேன். சில ஆண்டுகளுக்கு முன்னால் எனது வீட்டில் சிறிய தங்கையை மடியில் வைத்திருந்த போது நான் பார்த்த இடத்தில் இப்போது நிற்பதை உணர்ந்தேன். அதே இடம், அதே சூழ்நிலை, இந்த இடம் எனக்கு மிகவும் பழக்கப்பட்ட இடம் என்று எனது உள்மனம் எனக்கு உணர்த்தியது.

அன்று பார்த்த அதே மலைச்சிகரம், அதே கடல், ஆரவாரமான அலைகள், மோதிச் சிதறும் கடல் நுரை எல்லாம் ஏற்கெனவே எனக்குப் பரிச்சயம் ஆனவை. இது எப்படி சாத்தியம்? முற்பிறவியில் நான் இங்கே வாழ்ந்திருக்கிறேன். அந்த நினைவுகள் தற்செயலாகத் தோன்றி இருக்கின்றன. அதை மறுபடியும் நான் இந்தப் பிறவியிலும் கண்டு ஆனந்தம் அடைகிறேன் என்றே நம்புகிறேன் என்று ஆராய்ச்சியில் தெரிவித்தார் ஜேன்.

« வேணு சீனிவாசன்

மீனாட்சி கோகுலவாசன்



சோழ நாட்டின் பழைய தலைநகரங்களுள் ஒன்று "காவிரிப்பூம்பட்டினம்". அது காவிரி கடலுடன் சேரும் இடத்தில் இருப்பது. "பட்டினப்பாலை" என்னும் சங்கநூல் அதன் பெருமைகளை உரைக்கும்.

அந்நகரில், "அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய, பட்டினத்து அடிகளும் வாழ்ந்து வந்துள்ளார்.

பூம்புகார் என்று அழைக்கப்பெறும் அப்பகுதியில், தன வணிகர் குலத்தில், புகழ்வாய்ந்த நற்குடியில் பிறந்த "இரத்தின குப்தன் என்பவன், தன் கற்புக்கரசியாம் மனைவியுடன் இல்லறம் நடத்தி வந்தான். அவர்களுக்கு நெடுங்காலமாக (மகப்பேறு) பிள்ளைச்செல்வம் இல்லாமல் இருந்தது. அவர்கள் இறைவனைத் தொழுது, பிள்ளைச் செல்வம் வேண்டி நின்றனர். இறைவன் திருவருளால், ஒரு பெண் குழந்தையைப் பெற்று அவளுக்கு "இரத்தினாவதி" என்னும் பெயரிட்டு சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தார்கள்.

இரத்தினாவதியும் செல்வச் செழிப்போடும், அன்புடைய பெற்றோரின் பாசத்தினால் அருமைப் பெருமையுடன் வளர்ந்து. அழகுடன் திருமண வயதை அடைந்தாள். அவளுடைய தந்தை "குப்தன்" என்னும் வணிகர் குல திலகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். தங்க சீர்வரிசைகளுடன் மாமியார் வீடான திருச்சிராப்பள்ளிக்கு, அனுப்பி வைத்தான் தன் மகளான இரத்தினாவதியை.

தன குப்தனுடன் திருச்சிராப்பள்ளி வந்த இரத்தினாவதியின் குடும்ப வாழ்க்கை சிறப்பாக நடந்து வந்தது? அவள் ஒவ்வொரு நாளும் திருச்சிரா மலையில் உறையும், செவ்வந்திநாதரை வழிபட்டு வந்தாள். அப்பெருமான் அருளால் இரத்தினாவதி தாய்மைப் பேற்றை அடைந்தாள். குழந்தைப் பிறக்கும் பேறு காலம் நெருங்கியதால், அச்செய்தியைக் காவிரிபூம்பட்டினத்தில் வாழும் தன் தாய்க்குத் தெரியப்படுத்தினாள்.

தாய் மகளுக்குத் தேவையான மருந்துகள், எண்ணெய், பலகாரங்கள், இனிப்பு வகைகள், துணிகள் என்று கூடையில் பொருள்களுடன் புகாரிலிருந்தும் புறப்பட்டு திருச்சிரபுரம் அருகில் வந்தடைந்தாள். காவிரியில் நீர்ப்பெருக்குக் காரணமாக அவள் வரவு தடைப்பட்டது. மகளோ தாய் இன்று வருவாள். நாளை வருவாள், தனக்கு வேண்டிய பொருள்களுடன் வருவாள் என்று எண்ணிய வண்ணம் இருந்து வந்தாள்.

பிரசவ வலி ஆரம்பித்தும் தாய் வரவில்லை?! அத்தருணத்தில் இரத்தினாவதி, தான் வழிபட்டு வந்த, செவ்வந்திநாதரிடம், தன் கவலையைப் பணிவுடன் தெரிவித்தாள். அவள் இறைவனின் திருநாமங்களை, வலியுடனே, "சங்கரன், சிவன், சதாசிவன், ஈசன், ஈசானான், புங்கவன், திரிபுரா்ந்தகன், புராதனன், புராணன், கங்கை நாயகன், கறைமிடத்து இறை நுதற் கண்ணான், எங்கள் நாயகன், இராமன் சிராமலை இறைவன், பூரணன், பரன், பராபரன், வெள்ளியம் பொருப்பன் காரணன், மதனாந்தகன், காலனைக் கடிந்தோன், வாரணம் தனை உரித்தவன், மறை பொருள் வகுத்தோன், நாரணன், தனக்கு அரிபவன், சிராமலை நாதன் என்று அழைத்துக் கொண்டே வேண்டினான் செவ்வந்திநாதன். இரத்தினாவதியின் தாய்



# தாயும் ஆனார் கருணாசாகரன்

வேடம் தரித்து, நிறைமாத கர்ப்பிணியாகத் தவித்துக் கொண்டிருந்த, இரத்தினாவதியின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். இரத்தினாவதி வந்தவரைத் தாய் என்றே எண்ணி மகிழ்ந் தாள்.

தாயும் ஆனவரும் தக்கவாறு அவளுக்கு மருத்துவம் பார்த்தார். இரத்தினாவதி மகப்பேற்றை அடைந்து அழகிய ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். செவ்வந்திநாதரும், அவள் தாயின் வேடத்தில் அவளுக்கும் குழந்தைக்கும் தேவையானவைகளைச் செய்து வந்தார். குழந்தையைக் குளிப்பாட்டி மருத்துவ வகைகளை ஊட்டி தாலாட்டி பால் உண்ணச் செய்தும், இரத்தினாவதிக்கும் நீராட்டி லேகியம் பத்தியம் என்று சில நாட்கள் பேணிப் பாதுகாத்தும் வந்தார். இது இவ்வாறு நடந்துவரும் நாட் களில்... காவிரி வெள்ளம் வடிந்து, உண்மையான தாய் ஆற்றைக் கடந்து இரத்தினா வதியைக் காண அவள் வீட்டிற்கு வந்தாள். இரத்தினா வதியும் கண்டாள். திகைத்தாள்! இரு தாயாருள் எவர் உண்மைத் தாய் என்று கவனித்தாள்?! தாயாக வந்த செவ்வந்திநாதர் மறைந்தார். வானில் மட்டுவார் குழலம்மையுடன் இடபவாகனராகத் தோன்றினார்! யாவரும் தரிசித்து மகிழ்ந்தார்கள். அன்று முதல் திரிசிர மலைச் செவ்வந்திநாதருக்குத் "தாயுமானவர்" என்னும் திருப்பெயர் வழங்கலாயிற்று!

இரத்தினாவதியும் இறைவனை வழிபட்டதால், சிவ அடியார்களுள் ஒருவராக விளங்குகிறாள். இந்த வரலாறு, திருக்கோயில் பெருவிழாவில் ஐந்தாம் நாள் திருவிழாவாக செட்டிப்பெண் மருத்துவம் என்று நிகழ்ந்து வருகிறது! அவள் பரம்பரையினர் சிறப்பாக முன்னின்று நடத்தி வருகிறார்கள். இந்த அரிய வரலாற்றைத் திருக்கோயில் சித்திர மண்டபத்தின் திருச்சுற்றிலும் மேல் விதானத்திலும் சித்திரமாகக் கண்டு மகிழலாம்! கருவுற்றிருக்கும் பெண்களுக் கும் தாயில்லாதவர்களுக்கும் இந்தத் தாயுமானவர் அருள்கிடைக்கப் பிராத்திப்போமாக...! ●

## குருவருள்கிட்டிட...

புவனகிரி, ஆலங்குடி, பட்டமங்கலம், திருப்பத்தூர், தக்கோலம், அரக்கோணம் ஆகிய இடங்களில் இருக்கும் தெட்சிணாமூர்த்தியை பக்தி சிரத்தையுடன் வழிபட குரு அருள் கிடைக்கும். ஒருவன் தன்னுடைய ஆச்சாரியார் வழி நடந் தாலும், குரு சொல்படி கேட்டாலும் உயர்வு நிச்சயம் உண்டாகும். ஹோமங்களினாலும் குருவுக்கு சிறந்த பரிகாரங்களைச் செய்யலாம். குழந்தை பாக்கியத்துக்கு குரு மிகவும் நல்ல நிலையில் அமைந்திருக்க வேண்டும். குரு உச்ச மாகவோ, ஆட்சியோ பெற்றிருந்தால் நிச்சயம் ஆண் குழந்தை உண்டு.



வேணுசீனிவாசன்

# தாய்தெய்வ வழிபாடு!





எகிப்தின் இசிஸ்



தாய் தெய்வ வழிபாடு என்பது மிகவும் தொன்மையானது. உலகின் பல பகுதிகளிலும் அது இருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. தாய் தெய்வ வழிபாட்டின் ஆரம்பம் இந்தியாவில் குறிப்பாக தமிழ் மரபில் இருந்ததற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

உலகத்தை இயக்கிக் கொண்டிருக்கும் ஒரு ஒப்பற்ற சக்தியை நமது ஊனக் கண்களினால் பார்க்க முடிவதில்லை. நம் கண்களுக்குத் தெரியாமல் மறைந்து இயங்கும் அந்த ஆற்றலை நாம் மகாசக்தி என்று போற்றி வழிபாடுகள் செய்கிறோம்.


இந்த தாய் தெய்வ வழிபாடு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகின் பல பாகங் களிலும் பரவி இருக்கிறது. அகழ்வாராய்ச்சிகள் மூலமாகத் தெரிய வந்த சிந்துவெளி நாகரிகத்திலும் சக்தி வழிபாடே முக்கியத்துவம் பெற்றிருந்தது. இதற்கு மொகஞ்சதாரோ, ஹாரப்பா ஆகிய இடங்களில் கிடைத்துள்ள முத்திரைகள், சிலைகள் ஆகியவை சிறந்த சான்றுகள். அங்கே கிடைத்த பெண் உருவங்கள் சிறிய இடையும், பரந்த அடிப் பகுதியும் கொண்டவையாக உள்ளன. மேலும் அந்தப் பெண் உருவங்கள் தங்கள் முடியில் அலங்காரமான நகைகளை அணிந்திருப்பதை அறிய முடிகிறது. சில உருவங்கள் ஆடைகள் இல்லாமல் நிர்வாணமாகவும் காணப்படுகின்றன. இதுபோன்ற உருவங்களை பண்டைய நாகரி கம் நிலவிய எகிப்து, சுமேரியா முதலிய இடங் களிலும் கண்டெடுத்துள்ளனர்.



சிந்துவெளி முத்திரை

ஹாரப்பாவில் காணப்பட்ட ஒரு முத்திரையில் இரு கிளைகளுடன் கூடிய அரசமரத்தின் கிளை களின் நடுவே விரிந்த கூந்தலுடனும் தலையில் இரு கொம்புகளுடனும் ஒரு பெண் நிர்வாண நிலையில் நிற்கிறாள். மற்றொரு முத்திரையில் ஒரு பெண் தலைகீழாக கால்களை அகல விரித்த நிலையில் காணப்படுகிறாள். அவளது கருவில் இருந்து ஒரு செடி முளைத்து வருகிறது. பிர பஞ்சம் அனைத்தும் ஒரு சக்தியிடம் இருந்தே வெளிப்பட்டது என்பதை விளக்குவதாக இந்த முத்திரை அமைந்திருக்கிறது.

எகிப்தில் இசிஸ் என்ற பெண் தெய்வம் வழிபாடு செய்யப்பட்டது. சின்னாசியாவில் சிபிஸ் என்ற பெயரில் பெண் தெய்வ வழிபாடு நடந்தது.



மொகஞ்சதாரோ





சிந்துவெளி



சிரியாவில் அஸ்தாத் என்ற பெண் தெய்வம் போற்றி வழிபடப் பட்டது. பழம்பெருமை வாய்ந்த நதிக்கரை நாகரிகங்களில் பெண் கள் போற்றப்பட்டனர்.

குடும்பத்தில் பெண்ணே தலைமை வகித்தாள். தாய்வழிச் சமூக அமைப்பே நிலவி வந்தது என்பதையே இந்தத் தாய் தெய்வ வழிபாடுகள் காட்டுகின்றன. இதற்கு அடுத்தபடியாக வேதகாலத்தை எடுத்துக் கொண்டால் அங்கு இந்திரன், வருணன், யமன் போன்ற ஆண் தெய்வங்களே போற்றப்பட்டன. இருந்தபோதிலும் வாக்கு, உஷை, ராத்திரி, சந்தியா, சரஸ்வதி போன்ற பெண் தெய்வங்களும் போற்றித் துதிக்கப்பட்டன. வேதகாலத்தை அடுத்து வந்த உபநிடத காலத்தில் பெண்களின் பெருமை உச்சத்தை அடைந்தது. தாய் தெய்வ வழிபாடு சிறப்பாக நடைபெற்றதை உபநிடதங்கள் தெரிவிக்கின்றன. கேனோபநிடதமே சக்தியைப் பரம்பொருளாக நமக்கு முதன் முதலாக எடுத்துரைக்கிறது. துர்க்கை, கார்த்தியாயினி, கன்யாகுமரி என்ற மூன்று பெயர்களினால் சக்தியை தைத்ரீய உபநிடதம் குறிப்பிடுகிறது. முண்ட கோபநிடதத்திலும் காளி, கராளி ஆகிய பெண் தெய்வப் பெயர்களைப் பார்க்க முடிகிறது. ●

உதயதீபன்



# சப்த பிரம்ம, தியானம்!

சப்தப்பிரம்மம் என்பது, ஒலியைக் குறிக்கும். நமக்குள்ளே சப்தப் பிரம்ம ஒலி இருக்கிறது. நமது மணிப்பூரகத்தில், நம் உடலுக்கும் உயிருக்கும், ஒரு இணைப்பு உள்ளது. இந்த இடத்தில் "ஓம்" என்ற அதிர்வுகள் உண்டு. இதுவே பிரணவம்.

இந்த ஓம் என்பது, அ, உ, ம் என்ற மூன்று எழுத்துக்களின் கூட்டு மற்றும் நமது சிரசில், இரண்டு காதுகளை ஒற்றை விரலால், அடைத்துக் கொண்டு அதன் உள்ளே கேட்டால், ஓங்கார நாதமோ, இல்லை கடலோசையோ, அல்லது இடி ஓசையோ கேட்கும்.

எனவே, முதலில் நீங்கள் உங்கள் உள்ளத்தில் உணர வேண்டியது, மனித உடலுக்குள் மகா மகா ரகசியங்கள், ஆயிரம் ஆயிரம் இருக்கின்றன. இவற்றை சரியாக உணர்ந்து கொண்டு, அதை சரியாக பயன்படுத்தினால், "அமுத தாரையை" நம் சிரசில் சுரக்கச் செய்தால்...அதன் மூலம் யோக சித்திகள் 64 கோடியையும், ஞான சித்திகள் 688 கோடியையும் அடையலாம் என்பதுதான். இத்துணை சக்திகளை, தங்களுக்குள் அடக்கிக் கொண்டு, வலது பக்க பெருமூளை, இடது பக்க பெரு மூளை, நம் உடம்போடு ஒட்டாமல், நம் இயக்கங்களில் பங்கெடுக்காமல், அதில் உள்ள கோடான கோடி செல்கள், ஒடுக்க நிலையில், செயல் இன்றி இருக்கின்றன.

சப்த பிரம்ம, தியானம் என்பது, இதயத்தில் சிரசில் ஓடும் சப்த அலைகளில் தியானித்து, அதைக் கொண்டு, இதயத்தின் சிதாகாசத்தையும், மூளையில் உள்ள வெட்ட வெளியையும், நாத வெள்ளத்தில் மூழ் கடிக்கையில், அதில் அபூர்வ சக்திகள், ஒடுக்க நிலையில் உள்ள மனித பெருமூளையில் தோன்றி, மனிதனை இயக்கத் தொடங்கும்.

மனிதன் பிறந்தது தொட்டு, அவன் இறக்கும் வரைக்கும், சிறு மூளையின் உதவியால்தான், அவன் தனது வாழ்க்கையின், எல்லா காரியங்களையும் கவனிக்கின்றான். சப்தப் பிரம்ம தியானத்தின் மூலம், பிரம்ம நாத அலைகளை, எழுப்பி விட்டு விட்டால், அதில் நம்முள் விழிக்காமல், தூங்கும் தெய்வீக சக்திகள். அதாவது வலது, இடது பெருமூளைகள், அதில் சக்திகள் விழித்துக் கொள்ளும் போது, மனிதன் தூரக் கேட்டல், தூரப்பார்த்தல் போன்ற அதீத சக்திகளை அடைகின்றான்.

சப்த பிரம்ம, தியானத்தை இரண்டு கைகளிலுள்ள, மோதிர விரலால், இருபக்க காதுகளை அடைத்துக் கொண்டு, உள்ளே உற்றுக் கேட்க வேண்டும். அதாவது இடது காதின் வழியே, வலது காதின், சப்த பிரம்ம

சப்தத்தை, அறிய வேண்டும்.

இப்படி, தியானத்தை செய்கையில் நமக்குப் பிடி படாத மனம், ஒருநிலையில் அடங்கி, தன் சலனமற்று நிற்கும். காது வழியில் கேட்கும் ஓசையில் மட்டும், மனம் ஒடுங்கும் விதத்தை, சீக்கியர்களும், சத்சங்கத் தினரும் செய்கின்றனர்.

இப்படி, காதில் சப்தப் பிரம்மம் தியானத்தை காதில் கேட்கும் ஓசையில் லயித்தபடி சுகாசனத்தில் அமர்ந்து 2 நாழிகை நேரம், தியானிக்க வேண்டும். இதன், கூடுதல் காலம் 48 நிமிடங்கள்.

இந்த ஓசையானது, இரைந்து கேட்டு அதில் லயிக்கும் தியானத்தில் ஜீரணக் கோளாறுகள் நீங்கும். வயிற்றில் உள்ள உணவு, நன்கு ஜீரணிக்கப்படும்.

இதைத் தொடர்ந்து, செய்து வந்தால் பசி, தாகம் நீங்கப் பெறுவார்கள், அத்துடன் சப்தப் பிரம்ம தியானத்தைச் செய்து வருகிறவர்கள், விரும்புவது நடக்கும். இதுவே மோட்சம் அடைய உள்ள ரகசிய வழி.

இப்படி சப்த பிரம்ம தியானத்தில் அனாகதச் சக்க ரத்தில், உண்டாகும் பத்து ஒலிகளையும் கேட்கலாம்.

இதில், ஓங்கார சப்தத்தை, கேட்பவனை பாவ புண்ணியங்கள் அணுகாது. ஆறு மாத காலம், இந்த ஓங்கார சப்த நாதத்தை கேட்டு வருபவன், மகா யோகி யாகி, சர்வ லோகங்களிலும், சஞ்சரிக்கும் பேற்றை, அடைவான்.

"காம்ஸ்யம்" என்கிற சப்தத்தை அப்பியாசிப் பவன் பேய் பூதங்களை அடக்கும் வல்லமை அடைவான். எல்லா வித ஜீவராசிகளையும் இவன் அடக்கிவிட முடியும்.

மணியின் சப்தத்தை, அப்பியாசிப்பவன் சகல தேவர்களையும் தன்னிடம் வரவழைக்கும் ஆற்றலை யும், சகலரையும் வசீகரிக்கும், திறமையையும் அடைவான்!

"கோஷம்" என்னும் சப்தத்தை, அப்பியாசிப்பவன் சர்வ ரோகங்களிலிருந்தும், விடுவிக்கப்படுவான்.

சிருங்காரம், என்னும் கொப்பு நாதத்தை அப்யா சிப்பவன், சத்ருக்களை அழிக்கவும், விருப்பப்படி, நடக்கவும் செய்வான்.

வீணை நாதத்தை, அப்பியாசிப்பவன் தூர திருஷ்டி யால், சகலத்தையும், அறிந்து கொள்ளும் சக்தியைப் பெறுவான்.


இடியோசையை, அப்பியாசிப்பவன் சகல சக்தி களையும், ஆகாச சஞ்சாரமும், செய்யக் கூடியவனாக இருப்பான்.

தந்துபி ஓசையை, அப்பியாசிப்பவன், ஜனன மர ணத்திலிருந்து விடுபடுவான்.

புல்லாங்குழல் ஓசையை, அப்பியாசித்தவன் சர்க்ஞனாகிறான்.

மேற்கண்ட ரகசியங்களை, பார்வதிக்கு, பரமேசு வரன் சொன்னது.

இத்தனை சக்திகளை தரவல்ல இந்த சப்த பிரம்ம தியானத்தைத் தினமும் கையாண்டு, ஆறுமாத



காலத்தில், மகா சக்திகளை அடைய, மனிதன் முயற் சிப்பதே, அவன் மிகவும் சக்திமான்,ஆக உள்ள, ஒரே எளிய வழியாகும்.

உலகம் என்பது, ஒலியாலும், ஒளியாலும் நிர்வ கிக்கப்படுகின்றது. உலகப் பிரளயத்திற்கு முன்னதாக, சப்தப்பிரம்மம் என்பது, ஒளியுடன் சென்று சேர்ந்து கொள்ளும் அப்போது இந்த உலகம் இருண்டு, அப்போது முதல், உலகப்பிரளயமும், ஆரம்பித்து விடும். உலகம் தோற்றங்களில் முதலில், தோன்றியது சப்த பிரம்மம், அதில் மனம் வைத்து தியானித்து, மகா சக்திகளை அடைவோம். ●



## திருப்பாற்கடல்!

திருப்பாற்கடல் இந்தப் பூவுலகில் இல்லை. அது யோகிகள் தவத்தினால் காணும் விஷ்ணுவின் இருப்பிடமான வைகுண்டத்தில் உள்ளது. அதை ஊனக்கண்ணால் காண இயலாது. ஞானக்கண்ணால் காண முடியும். சாதகர்கள் ஒருவாறு மானசீகமாகத் திருப்பாற் கடலைக் கற்பனை செய்து பார்க்க வேண்டும்.



# அம்மாவின் அற்புதங்கள்!

## நிறுத்தப்பட்ட இடமாற்றம்

அம்மாவை நம்பி வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்களில் எங்கள் குடும்பமும் ஒன்று. நான் கோவை மாவட்டத்தில் உள்ள N.G.O. காலனி. அசோகபுரம், அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்க்கிறேன். ஆசிரியைகள் இட மாற்றம் செய்வதாக கல்வித் துறை அறிவித்தது. எங்கள் பள்ளியில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் மிகவும் வருத்தத்துடன் இருந்தோம்.

நான் மற்றும் இதர இரண்டு ஆசிரியைகளும் எங்கள் பள்ளியிலேயே இருக்க வேண்டும் என்றும், இடமாற்றம் வரக்கூடாது என்றும், சக்தி ஒளிக்கு எழுதுவதாகவும் வேண்டிக் கொண்டேன். என்ன ஆச்சரியம்! எங்கள் பள்ளிக்கு மாணவிகள் எண்ணிக்கைக் கூடியது. எனவே, இரண்டு ஆசிரியைகளையும், இடமாற்றம் செய்யவில்லை. மருவத்தூர் அம்மாவிற்கு கோடானு கோடி நன்றிகள் உரித்தாகுக. மருவத்தூர் அம்மாவின் புகழ் உலகமெங்கும் பரவட்டும்.

*சக்தி.கீதா ரவிசங்கர்*



## சரவணபவன்!

கங்கைக் கரையில் சரவணப் பொய்கையில் தோன்றியவன் முருகன். "சரம்" என்றால் நாணல், "வனம்" என்றால் காடு. "ர"வுக்குப் பின் "ன" வரும் போது அது "ண" என்று மாறுவதால், சரவனம் என்பது சரவணம் என்று ஆயிற்று. அதில் தோன்றிய முருகன் "சரவணபவன்".

## குழந்தையின் அழுகையை நிறுத்திய அம்மா

அன்பும் கருணையும், தாய்மை உள்ளமும் கொண்ட அம்மாவிற்கு உங்கள் கோடானு கோடி பக்தர் குடும்பங்களில் நாங்களும் ஒரு குடும்பம். எங்கள் வீட்டுக் குழந்தை எப்பொழுதும் அழுது கொண்டே பள்ளியில் இருந்து வருவாள். எங்களுக்கு அவள் பள்ளியில் இருந்து வரும் நேரம் ஆனதும் மிகவும் பயமாக இருக்கும். இன்றைக்கு அவள் எப்படி வருகிறாளோ என்று அந்த சமயத்தில் எனது அத்தை "அம்மா! எங்கள் குழந்தை அழுகையை நிறுத்தி அவளை சந்தோஷமாக பள்ளியில் இருந்து அனுப்புங்க அம்மா!" என்று மனதார வேண்டினார். சக்தி ஒளிக்கு எழுதுவதாகவும் வேண்டினார். வேண்டியபடியே எங்கள் குழந்தை அடுத்த நாளில் இருந்தே மிகவும் சந்தோஷமாக சிரித்துக் கொண்டே வருகிறாள். வேண்டியபடி நாங்களும் சக்தி ஒளிக்கு எழுதி விட்டோம். அம்மாவை மனதார வேண்டினால், அம்மா நமது வேண்டுதலை வேண்டியபடி நிறைவேற்றுவாள். அம்மாவுக்கு கோடானு கோடி நன்றி!

*— சக்தி லட்சுமி*

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் ராகு காலத்தில் அம்மன் வழிபாடும், சுப்ரமணியர் வழிபாடும் செய்து வர கிடைக்க வேண்டிய பலா பலன்கள் தடையின்றி விரைவில் கிடைக்கும்.



**இம்மாதம் அதிர்ஷ்ட கிழமைகள் : திங்கள், செவ்வாய், வியாழன்**



# விருச்சிகம்

### துர்முகி ஆண்டு புரட்டாதி மாதம்
### 17.09.2016 முதல் 16.10.2016

தனக்கென்று ஒரு வழியை தெரிவு செய்து அதன்படி செயல்படும் விருச்சிக ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு நல்ல வளர்ச்சியையும், திருமண வாய்ப்பையும், சொந்த வீடு, வேலை வாய்ப்புகளையும் பெற்று தருவார். ராசிநாதன் உங்களுக்கு மனவலிமையும், செயல் திறமையும் தருவார். பொருளாதாரம் சிறப்பாக அமையும்.

#### பணியாளர்களுக்கு

பணியாளர்கள் விரும்பும் பணியை பெற்று சிறந்து விளங்குவீர்கள். ஒரு சிலருக்கு திடீர் பதவி உயர்வும், பண பலன்களும் கிடைக்கும். தொழிற் சங்க பொறுப்புகளையும் அதன் மூலம் ஆதாயமும் பெறுவீர்கள். மனவலிமையும் உடல் பலமும் பெற்று சிறந்து விளங்குவீர்கள்.

#### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது நலனிலும், பொது விடயங்களிலும் உங்களின் பங்கு அனைவரின் வரவேற்பை பெறும். அரசியல் தலைமை உங்களுக்கு நல்ல பதவியையும், பதவி மூலம் வளர்ச்சியையும் பெறும் வாய்ப்பும் அமையும். பொது நலன் சிறப்பாக செயல்பட்டு அனைத்து உதவிகளையும் பெறுவீர்கள்.

#### வியாபாரிகளுக்கு

செய்யும் தொழிலை மதித்து செயல்படுவீர்கள். கடல் கடந்த வியாபார வாய்ப்புகள் அமையும். நட்புகளால் முன்னேற்றமான வாழ்க்கை சூழ்நிலை உருவாகும். உங்களின் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிட்டும். நவரத்தின வியாபாரம் நன்மையை தரும். பொருளாதார வளர்ச்சி சிறப்பாக அமையும்.

#### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் முன்பைவிட சிறப்பாக செயல்படுவீர்கள். தொழில்நுட்ப கலைஞர்களும், வாகன ஓட்டிகளும் சிறப்பாக முன்னேற்றம் பெறுவீர்கள். அனிமேசன் துறையில் சிறந்த புரோக்கிராம் செய்து அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பொருளாதாரத்திலும் மேன்மை பெறுவீர்கள்.

#### பெண்களுக்கு

பெண்களின் வளர்ச்சி நன்றாக இருக்கும். சிலருக்கு திருமண வாய்ப்பும், குழந்தை பாக்கியமும் கிட்டும். கொடுக்கல் வாங்கலில் வாரா கடன் வசூலாகும். தொழிலில் மாற்றம் செய்து வளர்ச்சியை பெறுவீர்கள். உறவுகள் பலபடும் நினைத்ததை முடிப்பீர்கள்.

#### மாணவர்களுக்கு

கல்வியில் முன்னேற்றம் காண்பதுடன் சிலருக்கு வேலை வாய்ப்புடன் கல்வி பயிலும் வாய்ப்பும் அமையும் வெளிநாட்டு கல்வி முயற்சி நல்ல பலனை தரும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

23.09.2016 வெள்ளி காலை 09.30 முதல்
25.09.2016 ஞாயிறு பகல் 01.18 மணிவரை

### நட்சத்திர பலன்கள்

#### விசாகம் 4ஆம் பாதம்

கொடுக்கல் வாங்கலில் இருந்து வந்த பிரச்சினைகள் விரைவில் தீரும். தொழிலில் இருந்து வந்த சிரமங்கள் நீங்கி நன்மை பெறுவீர்கள். பொருளாதார நிலை முன்னேற்றம் தரும்.

#### அனுசம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

தொடர் முயற்சிகளால் வெற்றியை நிலைநாட்டிக் கொள்வீர்கள். பதவியை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் சிரமப் பட வேண்டிய அவசியமில்லாமல் போகும். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

#### கேட்டை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

முகமலர்ச்சியோடு செயல்படுவீர்கள். திரும்ப எதையும் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. மலைமேல் இருக்கும் தெய்வ வழிபாடு உங்களின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஒரஞ்சு, மஞ்சள், வெண்மை
**அதிர்ஷ்ட திசைகள் :** வடக்கு, வடமேற்கு, கிழக்கு

K. துரைராஜ்



பள்ளிக்கொண்ட பெருமாள்

# திருமணத்தடை நீக்கும் திருவிடந்தைத் தலம்!

நூற்றியெட்டு திவ்ய தேசங்களில் ஒன்று திரு விடந்தை நித்திய கல்யாணப் பெருமாள் ஆலய மாகும். "திரு" என்று அழைக்கப்படும் லட்சுமியைத் தன் இடப்பாகத்தில் கொண்டுள்ளதால், "திரு இடந்தை" என்று பெயர் ஏற்பட்டு பின்னர் அப்பெயர் "திருவிடந்தை" என்று அழைக்கப்பட்டது.

முன்பு ஒரு காலத்தில் "குனி" என்ற முனிவரும் அவருடைய மகளும் சொர்க்கம் செல்ல வேண்டித் தவமிருக்க "குனி" மட்டுமே சொர்க்கம் செல்ல முடிந்தது. நீ திருமணம் ஆகாதவள், அதனால் சொர்க்கம் செல்ல முடியாது என்று அங்கு வந்த நாரதர் கூறி, அருகிலிருந்த மற்ற முனிவர்களிடம் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டினார். காலவ ரிஷி என்ற முனிவர் அப்பெண்ணை மணம் புரிந்து, 360 பெண் குழந்தை களைப் பெற்றார். பெண்களுக்கு உரிய வயது வந்ததும், தன் பெண்களை மணம் புரிந்து ஏற்றுக் கொள்ளுமாறு பெருமாளிடம் வேண்டி கடும் தவம் மேற்கொண்டார். ஒருநாள் பெருமாள் தெய்வீகத் தன்மையுடன் பிரம்மச்சாரியாக வந்து காலவ ரிஷியின் வேண்டுதலை ஏற்று தினமும் ஒரு பெண்ணாக 360 நாட்களில் அனைவரையும் மணம் புரிந்துகொண்டு, கடைசி நாளன்று அனைவரையும் ஒருவராக்கி தனது இடப்பாகத்தில் வைத்துக் கொண்டு காட்சி தந்தார். அதனால்,இப்பெருமாள் நித்ய கல்யாணப் பெருமாள் என்று அழைக்கப்படுகிறார் என்று கூறுகிறது கோவில் ஸ்தல புராணம்.



தா


இவ்வாலய மூலவராக ஆதி வராகப் பெரமாளும் அவருக்குரிய தாயாராக அகில வல்லி நாச்சியாரும், உற்சவராக நித்திய கல்யாணப் பெருமாளும் காட்சியளிக்கின்றனர். ஸ்தல விருட்சம் புன்னை மரம், மூலவர் ஆதி வராகப் பெருமாள் தம்பதி சமேதராக ஆறரை அடி உயரத்தில் காட்சி தருகிறார்.

**வழிபடும் முறை:** திருமணத்தடை உள்ள ஆண்கள், பெண்கள் இவ்வாலயம் வந்து, ஒரு பூ மாலை வாங்கி, சுவாமிக்கு அர்ச்சனை செய்ய கொடுக்க வேண்டும். சுவாமி அர்ச்சனை செய்து முடித்ததும் அந்த மாலையைக் கொடுப்பார்கள். அதைக் கழுத்தில் போட்டுக் கொண்டு ஆலயத்தை 9 முறை வலம் வந்து, ஆலய கொடிக் கம்பம் முன்பு சாஷ்டங்கமாக விழுந்து வழிபட வேண்டும். பின்பு, அம்மாலையுடன் நேராக வீட்டிற்கு வந்து, பூஜை அறையில் அம்மாலையை வைத்து விட வேண்டும். திருமணம் முடிந்ததும் தம்பதியராக வந்து அந்த மாலையை ஆலயத்தில் இதற்கென்று ஆலய பின்புறம் உள்ள மரத்தில் சேர்த்து விட வேண்டும். இராகு, கேது தோச நிவர்த்தி ஸ்தல மாகவும் இத்தலம் விளங்குகிறது.

இங்கு பெருமாள் தனது ஒரு திருவடியைப் பூமியிலும், மற்றொன்றை ஆதிசேசன் மற்றும் அவனது மனைவியின் தலை மீதும் வைத்துக் கொண்டு அகிலவல்லித் தாயாரை தன் இடது தொடையில் தாங்கிக் கொண்டு வராக மூர்த்தியாக அருள் புரிகிறார். தம்பதி சமேதராய் ஆதிசேஷன் பெருமாள் திருவடியைத் தாங்கி சேவை புரிவதால், இவ்வாலயப் பெருமாளை சேவிப்பவர்களுக்கு இராகு கேது தோசங்களும் நிவர்த்தியாகின்றன.

**சிறப்பு அம்சங்கள்:** உற்சவர் நித்திய கல்யாணப் பெருமாள் மற்றும் கோமளவல்லித் தாயார் ஆகிய இருவரின் தாடையிலும் இயற்கையிலேயே திருஷ்டி பொட்டு அமைந்துள்ளதால், இவ்வாலயம் வந்து வழிபடுபவர்களின் திருஷ்டிகள் நீங்கும். ஆதி வராகப் பெருமாள், பலி என்ற அசுர மன்னனுக்கு வழங்கிய அருள் வாக்கின்படி இங்குள்ள வராக தீர்த்தத்தில் மாசி மாதம் நீராடி, பெருமாளை சேவித்தால் மோட்சமாக கிடைக்கும்.


**வழித்தடம்:** சென்னையிலிருந்து மாமல்லபுரம் மற்றும் புதுச்சேரி செல்லும் சாலையில் 42 கி.மீ. தொலைவில் கோவளம் அருகில் அமைந்துள்ளது இவ்வாலயம்.



கோயில் கொடிமரம்

## குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவ...!

தினமும் காலையில் நீராடியபின்பு 108 தடவை ஸ்ரீ நரசிம்ம ப்ரபத்தி ஸ்லோகத்தைப் பாராயணம் செய்து வாருங்கள். இது அளவற்ற சக்தியுள்ள பரிபாரம். வீட்டுப் பூஜையறையில் நெய் விளக்கேற்றி சுந்தர சஷ்டிக் கவசம் படித்து வரவும். சனிக்கிழமைகளில் ஸ்ரீ ராமபக்த அனுமனுக்குச் சிறிது வெல்லப் பானகம் நைவேத்தியம் செய்து அதைப் பிரசாதமாகத் தாங்கள் அருந்தி வாருங்கள். வெகு விரைவில் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.






### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

சனிக்கிழமை ராகு காலத்தில் நவக்கிரங்களை ஒன்பது முறை வலம் வந்து மேற்கில் சனி பகவானுக்கு அகல் விளக்கு நல்லெண்ணெயில் இட்டு வழிபாடு செய்து வர துன்பங்கள் பொடிப் பொடியாக மறையும்.

**இம்மாதம் அதிர்ஷ்ட கிழமைகள் : புதன், வியாழன், வெள்ளி**



# தனுசு

### துர்முகி ஆண்டு புரட்டாதி மாதம் 17.09.2016 முதல் 16.10.2016

எடுக்கும் முயற்சிகளுக்கு முடிவு தெரியும் வரை விடாமல் செயல்படும் தனுசு ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு கிரக அமைப்புகள் சரியாக இல்லாவிட்டாலும் உங்களின் சொந்த முயற்சிகளாலும் தெய்வ வழிபாடுகளாலும் முன்னேற்றம் காண்பீர்கள். உங்களின் தொழிலுக்கு நண்பர்கள் முயற்சி நல்ல வளர்ச்சியை தந்து உதவியாக அமையும். பொருளாதாரம் சீராக இருக்கும்.

**பணியாளர்களுக்கு**

பணியில் இருப்பவர்களுக்கு இருக்கும் தொழிலை விட்டு வேறு தொழில் அமையும். வாய்ப்பு அமையும். ஒரு காரியத்தை பல முறை செய்ய வேண்டி வரும். சொந்த விருப்பு வெறுப்புகளால் சிலர் சிரமங்களை அடைய வேண்டி வரும். எதிலும் கவனமுடன் செயல்பட்டால் நன்மை பெறலாம். வரவு செலவும் கலந்தே வரும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொதுவாழ்வில் கூடுதல் ஆர்வம் உண்டாகும். பிறரின் நலனுக்கு உதவிகளை செய்வீர்கள். ஒரு சிலர் நண்பருக்கு பணம் வேறு ஒருவரிடம் வாங்கி கொடுத்து இவர் அதனை கொடுக்கும் நிலை உண்டாகும். சொந்தங்கள் காரணமின்றி பிரிவார்கள். பொருளாதாரத்தில் ஓரளவு நன்மை கிடைக்கும்.

**வியாபாரிகளுக்கு**

தொழில் ஸ்தானத்தில் அமர்ந்த கிரகங்கள் உங்களின் தொழில் வளர்ச்சி நன்மை செய்வார்கள். அரசாங்க உதவியையும் தொழில் வாய்ப்பையும் பெறுவீர்கள். முதலீடு இல்லாத தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். பல தொழிலில் முதலீடு செய்து ஒரு தொழிலில் வளர்ச்சியை இழக்காமல் செயல்படுவது உங்களுக்கு நல்லது.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் உங்களின் வளர்ச்சியில் தடைப்படுத்தும் சிலருக்கு தகுந்த நேரத்தில் பாடம் கற்பிப்பீர்கள். போராட்ட குணத்தை விட்டு விட்டு எல்லோரிடமும் அனுசரித்து செயல் பட்டால் எல்லாரும் உங்களை கைகொடுத்து உதவி செய்வார்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சி கிட்டும்.

**பெண்களுக்கு**

பெண்களின் வாழ்க்கை தரம் உயரும். எதிர் பார்த்த அளவு வளர்ச்சி இல்லாவிட்டாலும் ஓரளவு திறமையால் முன்னேற்றம் பெறுவீர்கள். சுய தொழிலில் முன்னேற்றம் பெறுவீர்கள். பணம் புரளும்.

**மாணவர்களுக்கு**

தடைப்பட்ட கல்வியை மீண்டும் பயிலும் வாய்ப்புகள் அமையும். உடன் கல்வி பயிலும் மாணவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். வங்கி, பொருளாதாரம், வரலாறு கல்வி சிறப்பாக அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

25.09.2016 ஞாயிறு பகல் 01.19 முதல் 27.09.2016 செவ்வாய் இரவு 07.04 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### மூலம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

மருத்துவ காரணங்களால் செய்யும் தொழிலில் சிலருக்கு தடைகள் உண்டாகும். திறமையானவராக இருந்தாலும் சற்று தாமதமாகும். சூழ்நிலை உருவாகும். பொருளாதாரம் சுமாராக இருக்கும்.

#### பூராடம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

புத்துணர்வுடன் செயல்படுவீர்கள். கொடுத்த வேலையை உரிய நேரத்தில் செய்து முடிப்பீர்கள். உறுதியான நிலையில் சிறிது மாறாமல் செயல்படுவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

#### உத்திராடம் 1 ஆம் பாதம்

கருத்துகளில் சிலருக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் செயல்களில் ஒத்துப் போவீர்கள். குடும்பத்தில் சிலருக்கு சிறு பிரச்சினை வந்தாலும் சரியாக செய்து தவிர்த்து விடுவீர்கள். பணப் புழக்கம் இருக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்: மஞ்சள், வெண்மை, பச்சை**

**அதிர்ஷ்ட திசைகள் : கிழக்கு, வடகிழக்கு, மேற்கு**

# காளையார்கோயில் சொர்ணகாளீஸ்வரர் ஆலயம்!

**சொர்ண காளிஸ்வரர் திருக்கோயில் கூடல் புனவாயில் கொடுங்குன்று, புரங் குன்று, குற்றாலம், ஆப்பனூர், பூவனம், நெல்வேலி, ஏடகம், ஆடனை, திருப்பத்தூர் இவை முதலாம்.**

மேலே கூறப்பட்டவை பாண்டிய நாட்டின் பாடல் பெற்ற பதினான்கு சிவத்தலங்களாகும். அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் இப்பதினான்கு சிவத்தலங்களை போற்றிப் பாடியுள்ளனர். இப் பதினான்கில் ஒன்று தான் கானப்பேர் என்னும் காளையார் கோவில் ஆகும்.

## புராண வரலாறு

கைலாயத்தில் பார்வதியும், பரமசிவனும் தனித்திருந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப் பொழுது அன்னை எல்லாம் வல்ல உமக்கு சகல வடிவமும் எதற்கு என்று பரமசிவனை கேட்டாள். அதற்கு சிவபெருமானும் ஐந்தொழிற்காகவே அவ்வுரு கொண்டிருக்கிறோம் என்றார். நாம் கண் திறக்கும் போது உலகம் தோன்றும் விழித்திருக்கும் பொழுது உலகம் வாழும். நாம் கண் மூடும் காலத்து உலகம் அழியும் என்றார். இதைக் கேட்ட அம்மையும் விளையாட்டாக இறைவன் பின் புறம் வந்து அவரது கண்ணை தனது இரண்டு கைகளால் மூடுகின்றாள் அவ்வளவே. மூவுலகும் இருளில் மூழ்கி விடுகின்றது. சிவபெருமான் சினம் கொண்டு அன்னையின் கையினை விலக்குகின்றார். இப்படி இடையூறு செய்த பார்வதி தேவியைக் காளியா குமாறு சபிக்கின்றார்.

அன்னையும் தன் தவறுக்கு இறைஞ்சி மன்னிப்புக் கேட்க சிவபெருமானும் சண்டாகரனை வென்று காளியுருவம் நீங்கி எம்மை வந்து சேரு வாய் என்று அருள்பாலிக்கின்றார்.

அன்னையும் சிவபெருமான் ஆணைப்படி கானப்பேரை அடுத்த மருதவனத்தில் (கண்ட தேவியில்) துர்க்கை வடிவில் கோவில் கொள்கிறாள். சண்டாசுரன் என்னும் கொடியவன் தேவர்களை துன்புறுத்த தேவர்கள் துன்பம் தீர்த்து தனது சாபம் நீங்கப் பெற்று சுவர்ணவல்லியாக காளீசரை மணந்து கோவிலில் இடப்பாகத்தில் அமர்ந்து இருக்கின்றார்.

## அமைப்பு

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற சிறப்புகள் கொண்டது. கானப்பேர் எயில் என்று அழைக்கப் பட்டதும் வேங்கை மார்பன் என்ற வீரம் செறிந்த மன்னனின் கோட்டை இருந்ததுமான இத்திருத் தலத்தில் இறை அடியார்களுக்கு அடைக்கலமான பெருஅரண்மதில் சூழ்ந்த ஆலயம் மூன்று முக்கிய திருக்கோயில்களை ஒன்றாக்கி உள்ளடக்கியது.

## மூர்த்தி

1. அருள்மிகு சௌந்தரவல்லி அம்பாள் சமேத சோமேசர்.

2. அருள்மிகு சொர்ணவல்லி அம்பாள் சமேத காளீஸ்வரர்

3. அருள்மிகு மீனாட்சி அம்பாள் சமேத சுந்த ரேஸ்வரர்

இம்மூன்று லிங்கத் திருமேனிகளை தனித்தனி கருவறைகளாக கொண்டு மூன்று சிவாலயங்கள் ஆக முறைப்படி பரிவார சிற்ப சிலாமூர்த்தங்களையும் எழுந்தருளும் திருமேனிகளையும் கொண்டுள்ளது.

## அமைவிடம்

சிவகங்கை தொண்டி பெருவழிச் சாலையில் சிவகங்கையிலிருந்து 18 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. ●

S.L.S. பழனியப்பன்



ஆர். பொன்னம்மாள்

கோயமுத்தூருக்கு மேற்கே ஆறாவது கிலோ மீற்றரிலுள்ள பேரூரில் இந்த அம்மன் கொலு வீற்றிருக்கிறாள்.

சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன் ஒரு பாம்பு அங்கிருந்தது . நாளடைவில் அது பாறைபோல் இறுக அதில் உளிகொண்டு அம்மன் சிலையை செதுக்கினார்கள் என வரலாறு கூறுகின்றது. அந்தப் புற்றினுள் சர்ப்பமாக இருந்து அன்னை அனை வரையும் காத்து வருகிறாள். சில சமயம் புடவையில் அச்சர்ப்பம் படுத்திருப்பதை பல பக்தர்கள் தரிசித்தி ருக்கிறார்கள்.

ஒரு முறை பகல் இரண்டரை மணிக்கு கோவில் நடைசாத்திய பிறகு ஒரு முக்கியஸ்தர் தரிசனத்துக்கு வந்திருக்கிறார். அகால வேளையில் கதவு திறக்கக் கூடாது என்று சொன்னதைக் கேட்காமல் கதவைத் திறக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தியிருக்கிறார். கதவைத் திறந்ததும் அனைவரும் மிரண்டு விட்டார்கள். அம்பாளின் காலடியில் சர்ப்பம். முக்கியஸ்தர் "வெளியே போய் விடலாம்" என்று சொல்லி உடனே வெளியேறி விட்டார்.

காத்திருந்து மாலையில் தேங்காய் உடைத்து அர்ச்சனை செய்து விட்டே ஊர் திரும்பியிருக்கிறார். அம்பாளின் வலது தொடை யிலுள்ள துவாரம் (புற்று துவாரம்) வழியாக பாம்பு உள்ளே செல்வதை பலர் கண்டிருக்கின்றனர். கோவில் சுவற்றில் சர்ப்பம் வரையப்பட்டு உள்ளது.

"நம்பியவர்களுக்கு நான் அன்னை, உடனிருந்து காப்பேன்" என்ற வாசகங்களும் காணப்படுகின்றன.

ஒரு சமயம் ஈஸ்வரனும், பார்வதியும் படியளக்க பூலோகத்திற்கு வருகையில் ஒரு ஆறு குறுக்கிட்டது. "சகலமும் அறிந்த கைலாய நாதர்" என்பதை மறந்து கணவர் என்ற பேதமையில் பார்வதி தேவியார் "அங்கு ஆழம், அங்காழம்" என்று அடிக்கடி சொன்னதால், அங்காழம்மன் என்று அழைக்கப்பட்டது. அது காலப்போக்கில் மருவி பார்வதி குடி வந்த இடம் "அங்காளம்+மன்" என்று பெயர் பெற்றதாகவும் சொல்லப்படுகின்றது.

சிவஸ்தலமான பேரூரில் சிவாலயத்துக்கு எதிரே அங்காளம்மன் கோவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. அங்காள பரமேஸ்வரி வடக்கு நோக்கி அமர்ந்து, கையில் சூலாயுதமும், காலருகில் அரிவாளுடனும் அருள் புரிகின்றாள். விநாயகர், சுப்ரமண்யர் வடக்கு நோக்கியும், பேச்சியம்மன் மேற்கு நோக்கியும் காட்சி தருகின்றனர்.

நோய்வாய்ப்பட்டவர்கள் பேச்சியம்மனுக்கு நேர்ந்து கொண்டு காணிக்கை செலுத்துகின்றனர். கர்ப்பிணிகள் ஏழு, அல்லது ஒன்பதாம் மாதங்களில் படையலிடுகின்றனர். பூசணிக்காய் உடைக்கின்றனர். கொத்தனார்களின் குலதெய்வமான "வீரமார்த்தி அம்மன்" சன்னதியும் இங்குள்ளது.

இதற்கும் மாவிளக்கேற்றி, தேங்காய் உடைத்து, பழம், கரும்பு, இனிப்பு, முறுக்கு என அனைத்தும் படைத்து வழிபடுகின்றனர். பௌர்ணமி தோறும் அங்காளம்மனுக்கும், பேச்சியம்மனுக்கும் வடைமாலை சார்த்தப்படுகிறது.

மாசானக்கருப்பு என்ற விசேடமான சன்னதியும் இங்குண்டு. நவராத்திரி சமயத்தில் அற்புதமாக கொலு வைத்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம், அர்ச்சனை எல்லாம் செய்யப்படுகிறது.

மாசித் திருவிழாவின் ஐந்தாம் தீமிதிப்பு வைபவம் நடக்கும். பத்து வயதுக்கு மேற்பட்டவர்கள் இறங்குவர். உச்சிக்கால பூஜையும், அபிஷேகமும் நடந்த பின், கொடி இறக்கப்பட்டு அன்னதானம் நடக்கும். ஏராளமான அன்பர்கள் அரிசி, பருப்பு, காய்கறி, நன்கொடை தந்து அம்மனின் அருளுக்குப் பாத்திரமாகிறார்கள்.

அன்று மாலை மஞ்சள் நீராட்டு விழா. நடராஜர், பார்வதி பிரதிமைகளைக் கொண்டு போய் (பார்வதியின் காலடியில் சிவலிங்கம் உள்ளது) வைத்து பக்தர்களுக்கு விபூதி கொடுத்து பழம், கடலை, முறுக்கு வகைகளை எடுத்துச் சென்று நொய்யல் ஆற்றங்கரையில் வைத்து பூஜித்து கட்டிய கங்கணத்தை அவிழ்த்து விட்டு விக்கிரகங்களை நீராட்டி, புத்தாடை அணிவித்து, மாலைசூட்டி அலங்கரித்து ஊர் வலமாக




அங்காள பரமேஸ்வரி



பேச்சியம்மாள்





# காவல் தெய்வமாய்

## பேரூர்

# ஸ்ரீ அங்காளம்மன்!

எடுத்து வருவார்கள். அடுத்து பேச்சியம்மனுக்கு பூஜை நடக்கும். அம்மனின் சன்னிதியில் கபாலத்தில் விபூதி வைக்கப் பட்டிருக்கும். பேய் பிசாசு பிடித்தவர்கள், சித்தப்பிரமை கொண்டவர்கள் ஆலயத்தில் ஒரு பக்கமாய் உட்கார வைக்கப்பட்டிருப்பர். அரை லீற்றர் பால், வெள்ளை வஸ்திரம், பச்சரிசிமாவு வைத்திருப்பர்.

பச்சரிசி மாவில் மனித பொம்மை செய்து, அரளிக் குச்சியை நட்டு வைத்து, மாவில் பாலை ஊற்றியதும், முழுப் பூசணிக்காயை மூன்று முறை சுற்றி, கபாலத்திலிருந்து விபூதி எடுத்து உட்கார்ந்திருப்பவர்களுக்கு இட்டு, வேறு இடத்தில் அமரச் செய்கின்றனர். பச்சரிசி பொம்மையை ஆற்றில் நனைத்து வீசி எறிந்து விட்டு சர்க்கரைப் பொங்கல், வடை நிவேதிக்கிறார்கள். கடைசி நாள் மூன்று அடுக்குகளாக அமைந்துள்ள குண்டத்துக்கு பால், தயிர், இளநீர், தேன், பழங்கள், மஞ்சள், எலுமிச்சம் பழம் இவற்றால் அபிஷேகம் செய்து, சந்தனக் காப்பு சாத்தி குண்டத்தை சாந்தி செய்கின்றனர்.

அடுத்து அங்காள பரமேஸ்வரி, பேச்சியம்மன், வீரமார்த்தி அம்மன், விநாயகர், முருகன் எல்லா தெய்வங்களுக்கும் அபிஷேக, அலங்காரம் நடத்துவதோடு மாசித்திருவிழா பூர்த்தியாகின்றது.

ஆடி மாதம் அமாவாசை, பௌர்ணமி, செவ்வாய், வெள்ளி நாட்களில் அம்பாளின் ஊஞ்சல் திருவிழா கண்படைத்தவர் கட்டாயமாகப் பார்க்க வேண்டிய திருவிழா. பேச்சியம்மனை மருத்துவச்சி அம்மா என்றே குறிப்பிடுகின்றனர். பேறு காலத்தை எதிர்நோக்கி யிருப்பவர்கள் பிரார்த்தித்தால் சுகப்பிரசவம் ஆகிறதாம்.

"ஆம்" என்றால் அழகு (அம்+காளி அங்காளி) அழகான காளியம்மன் பக்தர்களுக்காக ஆயுதம் தாங்கி வினைகளை வேரறுக்க, ஆபத்துகளிலிருந்து காக்க இங்கே எழுந்தருளியிருக்கிறாள். அவளை ஆராதித்து அவள் கருணைக்குப் பாத்திரமாவோம்.



விநாயகர்



முருகன்



மண்டபம்



# யாக குண்டத்திலிருந்து எழும்பிய எலும்புக்கூடு!

ஆர்.கண்ணன்

ஒரு முறை ஒரு வீட்டில் குடும்ப நல வேள்வி செய்ய வேண்டும் எனக் கூறினார்கள். அதனை ஏற்று, வேள்விக் குழுவினர் சிலர் வேள்விக்குச் சென்றோம். இரவு 12.00 மணிக்கு சுற்று பூசை.

சுற்று பூசையில், பூசணிக்காயில் ஏற்றப்படும் கற்பூரத்தை யாரோ ஊதி அணைப்பது போல் உணர்ந்தோம். கற்பூரம் ஏற்றுவோம். பற்றியவுடன் "டப்'பென்று அணைந்து விடும். ஏறத்தாழ அரைமணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு சுற்று பூசையை முடித்தோம்.

பின்னர் வேள்விப் பணிகளைத் தொடங்கினோம். யாக குண்டம் சரியாக அமையவே இல்லை. மூலமந் திரத்தைச் சொல்லிக் கொண்டே பிதுங்கிக் கொண்டு வெளிவரும் செங்கற்களைச் சரி செய்து ஒரு வழி யாக யாக குண்டத்தைக் கட்டி முடித்தோம். வேள்வி ஆரம்பிக்கப்பட்டு 1008 மந்திரங்கள் படித்து கொண் டிருந்தார்கள். நான் யாக குண்டத்தின் அருகே நின் றிருந்தேன்.

யாக குண்டத்திற்குள்ளிருந்து ஒரு எலும்புக்கூடு உடலை நெளித்துக் கொண்டு மெதுவாக வெளியே வருவதைப் பார்த்தேன். ஒரு வேளை இது பிரமையாக இருக்குமோ என நினைத்தேன்.

எனக்கு அருகே இருந்த மற்றொரு சக்தியும் அதைப் பார்த்து விட்டார். அந்த எலும்புக்கூடு யாக குண்டத்திலிருந்து வெளிப்பட்டு, விர்ரென தெரு வாசல் வழியாக வெளியேறியது. அது வெளியே போகும் போது, பூனை போன்று கத்தும் சப்தம் மட்டும் கேட்டது.

இந்த நிகழ்ச்சியை அந்த வீட்டுக்காரரிடம் கூறினால் பயந்து விடுவார். எனக் கருதினேன். இது தொடர்பாகச் சித்தர் பீடத்தில் அம்மாவிடம் கேட்க முடிவு செய்தேன். அம்மா கூறினார்கள்.

அந்த இடமெல்லாம் (வேள்வி செய்த இடம்) புஞ்சைக் காடாக இருந்தது. ஜமீன்தாரர்களுக்குச் சொந்தமான இடம். அந்த இடத்தின் உரிமையாளராக இருந்த ஜமீன்தார் இறந்தவுடன் வேள்வி நடைபெற்ற (யாக குண்டம் கட்டப்பட்ட) இடத்திற்குக் கீழே தான் புதைக்கப்பட்டார்.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையால் பீடிக்கப்பட்ட அந்த ஜமீன்தாரின் ஆன்மா சாந்திய டையாமல் இவ்வளவு காலமாக அந்த இடத்திலேயே இருந்தது. அப்பகுதியில் துர் மரணங்களை அவ்வப் பொழுது ஏற்படுத்தியது. வீட்டு உரிமையாளருக்கும் துன்பங்களைக் கொடுத்து வந்தது.

யாக குண்டம் கட்டி மந்திரங்களைக் கூறியவுடன் அந்த ஆன்மா இந்த உலகத்தை விட்டு வேறு உலகத் துக்குச் சென்று விட்டது. சமாதி மேலே யாக குண்டம் கட்டினால் இப்படித்தான்!

இந்த அனுபவத்தின் மூலம் சில உண்மைகளைப் புரிந்துகொண்டேன். மனிதன் இறந்து விட்டாலும் அவனது ஆன்மா சில நேரங்களில் அமைதியின்றி அலைகிறது. வேள்வி செய்யும் பொழுது, தீய சக்திகளினால் அந்த இடத்தில் இருக்க முடிவதில்லை.

வேள்விப் பணிகளில் இருப்பவர்களுக்கு அம்மாவின் அருளும் பாதுகாப்பும் உண்டு. ●

## இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் மாரியம்மன், காளி தேவதைகளை வணங்கி. நெய் விளக்கு போட்டு வழிபாடு செய்து வர ராகு கேது தோசம் நீங்கி திறமைகளால் வாழ்க்கையில் வெற்றியை தொடர்ந்து பெறுவீர்கள்.



**இம்மாதம் அதிர்ஷ்ட கிழமைகள் : திங்கள், வியாழன், சனி**



# மகரம்

### துர்முகி ஆண்டு புரட்டாதி மாதம்
### 17.09.2016 முதல் 16.10.2016

பொது நோக்கமும், பொறுப்பும் கொண்டு சிறந்து விளங்கும் மகர ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வையும் ராசிநாதன் சனி பார்வையும் பெறுவதும் லாபஸ்தானத்தில் சனி அமர்வதும் வளர்ச்சியையும், தொழிலில் நல்ல வாய்ப்பையும் பெறுவீர்கள். கடந்த காலத்தை விட இனி முன்னேற்றம் காண்பீர்கள். வேற்றுமையை மறந்து அனைவரிடம் இணைந்து செயல்படுவீர்கள்.

**பணியாளர்களுக்கு**

பணியாளர்களின் இடமாற்றம், பணி மாற்றம் உண்டாகும். எதிரி பார்த்த வளர்ச்சியும், மேன்மையும் அடைவீர்கள். தொழிலில் கவனம் செலுத்தி கொடுத்த பணியை சிறப்பாக செய்து நன்மையை அடைவீர்கள். தொழிற்சங்க பதவிகளும் கிடைக்கும். பொருளாதாரம் சிறப்பாக அமையும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது வாழ்விலும், அரசியலிலும் இருப்பவர்களுக்கு புதிய பதவி வாய்ப்பும், பொருளாதார வளர்ச்சியும் பலரும் மதிக்கும் நிலையும் உண்டாகும். சொந்த கருத்துகளை பலரும் ஏற்கும் நிலை உண்டாகும். பொது மக்களின் அன்பை பெறுவீர்கள். பொருள்ாதாரம் நல்ல வளர்ச்சி பெறும்.

**வியாபாரிகளுக்கு**

செய்யும் தொழிலை தெய்வமாக நினைப்பீர்கள். எந்த தொழில் செய்தாலும் அதில் முழுமையாக ஈடுபட்டு செயல்களில் சிறப்பான வளர்ச்சியை பெறுவீர்கள். வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனை நல்ல ஆதாயத்தை தரும். வெளியூர், வெளிநாட்டு தொடர்புகளில் நற்பலன்கள் பெறுவீர்கள்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினரின் எண்ணம் நிறைவேறும். விடுபட்ட நிகழ்ச்சிகளில் மீண்டும் இணைவீர்கள். உங்களுக்கு பல நாட்கள் இடையூறு செய்தவர் ஒதுங்கி விடுவர். நடன, ஒப்பனை கலைஞர்கள் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். பொருளாதாரம் மேன்மை பெறும்.

**பெண்களுக்கு**

பெண்களின் தொழிலில் வளர்ச்சி கிடைக்கும். புதிய வேலை வாய்ப்புகளும், அரசாங்க வேலை வாய்ப்பும் விரைவில் அமையும். உங்களின் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல் முன்னேற்றம் தரும்.

**மாணவர்களுக்கு**

மாணவர்களின் கல்வி சிறப்பாக அமையும். வெளிநாட்டு கல்வி வாய்ப்புகளும், சிவில் சட்டம், அறிவியல், கணிணி கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். ஆசிரியர்களின் உதவி பயனுள்ளதாக அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

27.09.2016 செவ்வாய் இரவு 07.05 முதல் 30.09.2016 வெள்ளி அதிகாலை 03.14 மணி வரை

### நட்சத்திர பலன்கள்
### உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்

செய்யும் தொழிலில் மேன்மையும், தொழிலாளர்களின் ஒத்துழைப்பில் வியாபார விருத்தியும் பெறுவீர்கள். குடும்பத்தில் சுப காரியங்கள் நிறைவேறும். பொருளாதார மேன்மையை பெறுவீர்கள்.

### திருவோணம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

தினமும் உங்களின் செயல்பாடுகளால் பல வித்தியாசமான கோணத்தில் செயல்பட்டு வெற்றியை பெறுவீர்கள். மனதில் உறுதியும் செயலில் தெளிவும் உங்களுக்கு சிறப்பை பெற்று தரும். பணம் புரளும்.

### அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

கூட்டுத் தொழிலில் நல்ல லாபம் பெறுவீர்கள். முதலீடு இல்லாத தொழிலில் கூடுதல் லாபம் பெறுவீர்கள். குடும்பத்தில் வளர்ச்சியும் திறமையும் பெற்று குழந்தைகள் இருப்பார்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்: நீலம், மஞ்சள், வெண்மை**
**அதிர்ஷ்ட திசைகள் : தெற்கு, வடமேற்கு, வடக்கிழக்கு**



# பிறவிதோறும் புண்ணியம் தரும் "அன்னதானம்"!

அன்னையின் அன்பு மொழிகளைக் கேட்ட குமாரன் தாயை நோக்கி "அன்னையே!" நின் சொல்லே வேத மொழிகளாகும். அந்த அன்னதானத்தின் பலனை விளக்கமாகக் கூற வேண்டும் என்றான். அன்னை "மைந்தா! அன்னதானத்தின் பலன் என்னாற் கூறுந்தரமுடையதன்று. அருங்கானகத்தில் தவம் இயற்றும் அருந்தவ அடிகளை சென்று வினவியுணர்வாயாக" என்றாள். உடனே குமாரன் தாயை வணங்கி, "வனஞ்சென்று முனிவர்களைக் கண்டு கேட்டுத் தெரிந்து வருகிறேன். விடை தருவாய்" என்றனன். அன்னை மகனைத் தனித்து வனத்திற்கனுப்ப அஞ்சினாளெனினும், அன்ன தானத்தின் பலனைத் தெரிந்து கொள்வது அவசிய மென்று நினைத்து அருமைக் கண்மணியே! அங்ஙனமே சென்று அருந்தவ முனிவரையடுத்து சந்தேகந்தெளிந்து வருவாய். நினக்கு வழியில் இன்னலின்றி இறைவன் காத்தருள்வான்" என்று ஆசி கூறி அனுப்பினாள்.

அந்த இளங்குமாரன் தாயாரை மும்முறை வணங்கி அவளது பூர்ணமான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு வனம் புகுந்தான். நடுக் காட்டையடைந்தான். கதிரவன் மேற்கடலில் மூழ்கினான்.

இருள் சூழ்ந்தது. எங்கும் மிருகங்களின் சத்த மாக இருந்தது. அன்னையின் வார்த்தையை உன்னி யதனயன் இறைவன் நம்மைக்காத்து இன்னருள் புரிவாதென்று துணிந்து சிவ நாமத்தையுரைத்துக் கொண்டே சென்றான். கங்குலானபடியால் எங்கு தங்குவதென்று அறியாது இடர்ப்பட்டான். அக்கால் அங்கோர் பரண் புலப்பட்டது. பரண் என்றால் விலங்குகளினால் துன்பம் நேராத வண்ணம் பூமிக்குமேல் உயரத்தில் மரப்பந்தல் போல அமைந்திருக் கும் அதனருகே சென்றான். அப்பரணில் ஒரு வேடன் தன் பத்தினியுடன் வாழ்ந்து கொண்டிருந் தான். பகலெல்லாம் வேட்டையாடி வேண்டிய உண வைத் தேடி வந்து இரவில் அதன் மீது தன் மனைவியுடன் நித்திரை புரிவது வழக்கம். பரண் மீதிருந்த வேடன் பரணை நாடி வரும் இளங்குமரனைக் கண்ணுற்று இறும்பூதற்றான். "மிருகங்கள் சஞ்சரிக்கும் இப் பெருங்கானகத்தில் பொழுதுபட்ட இந்தச் சமயத்தில் இங்கு வருகின்ற இந்த இளமகன் யாராக இருக்கும்!" எனக் கீழே இறங்கி அந்தக் குமரனை எடுத்து அணைத்து "குழந்தாய்! என்னே நின்மனத் துணிவு? ஆயுதபாணிகளும் பகலில் கூட இவ்விடம் வர அஞ்சுவார்களே! நீயோ இளம் பிள்ளை, இரவு வந்த இந்தச் சமயத்தில் இக்காட்டகத்திற்கு எதைக் கருதி நண்ணினாய்? மிருகங்கள் உன்னை உபத்திரம் புரி



எனக்குக் கொடுத்துவிட்டு உன் பங்கை இஷ்ட மிருந்தால் அவனுக்குக் கொடு" என்று கூறினாள். வேடன் "அங்ஙன மேயாகுக" என்று அந்த உணவை இரண்டாக பகிர்ந்து ஒரு பாகத்தைப் பத்தினிக்குக் கொடுத்துவிட்டுத் தன் பாகத்தை அந்தக் குமாரனுக்குப் பரிவோடு கொடுத்தான். பசித்திருந்த அந்தப் பிள்ளை வேடனால் தரப்பட்ட தேனையும் தினைமா வையும் நெருப்பில் சுட்ட கிழங்கையும் உண்டு உள்ளங்க ளித்தனன். வேடன் மூன்று கை தண்ணீர் பருகிவிட்டு சாப்பி டாமல் இருந்தான்.

பின்னர் வேடன் "அப்பா! கீழே படுத்தால் மிருகங்கள் கொன்றுவிடும். இப்பரண் மீது ஏறிப் படுப்பாய்" என்று அச்சி றுவனை பரண் மீதேற்றி படுக்க வைத்தான். வேடன் மனைவி அதுகண்டு கோபித்து, "இவன் என் பக்கத்தில் படுக்கக்கூ டாது! பாதியிடத்தை எனக்குக் கொடுத்துவிட்டு மற்றைப் பாதியிடத்தில் அவனும் நீயும் படுத்துக் கொள்!" என்றாள். வேடன் அவளது துர்க்குணத்தை நினைத்து நெஞ்சம் புண் ணாகி, பாதியிடத்திலே பத்தினி பக்கத்தில் தான் படுத்துக் கொண்டு சிறுவனை ஓரத்திற் படுக்கவைத்து தூக்கத்தில் விழா வண்ணம் சிறுவனைக் கரத்தால் அணைத்துக் கொண்டு தூங் காது விழித்துக் கொண்டிருந்தான். வேடன் மனைவியும் சிறு வனும் தூங்கி விட்டார்கள். நடுராத்திரியாயிற்று, வேடன் தன் பத்தினி தூங்கி விட்டதைப் பார்த்து, அச்சிறுவனை நடுவில் மெல்லப் படுக்கவைத்து விட்டுத் தான் ஓரத்தில் படுத்து நித் திரை செய்தான். வேடப்பெண் நித்திரை தெளிந்தாள். எங்கி ருந்தோ வந்த பையனுக்கு தன் உணவைக் கொடுத்துவிட்டுத்



யவில்லையா! எவ்வாறு துஷ்ட மிருகங்களினின்று நீ தப்பித்துக் கொண்டு வந்தாய்? நின் உறை விடம் யாது? அறிய விரும்பு கிறேன். நின்னைப் பாதுகாக்க என் மனம் பரிதவிக்கிறது. விரைவிற் பகரு வாய்" என்றனன்.

அது கேட்ட குமாரன் "ஐயா! நினது பரிவுக்கு மிகவும் மகிழ் கிறேன். புலன்களையடக்கி நலம் பெறத் தவமியற்றும், மாத வரைக் காண வந்தேன். தாய் போற் புரிந்த தமர் போன்ற உபசரிக்கும் தயாளுவாகிய நின்னைக் கண்டு இன்னல் தீர்ந்தேன்" என்றனன். வேடன் "குழந்தாய்! சந்தோஷம் நின்வரவு நல்வரவு ஆகுக. எங்களோடு நீயும் இருந்து இந்த இரவை இனிது கழிப்பாய்" என்று தனக்கும் தன் பத்தினிக்கும் வைத்திருந்த உணவை மூன்று கூறாக ஆக்கி அப் பிள்ளைக்கு ஒரு பங்கைக் கொடுக்க எத்தனம் புரி கையில் அவ் வேடன் பத்தினியாகிய வேட்டுவ மாது மிகவுஞ் சினங்கொண்டு வந்தவனுக்காக என் உணவை குறைத்துக் கொள்ள மாட்டேன். இரண்டாகப் பகிர்ந்து என் பங்கை

தன் கணவன் பட்டினி கிடப்பதை நினைத்து இந்தப் பையன் இருந்தால் நமக்கு இடைஞ்சல், இவனைக் கீழே தள்ளி விட வேண்டும்" என்று தீர்மானித்தாள். இருளான படியால் தன் சமீபத்தில் படுத்திருக்கிறது. நாயகன்தான் என்று எண்ணி ஓரத்தில் படுத்திருந்த நாயகனை மெல்ல உருட்டிவிட்டாள். நன்றாக தூங்கிக் கொண்டிருந்த வேடன் கீழே விழுந்தான். பரண் அடியில் காத்துக் கொண்டிருந்த மிருகங்கள் அந்த உத்தமனான வேடுவனை வாயில் போட்டுக் கொண்டன. வேடன் மனைவி "நம்மை பிடித்த சனியன் தொலைந்தது" என்று உள்ளம் உவந்தாள்.

(தொடரும்...)



## இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

ஞாயிற்றுகிழமை ராகு காலத்தில் நவக்கிரக வழிபாடும், பைரவருக்கு நல்லெண்ணெயை தீபம் மேற்கு நோக்கி ஏற்றி வழிபாடு செய்து வர சகல கஷ்டமும் நீங்கும். வெள்ளிக்கிழமை துர்காஷ்டகம் வாசிக்கவும்.

**இம்மாதம் அதிர்ஷ்ட கிழமைகள் : புதன், வெள்ளி, சனி**

# கும்பம்

### துர்முகி ஆண்டு புரட்டாதி மாதம்
### 17.09.2016 முதல் 16.10.2016

கொண்ட கொள்கையை தொடர்ந்து செயல்படுத்தும் குணம் கொண்ட கும்ப ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு கிரக நிலைகள் சரியில்லாமல் போனாலும் உங்களின் சொந்த செயல்பாடுகளால் வருமுன் காத்து கொள்வது உங்களின் வாழ்க்கைக்கு மிகவும் சிறந்ததாக அமையும். பிணையம் இடுவது தவிர்ப்பது நல்லது.

**பணியாளர்களுக்கு**

பணியாளர்களின் வேலை சூழ்நிலைகள் மாறுபடும். கடந்த காலத்தை விட சிரமத்தை அடையும்படி இருக்கும். பணியின் போது பலரின் எதிர்ப்பை சந்திக்க வேண்டி வரும். எனினும் நான் என்று இருக்காமல் ஒதுங்கி சென்றால் எல்லாம் அதே நம்மை விட்டு போகும். பொருளாதாரம் சமமாக இருக்கும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது வாழ்வில் நிறையசாதிக்கவேண்டுமென்று நினைத்து செயல்படுவீர்கள். உங்களின் இலக்கை அடையும் முன்பே அதை கைவிடுவீர்கள். எதிலும் முழுமையான கவனம் செலுத்த மாட்டீர்கள். பொது மக்களின் செயல்களோடு ஒத்து போய் விடுவீர்கள். பொருளாதாரம் ஓரளவு நன்றாக இருக்கும்.

**வியாபாரிகளுக்கு**

செய்யும் தொழிலில் கவனம் செலுத்தி நல்ல பலனை அடைவீர்கள். யாரையும் நம்பி செயல்படாமல் உங்கள் மீது நம்பிக்கை வைத்து செயல்படுவீர்கள். உங்களின் ராசிநாதன் உங்களுக்கு உதவிகளை செய்து தொழிலில் துவண்டு விடாமல் உறுதியுடன் வலிமையை தந்து வளம் பெறச் செய்வார்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. கொடுக்கல் வாங்கலை தவிர்ப்பது நல்லது. வரவுக்குள் செலவுகளை சுருக்கி கொள்வீர்கள். மருத்துவ வசதிகளை பெற்று உடல் ஆரோக்கியத்தை பெறுவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**பெண்களுக்கு**

பெண்களின் வளர்ச்சிக்கு அரசாங்க உதவிகளையும் நண்பர்களின் உதவியையும் பெறுவீர்கள். சுய தொழிலில் அதிக கவனம் செலுத்தி வாழ்வில் முன்னேற்றம் பெறுவீர்கள். உறவுகள் நன்றாக இருக்காது. எதிலும் கவனமாகவும் நிதானமாகவும் செயல்படுவது உங்களுக்கு நன்மையை தரும்.

**மாணவர்களுக்கு**

மாணவர்களின் கல்வி நன்றாக அமையும். உயர்கல்வியில் மிக கவனம் செலுத்த வேண்டி வரும். பல கல்வி வாய்ப்புகளை பெற்றாலும் ஆர்வம் குறைவால் குறைந்த வாய்ப்புகளை அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

30.09.2016 வெள்ளி அதிகாலை 03.15 முதல் 02.10.2016 ஞாயிறு பகல் 01.43 மணி வரை

### நட்சத்திர பலன்கள்
### அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்

எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய காலம். கண்ணீர் வடித்து உதவி கேட்டாலும் மனதை கல்லாக்கி கொள்வது நல்லது. உதவி என்று செய்தால் அதன் முழு கஷ்டமும் உங்களை சேர்ந்து விடும். தவிர்க்கவும்.

### சதயம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

காலத்தின் சூழ்நிலைகளுக்கு தகுந்தபடி உங்களை மாற்றிக் கொள்வது நல்லது. தொழிலில் முன்னைவிட சற்று தொய்வு ஏற்படும். இருந்தாலும் உங்களின் மன உறுதி நிலைக்கும்.

### பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்

புத்திரர்களின் வேலைவாய்ப்பு அமையும். திருமண வாய்ப்புகளும் அவர்களுக்கு அமையும். வரவுக்கு மீறிய செலவுகளால் புதிய கடன் படும் நிலை உண்டாகும். பொருளாதாரம் சீராக இருக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்: நீலம், பச்சை, வெண்மை**

**அதிர்ஷ்ட திசைகள் : மேற்கு, வடமேற்கு, கிழக்கு**

நலம் தரும்

# ஸ்ரீராமநாம மந்திரங்கள்!



## ராம த்ரயோதஜுக்ஷரி மந்திரம்

"ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம்" இந்த மந்திரம் பதின்மூன்று எழுத்துக்களைக் கொண்டது. ராம த்ரயோதஜுக்ஷரி மந்திரம் எனப்படும் இந்த மந்திரத்தை ஸ்ரீ சமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள் தொடர்ந்து கூறி ஸ்ரீராமபிரானின் தரிசனம் பெற்றார்.

## கலியுகத்தில் பாவம் நீக்கும் மந்திரம்

*ஸ்ரீ ராம ராம ராமேதி ராமேராமே மனோரமே*

*சகஸ்ரநாம தத்துல்யம் ராமநாம வரானனே*

கலியுகத்தில் பாவம் நீக்கும் மந்திரமாக திகழ்வது இந்த ராமநாம மந்திரமாகும். இதனை ஒருமுறை சொன்னால் நூறு தடவை ராமநாமம் சொல்வதற்கு சமம். ஒரு முறை ஸ்ரீ விஷ்ணு ஸகஸ்ரநாம பாராயணம் செய்த பலனும் கிடைக்கும்.

## ராமாயணத்தைப் படித்த முழு பலனும் கிடைக்கும் மந்திரம்

ராமாயணம் முழுவதையும் படிக்க முடியாதவர்கள் கீழ்க்கண்ட ஒன்பது வரிகளை மட்டும் பக்தியுடன் பாராயணம் செய்தால் ராமாயணத்தைப் படித்த முழு பலனும் கிடைக்கும்.

*ஸ்ரீராமம்ரகுகுல திலகம்*
*சிவதனுசாக் ருஹீத சீதா ஹஸ்தகரம்*
*அங்குல் யாபரண சோபிதம்*
*சூடாமணி தர்ஸன கரம்*
*ஆஞ்சநேயம் ஆஸ்ரயம்*
*வைதேஹி மனோகரம்*
*வானர ஸைன்ய ஸேவிதம்*
*சர்வ மங்கல கார்யானு கூலம்*
*சததம் ஸ்ரீராமசந்த்ரம் பாலயமாம்*

## சகல நல்ல காரியங்களிலும் வெற்றி கிடைக்க ஒரு மந்திரம்

*ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*

*ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண*
*கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே* ●

காமாக்ஷி வெங்கட்

**பிருந்தாவன கிருஷ்ணனும், கீதாச்சாரியனான கிருஷ்ணனும் ஒருவரே என்பதை நாம் மறந்து விடக் கூடாது.**

சுவாமி விவேகானந்தர், "கோபிஜன வல்லபன், கீதாச்சாரியனை விட உயர்ந்தவன்" என்று, "இந்தியப் பெரியோர்கள்" என்ற தலைப்பில் சென்னையில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்கிறார்.

"உயர்ந்த பக்தி என்பது பகவானிடம் பரமப் பிரேமை கொள்வதாகும்" என்று, நாரதபக்தி சூத்திரம் கூறுகிறது. அத்தகைய உத்தமமான பிரேம பக்தியும், தூய உள்ளமும், உயர்ந்த மனோ பாவனையும் கொண்டவர்களால்தான் ஸ்ரீ கிருஷ்ணனின் பிருந்தாவன லீலைகளைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

தேகாபிமானத்திலிருந்து (உடல் பற்றிலிருந்து) விடுபட்டிருந்த பரமப்பிரேமை பக்தியினால்தான், விரஜகோபிகைகள் ஸ்ரீகிருஷ்ணனைப் புரிந்து கொண்டார்கள்.

மிக மிக உயர்ந்த பக்திக்கு இலக்கணமாக, பிருந் தாவன கோபியர்களை நாரதர் குறிப்பிடுகிறார். ஸ்ரீகிருஷ்ண சைதன்யர், கிருஷ்ணாவதாரத்திலேயே ராஸகிரீடையைத்தான் மிகவும் முக்கியமானதாகக் கருதினார்.

# பிருந்தாவன கிருஷ்ணனும் பகவத்கீதை கிருஷ்ணனும்




ஸ்ரீகிருஷ்ணனுடைய ஒவ்வொரு லீலையும் நமக்குத் தேவை. அதில் உயர்வு தாழ்வு, வேண் டுதல் வேண்டாமை என்று காண்பது அறி வீனம். பிருந்தாவன கிருஷ்ணனைப் புரிந்து கொள்வது அவ்வளவு சுலபமல்ல. "பிருந்தாவன கிருஷ் ணனைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், மிகப் பெரிய அளவில் உள்ளம் பண்பட்டிருக்க வேண்டும்" என்று, தேகாத்ம புத்தியே இல்லாத வரும், பிரம்மநிஷ்டருமாகிய சுகதேவர் ஸ்ரீகி ருஷ்ண லீலையில் சொல்லியிருக்கிறார்.

சுகதேவர் எத்தகையவர் என்பதை நாம் மனதில் கொண்டால், அவரால் சொல்லப்பட்ட கிருஷ்ண லீலை என்ற விடயம் எந்த அளவுக்கு உயர்ந்த சிந்தனைக்கு உரியது என்பது விளங்கும்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் அனுபூதி யின் சிகரமாக வாழ்ந்தார். அவர் பிருந்தா வன கிருஷ்ணனைப் பற்றிப் பேசும்போது, இதயம் நெகிழ்ந்து, கண்ணீர் மல்கப் பேசி யிருக்கிறார். ஆனானப்பட்ட ஸ்ரீ ராம கிருஷ்ணர் போன்றவர்களே போற்றித் துதித்த பிருந்தாவன கிருஷ்ணனைத் தாழ்த்திக் குறிப்பிடுவதற்கு நாம் யார்?

கீதையில் பகவான் ஆச்சாரியனாக வந்து வேதாந்த சாஸ்திரத்தை உபதேசம் செய்து, நாம் பக்தியும் ஞானமும் அடை வதற்குப் படிப்ப டியாக எந்த எந்த ஆன்மீக சாதனைகள் செய்ய வேண் டும் என்று எடுத்துக்காட்டியிருக்கிறார். கீதையில் விசுவரூப தரிசனத்தைக் காட்டிய பிறகு அவரே, "வேறு நாட்டமில்லாத தீவிர பக் தியினால்தான் என் உண்மைச் சொரூபத்தை அறியவும், உள்ள படி காணவும், என்னை அடை யவும் முடியும்" என்று கூறியிருக்கிறார்.

பிருந்தாவன கிருஷ்ணனைப் புரிந்து கொள் வது மிகவும் கடினம். பிருந்தாவன கிருஷ்ண னோடு ஒப்பிடும் போது, பகவத்கீதை கிருஷ் ணனைப் புரிந்து கொள்வது சுலபம் என்றே சொல்ல வேண்டும். விதிவிலக்காக உள்ள வெகு



சிலரைத் தவிர, மிகப்பெரும்பாலானவர்களால் பிருந்தாவன கிருஷ்ணனைப் புரிந்து கொள்ளவே முடியாது. எனவே பெரும்பாலானவர்கள் பகவத் கீதை கிருஷ்ணனைப் புரிந்து கொண்டாலே போது மானது.

சுவாமி கமலாத்மானந்தர்

## சாம்பவி ஆகும் அம்பிகை!

சங்கரன், சம்பு ஆகியவை சிவபெரு மானுக்கு உரிய பெயர்கள். சங்கரன் மனைவி என்ற பொருளில் சங்கரி என்றும், சம்புவின் மனைவி என்ற பொருளில் சாம்பவி என்றும் இறைவி அழைக்கப் படுகிறாள்.





# சரஸ்வதி

## என்னும் புனித நதி

**இந்த ஆறு இப்போது பௌதிக உருவில் காணப்படவில்லையென்றாலும் இந்த சரஸ்வதி ஆறு பற்றி பண்டைய இந்திய நூல்களிலும் வேதங்களிலும் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஹரியானாவில் இதன் ஒரு பகுதியாக காக்கார் என்ற ஆறு ஓடுகிறது. சிந்து. சரஸ்வதி ஆற்றுமுறைகளில் சரஸ்வதி ஏழாவது ஆறு என்று வரலாறு கூறுகிறது. அதனால் கிழக்கில் சரஸ்வதியும் மேற்கில் சிந்து நதியும் பாய்கின்ற இடைப்பட்ட பகுதி சப்தசிந்து என்றழைக்கப்படுகிறது.**

வெப்பநிலையின் மாற்றத்தாலும் பூமிக்கு அடியிலுள்ள பாறை அடுக்குகளின் இயக்கத்தாலும் பல ஆறுகள் வேறு இடங்களுக்கு நகர்ந்துள்ளன. பல ஆறுகள் காணாமல் போயிருக்கின்றன. மேலும் மேலும் மண் படிவதால் சிலவற்றைக் காணவில்லை. ஆனாலும் அவை விட்டுச்சென்ற தடயங்களைக் கொண்டு அவற்றின் வழித்தடத்தை ஆராய்வதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. இந்தியாவில் சரஸ்வதி ஆறு பற்றிய சுவாரசியமான ஆய்வு சமீப காலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மண்ணியல் நீர்வள இயல், தொல்பொருள் இயல், புவியியல் ஆகிய தடயங்களோடு செயற்கைகோள் ஆய்வுகளும் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

இந்த ஆற்றின் மர்மம் நிறைந்த வரலாறு வசீகரமாக உள்ளது. பேரூழிக்காலத்தில் இமய மலையின் தண்ணீர் உறைந்து பனிக்கட்டியாயிற்று. ஆறுகளுக்குப் பதிலாக க்ளேசியர் அல்லது பனிக் கட்டி ஆறுகளே எஞ்சியிருந்தன. சுற்றுச்சூழல் வெப்பமடைந்தவுடன் கிளேசியர்கள் உடையத் தொடங்கின. அங்கு சேர்ந்திருந்த உறைந்த நீர் வெடித்துச் சிதறி வெள்ளமாகப் பெருகத் தொடங் கியது.

மலைக்கு அருகிலுள்ள வளமான சமவெளிகள் வெள்ளத்தால்அடித்துச்செல்லப்பட்டன. ரிக்வேதத்தில் கிளேசியர்கள் உருகுவது சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி பெருக்கெடுத்தோடிய ஆற்று வெள்ளம் ரிக்வேதத்தில் கிழக்கு மேற்காக சப்த சிந்து என்றழைக்கப்பட்டது. அந்த 7 ஆறுகளாவன சரஸ்வதி, சத்ரு (சட்லஜ்), விபாஸா (பியாஸ்), அசிக்னி (சீகாப்), பரோஸ்னி (ரவி), விதஸ்தர (ஜீலம்), தவிர மேற்கில் சிந்து (இண்டஸ்). இவற்றுள் சரஸ்வதியும் சிந்துவும் மிகப்பெரியவை. மலையில்தொடங்கி கடல் வரை



பெருக்கெடுத்து ஓடியவை.

இமயமலையில் கைலாய மலைக்கு மேற்கில் அமில தீர்த்தத்தில் சரஸ்வதி ஆறு உற்பத்தியாயிற்று. தெற்கு நோக்கிச் சென்று மானசரோவரை அடைகிறது. அங்கிருந்து மேற்கு நோக்கித் திரும்புகிறது. இப்போதும் மானா கணவாய்க்குத் தெற்கில் ஓர் ஆறு ஓடி மானா கிராமத்திற்கு 3 கி.மீ. தொலைவில் அல்கானந்தா ஆறுடன் இணைகிறது.

மலையின் அடிவாரத்தில் ஆதி பத்ரி, பவானிபூர், பல்சாபூர் வழியாக இறங்கி சமவெளியை அடைந்து தென்மேற்காகத் திரும்பி பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான், குஜராத் வழியாக ஓடி ராண் ஆஃகட்ச் என்னும் கட்ச் வளைகுடாவில் அரபிக்கடலில் சேர்ந்தது என்பது சொல்லப்படுகிறது. இந்த நீண்ட பயணத்தில் சரஸ்வதிக்கு மூன்று உபநிதிகள் கைலாச மலையில் உற்பத்தியாகும் (சட்லெஜ்) சிவாலிக் குன்றுகளில் தோன்றும் த்ருஷத்வதி மற்றும் பழைய யமுனை இத்துடன் இணைகின்றன. அவை ஒன்று சேர்ந்து இப்போது காக்கர் என அழைக்கப்படும் ஆறாக இணைந்தது. ஆனால் இவ்விவரங்கள் பல வரலாற்று ஆசிரியர்கள், புவியியலாளர்களால் மறுக்கப்படுகின்றன. பல ஏற்கப்படுவதற்கும், ஓடிய காலத்தில் இதனோடு தொடர்புடைய மனித நாகரிகங்கள் பற்றியும் பல்வேறு கருத்துகள் சொல்லப்படுகின்றன. எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ள கருத்து இந்த ஆற்றைப் பற்றி மேலும் மேலும் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்பது மட்டுமே.

இந்த ஆறு மிகக் குறைந்த காலத்தில் மறைந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. கி.மு.5000 முதல் கி.மு. 3000 ஆண்டுகளுக்குள்ளாக இது காணாமல் போயிற்று. சிர்மூர் பகுதியில் சிவாலிக்குன்றுகளில் ஏற்பட்ட நிலநடுக்கம், பூமியில் அடியிலுள்ள அடுக்குகளின் இடமாற்றம் இவை காரணமாக (tectonic event) இது மறைந்திருக்கலாம். பூமியின் கீழுள்ள அடி மடிப்புகளில் இடமாற்றம் ஏற்பட்டதால் மிகப் பெரிய அளவில் நிலச்சரிவுகளும் பனிப் பொழிவுகளும் ஏற்பட்டன. இவை சுமார் 17 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் சிவா லிக் பகுதி முழுவதிலும் பாகிஸ்தானில் போட்வளிலிருந்து இந்தியாவில் அஸ்ஸாம் வரை ஏற்பட்டது. இமயமலை உயர்ந்ததோடு இந்த நிகழ்வுகளுக்குத் தொடர்பு உண்டு. இது தொடர்ச்சியாக நடந்துகொண்டே இருந்தது. இந்த நிகழ்வுகள் கிளேசியரோடு இந்த நதிக்கு இருந்த தொடர்பைத் துண்டித் திருக்கலாம். அதனால் அங்கிருந்து பனி உருகி வரும் நீர் இந்த ஆற்றுக்குக் கிடைக்காமல் போயி ருக்கலாம். அதனால் ஜீவநதியாக இல்லாமல் மழையை நம்பும் ஆறாக இது மாறியிருக்கலாம். அதன் உபநதிகளோடு இருக்கும் இணைப்பு துண் டிக்கப்பட்டதால் தொடர்பில்லாத ஏரிகளாகவும், குளங்களாகவும் மாறின. இறுதியாக வரண்ட ஆற்றுப்படுகையாக அது மாறிவிட்டது. ஆகையால் சரஸ்வதி ஆறு காணாமல் போகவில்லை. சில சில இடங்களில் வரண்டு விட்டது.

சரஸ்வதி ஆறு மிகப் பழமையானது. ரிக்வேத காலத்து ஆறு. புராணங்களில் புகழ்பெறும் ஆறு. ரிக்வேதத்தின் நதிஸ்துதி சுலோகம் கிழக்கில் யமுனைக்கும் மேற்கில் சட்லெஜீக்கும் இடையில் ஓடும் சரஸ்வதியைப் பற்றி குறிக்கிறது. அதற்குப் பின் வந்த மகாபாரதம் போன்றவை பாலைவனத்தில் வரண்டுபோன சரஸ்வதி ஆறு பற்றி குறிப்பிடுகின்றன.




இக்காலத்தில் ஒரு சிறிய சரஸ்வதி ஆறு (சர்கதி) என்பது காக்கர் ஆறுடன் கலக்கிறது. இந்த ஆற்றின் உருவில்தான் முதலில் இறைவி சரஸ்வதி உருவகப்படுத்தப்பட்டாள். பிற் காலத்தில் ஆறு என்பதாக இல்லாமல் சரஸ்வதி தனி அடையாளத்தையும் உருவத்தையும் பெற்று கல்விக்கு இறைவியாக வணங்கப்படுகிறாள்.

**டொக்டர் லக்ஷ்மி விஸ்வநாதன்**



# அமராவதியில் நடந்த அபிஷேகம்





பரிவார தேவதைகள் கூறியது உண்மைதான். அம்பிகையின் உடல் முழுவதும் வெம்மைக் கொப்பளங்கள்.
தாயே! என்ன, தங்கள் திருமேனியில் இந்தக் கோலம்! இது என்ன கொப்புளங்கள்!
துர்வாசரே! சற்று முன் பார்த்து ரசித்தீரே, இந்திரனின் பூஜை, அதன் விளைவு!
இந்திரன் செய்த கோலகலப் பூஜையினாலா?
அமரர் தலைவன் தன் செல்வச் செருக்கைப் புலப்படுத்த வேண்டும் என்று ஆடம்பரமாகச் செய்தான் அல்லவா பூஜை? என் மீது அவன் அர்ச்சித்த அத்தனை மலர்களும் இந்தக் கொப்புளங்களாக ஆகியிருக்கின்றன.
தாயே! இதற்கு எதுதான் மருந்து!
பூலோகத்தில் காசி க்ஷேத்திரத்திலுள்ள காசி விசாலாட்சி ஆலயத்தில் தான் இதற்கு வைத்தியர் இருக்கிறார்.
துர்வாசர் அந்த கணமே அந்த வைத்தியரை அழைத்து வரப் பூலோகம் விரைந்தார். காசியிலுள்ள காசி விசாலாட்சி ஆலயத்தை அடைந்ததும்.
எங்கே, ஒரு வைத்தியரையும் காணோமே?
தேடியப் பிறகு அம்பிகையின் சந்நிதியில் வயதான ஓர் ஏழை கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தான்.
ஐயா. இங்கே யாராவது வைத்தியர் இருக்கிறாரா?


வைத்தியரா? யாருமில்லையே! ஐயா, தாங்கள் யார்?
நான் யார் என்பது முக்கியமல்ல. வைத்தியரை உனக்குத் தெரியுமா தெரியாதா?
தனக்குத் தெரியாது என்று ஏழை சொன்னதும் துர்வாசர் கோவிலில் இன்னும் பல இடங்களில் தேடிவிட்டு ஏமாற்றத்துடன் அம்பிகையின் ஸ்ரீநகரத்துக்குப் புறப்பட்டார்.
ஸ்ரீபரத்தில் அம்பிகையின் சலங் கையொலி கேட்டுத் துர்வாசர் திகைக்கிறார்.
தேவி! தங்கள் உடம்பு குணமாகி விட்டதா? கொப்புளம் ஒன்று கூடக் காணோம்! உடலெல் லாம் ரணமாயிருந்த நீங்கள் குணமாகி நடனமிடத் தொடங்கிவிட்டீர்களே!
வைத்தியரை நீர் பார்க்கவில்லையே?
அங்கே யாருமே வைத்தியர் இல்லையே. சந்நிதி முழுவதும் தேடினேன். யாரோ ஒருவன் அழுது கொண்டிருந்தான். அவனைக் கூட விசாரித்தேன் பயனில்லை.
என் சந்நிதானத்தில் யாரோ ஒருத்தன் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தான் என்றீர்களே, அவன்தான் அந்த வைத்தியர்! பக்தனான அந்த ஏழை தன் அன்புக் கண்ணீரி னால் என்னை அபிஷேகம் செய்தான். உடனே என் உடம்பிலிருந்த கொப்புளங்கள் போய்விட்டன.
அன்பினாலும்பக்தியினாலும்உள்ளம்கசிந்து விடுகிற கண்ணீர் அம்பிகையின் திருமேனி யையும் திருவுள்ளத்தையும் குளிர்விக்கக் கூடியது என்பது துர்வாசருக்கு விளங்கியது.
முற்றும்

# வியாபாரம் — தொழில் பெருக

# ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்!

**ஸ்ரீ** பகவத் நாமத்தை உச்சரித்து வருபவர்கள் எல்லா நன்மைகளையும் பெறு வார்கள் என்பது நம்பிக்கை.

பகவானுடைய கல்யாண குணங்களை விளக்குவது ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமமாகும். பீஷ்மர், தர்ம புத்திரருக்கு இந்த ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலுள்ள மந்திரங்கள் அனைத் தையும் உபதேசித்தருளியதாக மஹாபாரதத்தில் அநுசாஸதிக பர்வதத்தில் கூறப்படுகிறது.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலுள்ள அரிய மந்திரங்கள் அனைத்தும் எல்லா நலன்களை யும் தருவவையாகும்.

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் இடம் பெற்றுள்ள அரிய மந்திரங்கள் அனைத்தையும் பக்தியுடன் உச்சரித்து வருபவர்கள் எல்லா நன்மைகளையும் விரும்பியவை அனைத்தையும் அடைந்து சிறக்கலாம் என்று ஆன்றோர் கூறியுள்ளனர். அத்தனை சாஸ்தி ரங்களும் வியந்து போற்றிப் புகழ்ந்து வரும் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை தினமும் உச்சரித்து வரலாம் என்று இன்றைய சாஸ்திர வல்லுநர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

பொருள் பெற வேண்டும். அதாவது செல் வம் நிறைய அளவில் சேர்க்க வேண்டும் என்று விரும்புவர்கள், வியாபாரம் அல்லது தொழில் இவைகளில் ஏதேனும் ஒன்றில் ஈடு பட வேண்டும். மாத ஊதியம் என்னதான் வந்தாலும் அதில் மிச்சம் பிடித்து அதன் மூலம் முன்னேறுவது என்பது இயலாத ஒன்று. எனவே, வியாபாரம் அல்லது தொழில் இவை களில் ஈடுபட்டேயாக வேண்டும்.

"அர்த்தோ நர்த்தோ மஹா கோஸோ

மஹா போகோ மஹா தந"

இந்த மந்திரத்தை உச்சரித்து காலையில் அல்லது மாலையில் குளித்து முடித்து, நன்கு துவைத்து உலர்த்திய ஆடையை உடுத்தி, பக வானுக்கு பாயசம், பழம், கற்கண்டு இவை களில் ஏதாவது ஒன்றைப் படைத்து வணங்கி வர வேண்டும்.

தினந்தோறும் காலையிலும், மாலையிலும் நூற்றெட்டு தடவை இந்த மந்திரத்தை உச்ச ரித்து வரவேண்டும். எந்தவிதமான பலனை எதிர் பார்க்கிறார்களோ, அதை மனத்தில் எண்ணி இந்த மந்திரத்தை உச்சரித்து வர வேண்டும்.

◀◀ ஆபஸ்தம்பன்





# ஸ்ரீ ஸ்ரீனிவாசப்பெருமாள் 108 போற்றிகள்

ஓம் அப்பா போற்றி
ஓம் அறமே போற்றி
ஓம் அருளே போற்றி
ஓம் அச்சுதா போற்றி
ஓம் அரவ சயனா போற்றி
ஓம் அற்புத லீலா போற்றி
ஓம் ஆறுமுகனின் அம்மான் போற்றி
ஓம் அனுமந்தன் தேவே போற்றி
ஓம் ஆதியே அனாதி போற்றி
ஓம் ஆழ்வார்கள் தொழுவாய் போற்றி
ஓம் ஆதி மூலனே போற்றி
ஓம் ஆபத்துச் சகாயா போற்றி
ஓம் அனைவருக்கும் அருள்வாய் போற்றி
ஓம் ஆனந்த மூர்த்தியே போற்றி
ஓம் உமையம்மை அண்ணா போற்றி
ஓம் உலகெலாம் காப்பாய் போற்றி
ஓம் உத்தமர் தொழுவாய் போற்றி
ஓம் உம்பருக்கருள்வாய் போற்றி
ஓம் எங்குமே நிறைந்தாய் போற்றி
ஓம் எண்குண சீலா போற்றி
ஓம் ஏழைப்பங்காளா போற்றி
ஓம் எழில்நிற வண்ணா போற்றி
ஓம் எழில்மிகு தேவே போற்றி
ஓம் கலியுக வரதா போற்றி
ஓம் கண்கண்ட தேவே போற்றி
ஓம் கருடவா கனனே போற்றி
ஓம் கல்யாண மூர்த்தி போற்றி
ஓம் காமரு தேவே போற்றி
ஓம் காலனைத் தவிர்ப்பாய் போற்றி
ஓம் கோக்களைக்காத்தாய் போற்றி
ஓம் கோவிந்தா முகுந்தா போற்றி
ஓம் சர்வலோகேசா போற்றி
ஓம் சாந்தகுன சீலா போற்றி
ஓம் சீனிவாசா போற்றி
ஓம் சிங்காரமூர்த்தி போற்றி

ஓம் சிக்கலை யறுப்பாய் போற்றி
ஓம் சிவபிரான் மகிழ்வாய் போற்றி
ஓம் தவசிகள் தொழுவாய் போற்றி
ஓம் தரணியைக் காப்பாய் போற்றி
ஓம் திருமகள் மணாளா போற்றி
ஓம் திருமேனி உடையாய் போற்றி
ஓம் திருவேங்கடவா போற்றி
ஓம் திருமலைக் கொழுந்தே போற்றி
ஓம் திருத்துழாய் அணிவாய் போற்றி
ஓம் தீந்தமிழ் அருள்வாய் போற்றி
ஓம் கூடவம் தளித்தாய் போற்றி
ஓம் நந்தகோபாலா போற்றி
ஓம் நான்முகன் பிதாவே போற்றி
ஓம் நாரதர் துதிப்பாய் போற்றி
ஓம் நவமணி தரிப்பாய் போற்றி
ஓம் நரசிம்ம தேவே போற்றி
ஓம் நான்மறை தொழுவாய் போற்றி
ஓம் பாற்கடல் சிடந்தாய் போற்றி
ஓம் பாவலர் பணிவாய் போற்றி
ஓம் தசாவ தாரா போற்றி
ஓம் தயாநிதி ராமா போற்றி
ஓம் தந்தைசொல் காத்தாய் போற்றி
ஓம் தவக்கோலம் பூண்டாய் போற்றி
ஓம் பட்டத்தைத் துறந்தா போற்றி
ஓம் பரதனுக் கீந்தாய் போற்றி
ஓம் பாண்டவர் துணைவா போற்றி
ஓம் பரந்தாமா கண்ணா போற்றி
ஓம் பாஞ்சாலி மானம் காத்த
பார்புகழ் தேவே போற்றி
ஓம் புண்ணிய மூர்த்தி போற்றி
ஓம் புலவர்கள் புகழ்வாய் போற்றி
ஓம் வாமன வரதா போற்றி
ஓம் உலகினை அளந்தாய் போற்றி
ஓம் பிரகலாதன் பணிவாய் போற்றி
ஓம் பரகதி அருள்வாய் போற்றி


ஓம் தருவனும் தொழுவாய் போற்றி
ஓம் சபரியின் கனியே போற்றி
ஓம் துருவநிலை தந்தாய் போற்றி
ஓம் நற்கதி தந்தாய் போற்றி
ஓம் வையகம் புகழ்வாய் போற்றி
ஓம் வைகுண்ட வாசா போற்றி
ஓம் முழுமதி வதனா போற்றி
ஓம் மும்மலம் அறுப்பாய் போற்றி
ஓம் கமலக் கண்ணா போற்றி
ஓம் கலைஞான மருள்வாய் போற்றி
ஓம் கஸ்தூரி திலகா போற்றி
ஓம் பவளம்போல் வாயா போற்றி
ஓம் பவப்பிணி ஒழிப்பாய் போற்றி
ஓம் நான்கு பயந்தாய் போற்றி
ஓம் நற்கதி அருள்வாய் போற்றி
ஓம் சங்குசக் கரனே போற்றி
ஓம் சன்மார்க்க மருள்வாய் போற்றி
ஓம் கோபிகள் லோலா போற்றி
ஓம் கோபமும் தணிப்பாய் போற்றி
ஓம் வேணு கோபாலா போற்றி
ஓம் வேட்கையைத் தணிப்பாய் போற்றி
ஓம் புருடோத்தமனே போற்றி
ஓம் பொன்புகழ் அருள்வாய் போற்றி
ஓம் மாயா வினோதா போற்றி
ஓம் மனநிலை தருவாய் போற்றி
ஓம் விஜயராகவனே போற்றி
ஓம் வினையெலாம் ஒழிப்பாய் போற்றி
ஓம் பதும நாயகனே போற்றி
ஓம் பதமலர் தருவாய் போற்றி
ஓம் பார்த்தசாரதியே போற்றி
ஓம் பார்வேந்தர் தொழுவாய் போற்றி
ஓம் கரிவாத ராஜா போற்றி
ஓம் கனிவுடன் காப்பாய் போற்றி
ஓம் சுந்தர ராஜா போற்றி
ஓம் சுகமெலாம் தருவாய் போற்றி
ஓம் சுந்தர ராஜா போற்றி
ஓம் சுகமெலாம் தருவாய் போற்றி
ஓம் அனைத்துமே ஆனாய் போற்றி
ஓம் அரிஅரி நமோ நாராயணா போற்றி

## இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

சனிக்கிழமைகளில் பைரவருக்கு தேசிகாய் மாலை இட்டு நல்லெண்ணெய் தீபம் போடவும். மஞ்சள் தூவி தட்சணாமூர்த்தியை வணங்கி வர எல்லாம் சிறப்பான பலனாக உங்களை வந்து அடையும்.



**இம்மாதம் அதிர்ஷ்ட கிழமைகள் : ஞாயிறு, திங்கள், வியாழன்,**



# மீனம்

### துர்முகி ஆண்டு புரட்டாதி மாதம் 17.09.2016 முதல் 16.10.2016

தெய்வ அனுகூலமும், ஆன்மீக நம்பிக்கையும் கொண்டு விளங்கும் மீன ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வையும் தெய்வ பலமும் கொண்டு விளங்குவது உங்களின் முயற்சிகளுக்கும் செயல்பாடுகளுக்கும் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். சிறந்த ஆராய்ச்சி யாளர்களுக்கு புதிய கண்டுபிடிப்புகள் வெற்றியை தரும்.

**பணியாளர்களுக்கு**

பணியாளர்களின் விருப்பம் நிறைவேறும். எதிலும் நீங்கள் எண்ணிய செயல்கள் முன்னேற்றம் தரும். எந்த தொழிலாக இருந்தாலும் அதில் சிறந்து விளங்குவீர்கள். கருத்து வேறுபாடு களைந்து ஒற்றுமையுடன் செயல்படுவீர்கள். உறவுகள் மேலும் பலப்படும். பொருளாதார வளர்ச்சி நன்றாக இருக்கும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொதுவாழ்வில் உங்களின் பங்கு சிறப்பாகவும், பயனுள்ளதாகவும் அமையும். ஒரு சிலருக்கு கோவில் திருப்பணி செய்து விரைவில் முடிக்கும் வாய்ப்புகள் அமையும். அரசாங்க உதவிகளும் பொதுமக்களின் ஆதரவும் உங்களை மேலும் ஊக்கப்படுத்தும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**வியாபாரிகளுக்கு**

தொழில் ஸ்தானாதிபதி பார்வை உங்கள் மீது படுவதும் லாபஸ்தானத்தை பார்வை இடுவதும் தொழிலில் இருந்து வந்த சிரமம் குறையும். திறம்பட செயல்பட்டு வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியை பெறுவீர்கள். மருத்துவ உபகரண விற்பனை கூடுதல் லாபம் பெற்று தரும். பொருளாதாரம் சிறப்பாக அமையும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையில் படிப்படியாக நல்ல வாய்ப்புகளையும் கலையில் பெயரும், புகழும் அடைவார்கள். நடன இசை கலை மேலும் வளர்ச்சியையும் பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள். வங்கி மூலம் தொழில் வளர்ச்சிக்கு பண உதவி கிடைக்கும்.

**பெண்களுக்கு**

பெண்களின் திருமண வாய்ப்புகள் விரைவில் நடக்கும். மருத்துவ பெண்களின் வளர்ச்சிகள் தொழிலிலும், வேலை வாய்ப்புகளில் முன்னேற்றம் உண்டாகும். நினைத்ததை சாதித்தும் கொள்வீர்கள்.

**மாணவர்களுக்கு**

கல்வியையும் அறிவு ஆற்றலையும் பெற்று சிறந்து விளங்குவீர்கள். மேலும் ஆசிரியர்களின் உதவியையும் போதனையும் உங்களின் கல்விக்கு உதவியாக அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

02.10.2016 ஞாயிறு பகல் 01.44 முதல் 04.10.2016 செவ்வாய் இரவு 01.23 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

**பூரட்டாதி 4ஆம் பாதம்**

கனவுகளை நிறைவேற்றி கொள்ளும் காலமாக அமையும். வெற்றியை தேடி பயணம் செய்வீர்கள். குடும்பத்தில் சுபகாரியம் இனிதாக நிறைவேறும். பொருளாதார நிலை மேம்படும்.

**உத்திரட்டாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**


செய்யும் தொழிலில் வளர்ச்சியை பெறுவீர்கள். கடன் பிரச்சினை படிப்படியாக முடிவுக்கு வரும். சுபகாரியம் இனிதாக நடக்கும். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

**ரேவதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

உடல் நலனில் முன்னேற்றம் உண்டாகும். கருத்துள்ள தகவல் உங்களுக்கு நல்ல பலனை தரும். விரும்பிய வாழ்க்கையை தேர்வு செய்து கொள்வீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சியும் ஏற்றமும் பெறுவீர்கள்.

அதிர்ஷ்ட நிறங்கள்: மஞ்சள், வெண்மை, நீலம்
அதிர்ஷ்ட திசைகள் : வடக்கு, வடகிழக்கு, தென்மேற்கு


கணித்தவர் வாடிப்பட்டி
R. ஆனந்தன்
91-9789341554

# விமர்சன சிற்பிகள்

**ஆ.குணசுந்தரி**
**பண்டாரவளை**

சோதிடகேசரி ஆன்மீக இதழை நான் தொடர்ந்து வாசித்து வருகின்றேன். கடந்த சில மாதங்களாக வெளியிடப்பட்டு வரும் கீதையின் சாரங்கள் பற்றியதான கட்டுரைகள் மிகத் தெளிவாகவும் அற்புதமான கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் இருக்கின்றன. தொடர்ந்து வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

**ஆர்.ராஜலெட்சுமி**
**மட்டக்களப்பு**

சோதிடகேசரி ஆன்மீக மாத இதழில் பக்கங்களுக்கிடையே பிரசுரிக்கப்படும் பெட்டிச் செய்திகள் சிறந்த ஆன்மீக கருத்துக்களை வெளிக்கொணர்வதாக அமைகின்றன. தொடர்ந்து வெளியிடுமாறு அன்புடன் வேண்டுகிறோம். நன்றி!

**மு. விஜயபாஸ்கர்**
**வெள்ளவத்தை**

சோதிடகேசரியில் தற்போது பிரசுரிக்கப்பட்டு வரும் தெய்வங்களுக்கான 108 போற்றிகள் எம்முடைய குடும்பங்களுக்கு பிரார்த்தனை நேரங்களில் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. இவ்வகையில் உங்களுடைய சேவை பாராட்டுதற்குரியதாகும். நன்றி!

**சா.சந்தானகிருஷ்ணன்சா**
**தெஹிவளை**

சோதிடகேசரி ஆன்மீக மாத சஞ்சிகையில் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்டுவரும் பன்னிரண்டு ராசிகளுக்கான பலன்கள் குடும்பம் முழுவதற்கும் பயன் தர தக்கனவாக உள்ளன. தொடரட்டும் உங்களின் ஆன்மீக சேவை. நன்றி!

**வா.தர்மநாதன்**
**யாழ்ப்பாணம்**

சோதிடகேசரி மாத இதழில் பிரசுரிக்கப்பட்டு வரும் சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்களின் கருத்தாழம் மிக்க கட்டுரைகள் இளைஞர்களுக்கு எழுச்சியூட்டுவதாக அமைகின்றது. தொடர்ந்து பிரசுரிக்குமாறு வேண்டுகிறேன்.

**கா.ராஜராஜேஸ்வரி**
**கொழும்பு**

சோதிடகேசரி மாத இதழில் கடந்த பல மாதங்களாக பிரசுரிக்கப்பட்டு வரும் பழங்கால கோயில் சிற்பங்கள் பற்றியதான கட்டுரைகள் மிகவும் அற்புதம். ஆலயங்களில் உள்ள சிற்பங்களை நேரில் சென்று பார்த்து ரசித்ததை போன்ற உணர்வினை எமக்கு கட்டுரைகள் வழங்குகின்றன. நன்றி!

எந்நேரமும் உங்கள் மனம் மலர்ந்திட எல்லையற்ற
நறுமணத்துடன் என்றும் உங்களுடன்...

# தபஷ்யா ஊதுபத்திகள்

தபசியா பத்திகள் நடாத்தும் போட்டிகளில் கலந்து கொண்டு

**நீங்களும் வெற்றியாளர் ஆகுங்கள்...**




எண்ணற்ற தபஷ்யா பத்தி பெக்கட்டுகளை சேகரித்து
காத்திருங்கள் எதிர்பார்த்திருங்கள்

## நீங்களும் அதிஷ்டசாலியாகுங்கள்

## 011 244 9255 / 011 243 9334



ஸ்ரீ ராம ஜெயம்

# 52 வருட காலமாக என்னால் நிரூபித்து கொண்டிருக்கும் மலையாள மாந்திரிக சக்தியின் வேகம்



## உலக மக்களில் என்னை தெரியாதவர் யாருமில்லை

## உண்மைக்கு எடுத்தக்காட்டு எமது நிறுவனமே

ஒரு கூரையின் கீழ் 52 வருட காலமாக மலையாள யந்திர மந்திர சக்திகளை உண்மை வெளிச்சத்துடன் காட்டும் ஒரே ஒரு நிறுவனம் இதுவே...
என் ஆராய்ச்சியில் எழுதப்பட்ட என் புத்தகங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

- வாழ்வில் நிம்மதியுடன் வாழ -250ரூபா
- சுலபமான முறையில் திருமண பொருத்தங்கள் தெரிந்துக் கொள்ள -300ரூபா
- இல்லங்களில் இனிதேவாழ இதுஒரு வழிகாட்டி நூல் வாஸ்த்து முறைப்படி -250ரூபா
- 27 நட்சத்திரங்களுக்குரிய குணபாவமும் ஆயுளும் - 200ரூபா
- சக்தியின் வடிவம் -250ரூபா
- ஜாதகங்களின் இரகசியங்கள் -600ரூபா
- வியாபாரவிருத்திக்கான மாணிக்கக் கல்-300ரூபா
- நஷ்டத்திலிருந்து மீட்சி பெற அதிஷ்டக்கல் புத்தகம் -300ரூபா
- விரைவில் திருமணம் நிறைவேற அதிஷ்டக்கல் -300ரூபா
- மனம் அமைதிப் பெற அதிஷ்டக்கல் -300ரூபா
- வாழ்வில் வெற்றிப் பெற அதிஷ்டக்கல் -300ரூபா
- நீரிழிவு நோயிலிருந்து விடுபட அதிஷ்டக்கல் -300ரூபா
- மூட்டு வாதம் தீர அதிஷ்டக்கல் -300ரூபா
- மன அழுத்தத்திலிருந்து விடுபட அதிஷ்டக்கல் -300ரூபா
- பைத்தியம் ,சித்த சுவாதீனம் தீர அதிஷ்டக்கல் -300ரூபா
- தூக்கமின்மையை நீக்கி நிம்மதியான நித்திரை கொள்ள அதிஷ்டக்கல் -300 ரூபா
- எல்லாவித காய்ச்சலிலிருந்தும் விடுபட அதிஷ்டக்கல் -300ரூபா
- தொழில் வாய்ப்பு கிடைக்க அதிஷ்டக்கல் -300ரூபா
- சித்திரம் மற்றும் கதை, கவிதை எழுதுபவர் வெற்றி பெற அதிஷ்டக்கல் -300ரூபா
- பரீட்சையில் சித்தி பெற அதிஷ்டக்கல் -300ரூபா
- ஒருவரைப் பற்றி ஒருவர் தெரிந்துக் கொள்ள - 150ரூபா
- ஜோதிட இரகசிய புத்தகம் - 150ரூபா



ஜோதிட மாந்திரிக தத்துவ ஞானி
சொல்லின் செல்வன் பேராசிரியர்
உலகப்புகழ் ஞான சீல, அருள் சீல,
ஆற்றல் சீல, மஹா ஞான தவ
அருள் பேராசிரியர் தேசபந்து
REV, P.K. சாமி (J.D.G.A.N)JP

**தபால் செலவு ரூபா 150/-**

காலம் காலமாக உங்களுடன் நெருக்கமாக பழகிவிட்டு, பிரிந்து சென்ற காதலன்/காதலியை மீண்டும் பெற, பிரிந்த உறவுகள் ஒன்றுசேர, செய்வினை கோளாறா வீட்டில் பயந்து எழுதல் கடும் சிந்தனை இரவில் பயந்து எழுதல் சொல்லிக்கொள்ள முடியாத நோய்கள் மாதவிலக்கு தொல்லை வயிற்றுவலி அதிஷ்டம் வாகனம் பெற தடைசெய்த வியாபாரத்தை முன்னுக்கு கொண்டுவர பங்காளி துரோகம் அகல மனநிம்மதியுடன் அன்றாட கருமம் செய்ய, செல்வக் குழந்தைகளைப் பெற்றெடுக்க சரியான பரிகாரம் மூலம் செவ்வாய்த் தோசம் ராகு தோசம் இவைகளை திறம்பட செய்து திருமணம் நிறைவேற குடிபோதை முற்றாக ஒழிக்க தலைமுடி உதிர்வைத் தடுக்க இன்னும் உங்களது பல குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் என்னை சந்திக்கவும். அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை நடந்தது, நடக்கப்போவது, நடக்க இருப்பது, காதல் வெளிநாட்டுப் பயணம், எதிர்பார்க்கும் விடயங்கள் அனைத்தும் சரிவரும் திகதியை அருள் ஞானத்துடன் கூற முடியும்.

வீரகேசரியில் 47 வருடம் நாம் மட்டுமே தொடர்ச்சியாக விளம்பரம் செய்து வருகின்றோம்.
நம்பிக்கையோடு வாருங்கள் நல்லது நடக்கும்.
தொலைபேசியில் ஆடர் கொடுப்பவர்களுக்கு கொரியர் மூலமாக பார்சல் அனுப்பி வைக்கப்படும்.

● அரசாங்கத்திற்கு வரி செலுத்தும் ஸ்தாபனம் ● இது ஒரு மதசார்பற்ற சேவை ஸ்தாபனம்
● இரகசியங்கள் எந்த சூழ்நிலையிலும் வெளியிடப்பட மாட்டாது. உறுதி

எமது ஸ்ரீ துர்க்காதேவி கோயிலில் மாத கடைசியில் சுமார் 4 மணித்தியாலம்
அக்கினி குண்டல பூஜையில் உங்கள் குறை நிறைகளை போக்கிக் கொள்ளலாம். அன்றைய தினம் தானதர்மங்களும் உண்டு.
உங்கள் தேவைக்கு கீழ் காணும் தொலைபேசி வரிசை 10ல் ஒரு எண்ணை அழுத்துங்கள்.உங்கள் பிரச்சினை தீரும்.

P.K.Samy Advertising

# ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் மலையாள மாந்திரீக உச்சாட்டபீடம்

**தலைமை காரியாலயம்**
23, மேபீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை கொழும்பு - 13
T.P: 1 011 2342463, 2 011 2342464, 3 0112322189
4 011 2470615 Fax: 5 011 2344831, 6 0112344832
Email : drpksamy23@gmail.com

**தொலைபேசியில் ஆலோசனை பெற**
33, கண்டி ரோட், நுவரெலியா.
T.P: 7 052 2222508, 8 052 2223093
9 052 2235097 J.Ram- 10 0778431761

Airtel மூலம் உங்கள் இராசி பலாபலன்களை இலவசமாக அறிய 2626 தொடர்பு கொண்டு எண் 22 அழுத்தவும்.

இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) பிறைவேட் லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


எந்நேரமும் உங்கள் மனம் மலர்ந்திட எல்லையற்ற
நறுமணத்துடன் என்றும் உங்களுடன்...
தபஷ்யா ஊதுபத்திகள்
தபசியா பத்திகள் நடாத்தும் போட்டிகளில் கலந்து கொண்டு
நீங்களும் வெற்றியாளர் ஆகுங்கள்...
thapasya
Fragrance beyond borders
thapasya
Fragrance beyond borders
thapasya
Fragrance beyond borders
Kasturi
INCENSE STICKS
எண்ணற்ற தபஷ்யா பத்தி பெக்கட்டுகளை சேகரித்து
காத்திருங்கள் எதிர்பார்த்திருங்கள்
நீங்களும் அதிஷ்டசாலியாகுங்கள்
011 244 9255 / 011 243 9334



ஸ்ரீ ராம ஜெயம்

# 52 வருட காலமாக என்னால் நிரூபித்து கொண்டிருக்கும் மலையாள மாந்திரீக சக்தியின் வேகம்



## உலக மக்களில் என்னை தெரியாதவர் யாருமில்லை

## உண்மைக்கு எடுத்தக்காட்டு எமது நிறுவனமே

ஒரு கூரையின் கீழ் 52 வருட காலமாக மலையாள யந்திர மந்திர சக்திகளை உண்மை வெளிச்சத்துடன் காட்டும் ஒரே ஒரு நிறுவனம் இதுவே...
என் ஆராய்ச்சியில் எழுதப்பட்ட என் புத்தகங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

- வாழ்வில் நிம்மதியுடன் வாழ -250ரூபா
- சுலபமான முறையில் திருமண பொருத்தங்கள் தெரிந்துக் கொள்ள -300ரூபா
- இல்லங்களில் இனிதேவாழ இதுஒரு வழிகாட்டி நூல் வாஸ்த்து முறைப்படி -250ரூபா
- 27 நட்சத்திரங்களுக்குரிய குணபாவமும் ஆயுளும் - 200ரூபா
- சக்தியின் வடிவம் -250ரூபா
- ஜாதகங்களின் இரகசியங்கள் -600ரூபா
- வியாபாரவிருத்திக்கான மாணிக்கக் கல்-300ரூபா
- நஷ்டத்திலிருந்து மீட்சி பெற அதிஷ்டக்கல் புத்தகம் -300ரூபா
- விரைவில் திருமணம் நிறைவேற அதிஷ்டக்கல் -300ரூபா
- மனம் அமைதிப் பெற அதிஷ்டக்கல் -300ரூபா
- வாழ்வில் வெற்றிப் பெற அதிஷ்டக்கல் -300ரூபா
- நீரிழிவு நோயிலிருந்து விடுபட அதிஷ்டக்கல் -300ரூபா
- மூட்டு வாதம் தீர அதிஷ்டக்கல் -300ரூபா
- மன அழுத்தத்திலிருந்து விடுபட அதிஷ்டக்கல் -300ரூபா
- பைத்தியம் ,சித்த சுவாதீனம் தீர அதிஷ்டக்கல் -300ரூபா
- தூக்கமின்மையை நீக்கி நிம்மதியான நித்திரை கொள்ள அதிஷ்டக்கல் -300 ரூபா
- எல்லாவித காய்ச்சலிலிருந்தும் விடுபட அதிஷ்டக்கல் -300ரூபா
- தொழில் வாய்ப்பு கிடைக்க அதிஷ்டக்கல் -300ரூபா
- சித்திரம் மற்றும் கதை, கவிதை எழுதுபவர் வெற்றி பெற அதிஷ்டக்கல் -300ரூபா
- பரீட்சையில் சித்தி பெற அதிஷ்டக்கல் -300ரூபா
- ஒருவரைப் பற்றி ஒருவர் தெரிந்துக் கொள்ள - 150ரூபா
- ஜோதிட இரகசிய புத்தகம் - 150ரூபா



ஜோதிட மாந்திரிக தத்துவ ஞானி
சொல்லின் செல்வன் பேராசிரியர்
உலகப்புகழ் ஞான சீல, அருள் சீல,
ஆற்றல் சீல, மஹா ஞான தவ
அருள் பேராசிரியர் தேசபந்து
REV, P.K. சாமி (J.D.G.A.N)JP

## தபால் செலவு ரூபா 150/-

காலம் காலமாக உங்களுடன் நெருக்கமாக பழகிவிட்டு, பிரிந்து சென்ற காதலன்/காதலியை மீண்டும் பெற, பிரிந்த உறவுகள் ஒன்றுசேர, செய்வினை கோளாறா வீட்டில் பயந்து எழுதல் கடும் சிந்தனை இரவில் பயந்து எழுதல் சொல்லிக்கொள்ள முடியாத நோய்கள் மாதவிலக்கு தொல்லை வயிற்றுவலி அதிஷ்டம் வாகனம் பெற தடைசெய்த வியாபாரத்தை முன்னுக்கு கொண்டுவர பங்காளி துரோகம் அகல மனநிம்மதியுடன் அன்றாட கருமம் செய்ய, செல்வக் குழந்தைகளைப் பெற்றெடுக்க சரியான பரிகாரம் மூலம் செவ்வாய்த் தோசம் ராகு தோசம் இவைகளை திறம்பட செய்து திருமணம் நிறைவேற குடிபோதை முற்றாக ஒழிக்க தலைமுடி உதிர்வைத் தடுக்க இன்னும் உங்களது பல குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் என்னை சந்திக்கவும். அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை நடந்தது, நடக்கப்போவது, நடக்க இருப்பது, காதல் வெளிநாட்டுப் பயணம், எதிர்பார்க்கும் விடயங்கள் அனைத்தும் சரிவரும் திகதியை அருள் ஞானத்துடன் கூற முடியும்.

வீரகேசரியில் 47 வருடம் நாம் மட்டுமே தொடர்ச்சியாக விளம்பரம் செய்து வருகின்றோம்.
நம்பிக்கையோடு வாருங்கள் நல்லது நடக்கும்.
தொலைபேசியில் ஆடர் கொடுப்பவர்களுக்கு கொரியர் மூலமாக பார்சல் அனுப்பி வைக்கப்படும்.

● அரசாங்கத்திற்கு வரி செலுத்தும் ஸ்தாபனம் ● இது ஒரு மதசார்பற்ற சேவை ஸ்தாபனம்
● இரகசியங்கள் எந்த சூழ்நிலையிலும் வெளியிடப்பட மாட்டாது. உறுதி

எமது ஸ்ரீ துர்க்காதேவி கோயிலில் மாத கடைசியில் சுமார் 4 மணித்தியாலம்
அக்கினி குண்டல பூஜையில் உங்கள் குறை நிறைகளை போக்கிக் கொள்ளலாம். அன்றைய தினம் தானதர்மங்களும் உண்டு.
உங்கள் தேவைக்கு கீழ் காணும் தொலைபேசி வரிசை 10ல் ஒரு எண்ணை அழுத்துங்கள்.உங்கள் பிரச்சினை தீரும்.

P.K.Samy Advertising

# ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
# மலையாள மாந்திரீக உச்சாட்டபீடம்

தலைமை காரியாலயம்
23, மேபீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை கொழும்பு - 13
T.P: 1 011 2342463, 2 011 2342464, 3 0112322189
4 011 2470615 Fax: 5 011 2344831, 6 0112344832
Email : drpksamy23@gmail.com

தொலைபேசியில் ஆலோசனை பெற
33, கண்டி ரோட், நுவரெலியா.
T.P: 7 052 2222508, 8 052 2223093
9 052 2235097 J.Ram- 10 0778431761

Airtel மூலம் உங்கள் இராசி பலாபலன்களை இலவசமாக அறிய 2626 தொடர்பு கொண்டு எண் 2ஐ அழுத்தவும்.


இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) பிறைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.